மாத இதழ் - September 2011
பருவம் 01
உதயம் 11

# வண்ண வானவில்

වන්න වානවිල් Vanna Vaanavil
30/-



A.R.Rahman
அல்பம்

## பரதத்தின் கதை

## நேர்த்தியாக சாப்பிடுவது எப்படி?


## விழிப்புணர்வற்றவர்களுக்கு சுன்னாகம் வாழ்வகம்

S.Krishkanthan @ ANCL 2011

# VIP Album A.R.Rahman


மனைவியுடன்...














தாயுடன்...








































தந்தை
சேகர்







| | | |
|---|---|---|
| பெயர் | : | அல்லா ராக்கா ரஹ்மான் |
| பிறக்கும்போது | : | ஏ.எஸ்.திலீப்குமார் |
| இஸ்லாத்தை தழுவியது | : | 1989 ஆம் ஆண்டு தன் 23 ஆம் வயதில் |
| பிறந்த திகதி | : | 1967 ஜனவரி 06 |
| தந்தை | : | ஆர்.கே.சேகர் (மலையாள இசையமைப்பாளர்) |
| தாய் | : | கஸ்தூரி சேகர் (இப்போது கரீமா பேகம்) |
| சகோதரிகள் | : | ரெஹானா (காஞ்சனா), தலத் (பாலா), இஸ்ரத் |
| பிறந்தது | : | சென்னை |
| மனைவி பெயர் | : | சாய்ரா பானு |
| திருமணம் | : | 1995 மார்ச் 12 |
| குழந்தைகள் | : | கதீஜா, ரஹிமா, ரூமி. |
| உறவினர்கள் | : | நடிகர் ரஹ்மான் (மைத்துனர்), ஜி.வி.பிரகாஷ் (மருமகன்) |

பட உதவி: S.M.றிஸ்வான்

# கண்டி மன்னன் ராஜசிங்கன் சிறை வைக்கப்பட்டிருந்த இடம்

மணி ஸ்ரீகாந்தன் - வேலூரிலிருந்து ஒரு நேரடி ரிப்போர்ட்

சென்னையிலிருந்து நூற்றி நாற்பது கிலோமீட்டரை பெங்களூர் அதிவேக பாதையின் ஊடாக கடந்தால் வேலூரரை சென்றடையலாம். கடுமையாக வெயில் காயும் இடம் என்பதால் வெயிலூர் தான் வேலூர் ஆனது என்றும் சொல்வார்கள். தங்கக் கோயில், கோட்டை, சி.எம்.சி மருத்துவமனை, மத்திய சிறைச்சாலை என்று வியந்து பார்க்க வேண்டிய இடங்கள் ஏராளம். குறிப்பாக நம் நாட்டில் கண்டியை கடைசியாக ஆட்சி செய்த ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் சிறை வைக்கப்பட்ட சிறைக்கூடம், மன்னரின் கல்லறை அமையப்பட்டுள்ள முத்து மண்டபம் உள்ளிட்ட சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் வேலூரின் சிறப்புகளில் இடம் பெறுகின்றன.



மன்னரின் கொள்ளுப் பேரன் செல்வராஜன் மற்றும் கொள்ளுப் பேத்தி சுந்தராம்பாள்

நம் நாட்டை சேர்ந்தவர்கள் வேலூருக்கு சென்றால் இவ்விரு இடங்களையும் பார்க்கத் தவறுவதில்லை. அன்மையில் சென்னையில் உள்ள நமது இலங்கை துணைத்தூதரகத்தின் தூதரக செயலாளர் அந்தபாங்கொடை உள்ளிட்ட அதிகாரிகள் குழு மன்னரின் கல்லறையை பார்வையிட்டு திரும்பியிருக்கிறது. நம் நாட்டு அதிகாரிகளின் இந்த வருகையை ஒழுங்கு செய்தவர் 'அரண்மனை' வசந்த குமார். இவர் யாழ்ப்பாணம் ஊர்காவற்துறையை சேர்ந்தவர். நம் நாட்டின் பழைய கலைஞர். கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக வேலூரில் வசித்து வரும் இவர் வடாற்காடு மாவட்ட பன்னாட்டு தமிழுறவு மன்ற அமைப் பாளராகவும் சமூக நல தொடர்புமைய இயக்குனராகவும் பணியாற்றி வருகிறார்.

"நம் நாட்டு மன்னரின் கல்லறையில் சில பணிகளை செய்வதற்கு எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகின்றேன். இங்கே கடந்த இருபது ஆண்டுகளாக முத்து மண்டப காப்பாளராக பணியாற்றி வரும் முனியம்மாவுக்கு குறைந்த ஊதியமான நூற்று ஐம்பது ரூபாய் தான் கிடைத்து வந்தது. நான் இவரின் ஊதிய உயர்விற்காக வேலூர் கலக்டரிடம் மனுவொன்றை சமர்ப்பித்ததை அடுத்து அ.தி.மு.க அமைச்சர் விஜய் அன்மையில் முத்து மண்டபத்தை பார்வையிட்டதோடு மண்டப காப்பாளர் முனியம்மாவிற்கு இரண்டாயிரம் ரூபா ஊதிய உயர்வை பெற்று தருவதாக வாக்குறுதி வழங்கியிருக்கிறார். விரைவில் விக்கிரம ராஜசிங்கனின் அறக்கட்டளையை தொடங்கி அதில் கிடைக்கும் நிதியில் வேலூரில் மன்னரின் சிலை அமைக்கும் பணியை தொடங்க இருக்கின்றோம்" என்கிறார் 'அரண்மனை' வசந்தகுமார்.

பண்ணிரெண்டு இதழ்களை கொண்ட தாமரைப்பூவின் நடுவில் முத்து இருப்பது போல காட்சியளிக்கும் முத்து மண்டபம் கலைஞரின் ஆட்சிக்காலத்தில் 1990 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். மன்னர் சிறை வைக்கப்பட்டிருந்த வேலூர் கோட்டை, 16ஆம் நூற்றாண்டில் சின்ன பொம்மி நாயக்கர் என்ற தெலுங்கு நாயக்க மன்னரால் கட்டப்பட்டதாகும். கோட்டையை சுற்றிலும் கருங்கற் சுவர் எழுப்பப்பட்டு கோட்டையை சுற்றிலும் எட்டாயிரம் அடி நீளமான அகழியும் அமைக்கப்பட்டுள்ளது. 20 அடி முதல் 100 அடி வரை ஆழம்கொண்டதாக இந்த அகழி காணப்படுகிறது. பொம்மி நாயக்கருக்கு பிறகு இந்தக்கோட்டை ஆற்காட்டு நவாப்புகளின் வசமானது.



வசந்தகுமார்

முன்னர் கோட்டையில் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த இழுவைப்பாலமே இருந்ததாம். பிறகு 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரால இது கல் பாலமாக மாற்றப்பட்டது. இந்தியாவின் முதல் சிப்பாய் கலகம் 1806 ஆம் ஆண்டில் தொடங்கியதே இந்தக் கோட்டையில் தான் ஆரம்பமானது.

கோட்டை வளாகத்தினுள் அரசு அருங்காட்சியகம் உள்ளது. இதில் கண்டி மன்னன் பாவித்த சில பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இது தவிர மாவட்ட பதிவாளர் திணைக்களம், காவலர் பயிற்சிப்பள்ளி, ஆற்காட்டு நவாப்புகள் கட்டிய பள்ளி வாசல், பிரிட்டிஷ் கால கிறிஸ்தவ தேவாலயம், சின்ன பொம்மி நாயக்கர் கட்டிய பிரமாண்டமான ஜலகண்டேஸ்வரர் திருக்கோயில், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஆகியவை கோட்டைக்குள் உள்ளன. கடந்த சில ஆண்டுகள் வரை, வேலூர் மாவட்ட நீதிமன்றம், கலக்டர் அலுவலகம், இலங்கை அகதிகள் முகாம் ஆகியவை இங்கேயே இயங்கி வந்தன. தற்போது அவை வேலூரின் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. முக்கியமாக ராஜீவ் கொலைக்குற்றவாளிகளான சின்ன சாந்தன், முருகன், நளினி, பேரறிவாளன் ஆகியோர் இங்கு தான் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் 1995 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ம் திகதி கோட்டை சிறையிலிருந்து 43 விடுதலைப்புலிகள் 152 அடி தூரத்திற்கு சுரங்கம் அமைத்து தப்பி சென்றதன் பின், ராஜீவ் கொலை யுடன் சம்பந்தப்பட்ட கைதிகள், வேலூர் தொரப்பாடி மத்திய சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்கள்.

1815 இல் ஆங்கிலேயரிடம் கண்டி இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின் கண்டி மன்னர் ராஜசிங்கன் கைது செய்யப்பட்டார். பின்னர் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு சிலிங்கோ கட்டடத்திற்கு அருகில் இருந்த ஒரு கட்டடத்தில் அவர் சிறை வைக்கப் பட்டிருக்கிறார். அங்கே சில மாதங்கள் கழிந்த பின் 1816ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி மன்னரும் அவின் துணைவியார்கள் நான்கு பேரும் கொழும்பு கோல்பேசிலி ருந்து கோர்ஸ்வலிஸ் என்ற கப்பல் மூலமாக சென்னைக்கு அழைத்து செல்லப்பட்டிருக்கி றார்கள்.

(31ஆம் பக்கம் பார்க்க)




இக் கதவுக்குப் பின்னாலேயே மன்னர் சிறை வைக்கப்பட்டிருந்தார்



முத்து மண்டபம்



மன்னர் மற்றும் குடும்பத்து கல்லறைகள்



வேலூர் கோட்டை

மன்னன் ராஜசிங்கன்

வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
- பாரதிதாசன்

முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com

விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381

அட்டையை அலங்கரிப்பவர்
நடனமணி
ஷோபனா

ஒக்டோபர் மாத வானவில் 1ம் திகதி முதல் கடைகளில்...

# பரத்தையர் நடனமே பரத நாட்டியம்



இலங்கையிலும், இந்தியாவிலும் பரத நாட்டியம் பயில்வதும் அரங்கேற்றுவதும் குடும்ப கௌரவத்துடனும், பணச் செழிப்பை வெளிப்படுத்துவதுடனும் தொடர்பு பட்டதாகக் கருதப் படுகிறது. தன் மகள் பரத நாட்டியம் பயிலுகிறாள் என்று சொல்லிக் கொள்வதில் பெற்றோர் பெருமிதம் அடைகின்றனர். அரங்கேற்றம் என்பது பணக்காரத் தனத்தின் வெளிப்பாடாகவே இருக்க முடியும். ஏனெனில் ஒரு அரங்கேற்றதுக்கு பத்து இலட்சத்துக்கும் அதிகமாக செலவு செய்தாக வேண்டும்.!

இதுவெல்லாம் பரத நாட்டியத்துக்கு 20 ம் நூற்றாண்டில் வந்து சேர்ந்த பெருமைகள். இவ்வளவு பெருமையும், அநதஸ்தும் என்றைக்குமே இந் நடனத்துக்குக் கிடைத்தில்லை. இந்த நடனத்தைப் பயிலும் போது, நீங்கள் நிறைய சமஸ்கிருத சொற்களைப் பயில வேண்டியிருக்கும். இந் நாட்டியத்தைப் பயிலும் ஒரு சிறுமி, பதாகஸ், திர்ப்பதாகோ, அர்த்த பதாக, கபோதக்ஷ, டோலாகஷ்ய, புஷ்பகுடக என நீளும் முத்திரைகளின் பெயர்களை மனப்பாடம் செய்ய வேண்டியிருக்கும். இந்த நடன சாஸ்திரம் பரத முனிவரால் வட மொழியில் எழுதப்பட்டது என்று குரு சொல்லித் தருவார். பவம், நயம், தாளம் என்பவற்றின் சுருக்கமே பரதம் என்றும், சிவபெருமானின் நடனம் என்றும், தெய்வீகக் கலை என்றும் மாணவியருக்குச் சொல்லித் தருவார்கள்.

*இன்று பல நடன ஆசிரியர்கள், இது பரத முனிவரால் அருளப்பட்டதாகவும், வட மொழி தமிழுக்கு தந்ததாகவும் தமது மாணவர்களுக்கு பரத நாட்டியம் பற்றி தவறாக சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். மேலும் அவர்கள் போதிக்கும் நடன பாடங்கள் வட மொழியில் இருப்பதால், மாணவிகளும் இதை நம்பி விடுகிறார்கள். பெற்றோரும் பரத முனிவர் அருளிய ஒரு தெய்வீகக் கலையைத்தான் தமது பிள்ளைகள் கற்பதாக பரவசப்பட்டுக் கொள்கின்றனர்..*

ஆனால் உண்மையில் இது தமிழர்களின் நடனம். தமிழ்ச் சொத்து. கடந்த இரண்டு நூற்றாண்டுகளிலேயே இது தமிழர்களிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்டு சமஸ்கிருதமயமாக்கப்பட்டது. தமிழரின் தெவராட்டம் அல்லது சதிராட்டத்துக்கு புத்துயிர் அளிக்கும் போது, இந் நடனம் பரத நாட்டியமாக்கப்பட்டதொடு, சமஸ்கிருத மயப் படுத்தப்பட்டது. வட மொழி ஆக்கரமிப்போடு பரதமுனி கதையும் புனையப் பட்டது. இறுதியில், ஒரு தமிழர் நடனம் சமஸ்கிருதப் படுத்தப்பட்டு அதைத் தமிழர்கள் இரவல் பெற்றதாக கதையும் சோடிக்கப்பட்டு, அதை நாம் நம்பியும் வருகிறோம். கிருஷ்ணையர்தான் 1930 ல் பரத நாட்டியம் என்ற பெயரைச் சூட்டினார்.

பழந் தமிழரின் நடனக் கலை பற்றி சிலப்பதிகாரம் விரிவாகப் பேசுகிறது. சோழர் காலத்தில் நடனக் கலை சிறப்புப் பெற்றிருந்தது. அக் காலத்தில் கோவில்களில் தெய்வத் திருப்பணி செய்வதற்காக பெற்றோர் தமது பெண்களை அர்ப்பணித்தனர். இவர்கள் கோவில்களில் நடனம் ஆடினார்கள். திருமணமாகாத இப் பெண்கள் தேவரடியார் என அழைக்கப்பட்டனர். மக்கள் மத்தியில் இன்றைய பிக்குனிகளைப் போலவும், திருக் கன்னியர் போலவும் இவர்கள் நன் மதிப்பைப் பெற்றிருந்தனர்.

சோழரின் வீழ்ச்சியின் பின்னர் இத் தேவராட்டம், தன் சோபையை இழந்தது. கௌரவம் இழந்தது. இத் திருக் கன்னியர் கணிகைப் பெண்களாகினர். தேவராட்டம் அல்லது சதிராட்டம் விலை மகளிர் நடனமாக பெயர் பெற்றது. பரத்தையர் ஆடும் நடனம் என்பதால், பரத்தையர் ஆட்டம் (பரத) என்றானது. அப்போது ஆடப் படும் நடனத்தின் மைய அம்சங்கள் இப்போதும் அப்படியேதான் உள்ளது. தமிழகம் வெளிநாட்டவரின் ஆட்சிக்கு உட்பட்டதும், இந் நடனம் மேலும் வீழ்ச்சியடைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

19 ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இது சதிராட்டம் என்றே அழைக்கப்பட்டு வந்தது. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பால சரஸ்வதி, ருக்மணிதேவி அருண்டேல் ஆகியோர் சதிராட்டத்தை மீட்டெடுப்பதில் பெரும் பங்காற்றினர். சதிராட்டத்துக்கு புது வடிவம் கொடுக்கப்பட்டது. புத்துயிரளிக்கப்பட்டது. இவ்வகையில் ருக்மணியின் கலாச்சேத்திரா ஆற்றிய பங்கு குறிப்பிடத் தக்கது. இதைத் தொடர்ந்து பிராமணர்களின் ஆதிக்கத்துக்குள்ளான பரத நாட்டியம் வட மொழி நாட்டியமாக மாற்றமடைந்து அதன் தமிழ்த் தொடர்புகள் மறையத் தொடங்கின். இன்று பல நடன ஆசிரியர்கள், இது பரத முனிவரால் அருளப்பட்டதாகவும், வட மொழி தமிழுக்கு தந்ததாகவும். தமது மாணவர்களுக்கு பரத நாட்டியம் பற்றி தவறாக சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். மேலும் அவர்கள் போதிக்கும் நடன பாடங்கள் வட மொழியில் இருப்பதால், மாணவிகளும் இதை நம்பி விடுகிறார்கள். பெற்றோரும் பரத முனிவர் அருளிய ஒரு தெய்வீகக் கலையைத்தான் தமது பிள்ளைகள் கற்பதாக பரவசப்பட்டுக் கொள்கின்றனர்..

இந்த மாயைகள் போக்கப்பட வேண்டும். இது தமிழரின் பாரம்பரிய நடனக் கலை. பரத நாட்டியம் ஒரு சிறந்த நடனம். மிகச் சிறப்பாக இது இன்று கட்டமைக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு வடிவம் காவிரிப்பும் பட்டிணத்தில் மாதவியால் ஆடப்பட்டுள்ளது. சோழர் காலத்திலும் ஆடப்பட்டிருக்கிறது. பின்னர் வீழ்ச்சியடைந்து இன்று ஏற்றம் பெற்றிருக்கிறது. வரலாற்றை உள்ளது உள்ளபடி ஏற்றுக் கொள்ளவும், அங்கீகரிக்கவும் நாம் தயங்கக் கூடாது. இதனால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடப் போவதில்லை. வரலாற்றை நாம் திரிபுப் படுத்தி, போலி வடிவம் கொடுத்து, நமது கௌரவத்தை உயர்த்திக் கொள்வதால் ஆகப் போவது ஒன்றுமில்லை.. நமது பரத நாட்டிய ஆசிரியர்கள் உண்மையைச் சொல்லி இந்த நாட்டியத்தை மாணவியருக்குக் கற்றுத் தரட்டும்.

சில சமயம் அவ்வாறு கற்றுத் தருவதும் அவர்களுக்கு கௌரவப் பிரச்சினையாகி விடுமோ தெரிய வில்லை. ஏனெனில் போலி கௌரவம்தான் தமிழனுக்கு இன்று பெரிய விஷயமாகி விட்டது. பரத்தையர் ஆடிய நடனம் என்பதை ஏற்றுக் கொண்டால் நமது கௌரவமும், அந்தஸ்தும் என்னாவது … என்று டொக்டர்மாரும், இன்ஜினியர்மாரும், பிஸ்னஸ்காரர்களும் கருதி விடுவார்களா..? தமது வீட்டுப் பெண்கள் பரத முனிவரால் அருளப் படாத தேவரடியார் பின்னணி கொண்ட நடனத்தை பயிலக் கூடாது என்று செல்வந்தர்கள் முடிவெடுத்தால், நமது பாடு என்னவாகும் என்று நடன டீச்சர்மார்கள் பயப்படுவார்களோ..?

ஆனால் இனி இந்த நடனக் கலை வீழ்ச்சியடையாது. இன்று இது தமிழரின் அடையாளம். இதைத் தாங்கிப் பிடித்துக் காப்பாற்ற ஏராளமான சாமானிய மக்கள் தயாராக இருக்கின்றனர். நடைமுறையில், செல்வந்தப் பெண்கள் பெரும் பணச் செலவில் நடத்தப்படும் அரங்கேற்றத்துடன் பரதத்துக்கு "குட்பை" சொல்லி திருமணம் செய்து கொள்ள, சாதாரண குடும்பத்துப் பெண்கள்தான் இதற்கு மேடைகளில் உயிர் கொடுத்து வாழவைத்து வருகிறார்கள்.

- ரிஷி

## கிச்சன் டிப்ஸ்

பால் கொழுக்கட்டை செய்யும்போது கூடவே ஒரு கரண்டி தேங்காய் எண்ணெய் விடுங்கள். மணமும் சுவையும் கூடும்.

## கொலு வைக்கும்போது...

கொலுவில் மலை செட் வைக்கும் போது சிறிய தகர டின்னை புதைத்து, அதிலிருந்து 'இன்ஸ்டன்ட்' சாம்பிராணியை எரிய விட்டால், மலையில் பனிப்புகை வருவது போல அட்டகாசமாக இருக்கும். கொலு வைக்கும் இடமும் கமகமக்கும்.



கொலுவுக்கு பொம்மை வாங்கியதும் மேலே வார்னிஷ் அடித்துவிடுங்கள். தூசி படிந்தால் கூட நனைந்த துணியால் துடைக்கலாம். பொம்மைகளையும் பெயின்ட் உரியாமல் பாதுகாக்கலாம்.

அழகிய வடிவமுள்ள காலியான சென்ட் அல்லது ஸ்ப்பிரே போத்தல்களின் மேல் பசை தடவி செயற்கை முத்து, பாசி, ஒட்டி அலங்கரித்து சிறிய பூங்கொத்துக்களை செருகி கொலுப்படியின் இருபுறமும் வைத்தால் பார்க்க அழகாக இருக்கும்.

பழைய குக்கர் கேஸ்கட்டுகளை இரண்டாக வெட்டி அதன் மேல் தங்க நிற பேப்பரை ஒட்டி, மண்ணில் ஊன்றி வைத்து அழகான அலங்கார வளைவுகளை உருவாக்கலாம்.


நடனப்பள்ளி மாணவியருடன்...


சரசா டீச்சர்




அரங்கேற்றத்தின் போது குட்டி ஜே

# ஜெயலலிதாவுக்கு நடனம் பயிற்றுவித்த சரஸா..

சிரித்த முகம், கூன் விழுந்த நடை, மெலிந்த தேகம். நடனக்கலையை பொறுத்தவரையில் எத்தனையோ புகழ் வாய்ந்த நடன ஆசிரியர்கள் இருந்தாலும் கே.ஜெ.சரஸா என்றால் தனிச்சிறப்பு தான்.

இவரது 'சரஸாலயா' நடனப்பள்ளியில் இவரிடம் இதுவரை மூவாயிரம் மாணவிகளுக்கு மேல் நடனம் பயின்றிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர், இன்றைய முதல்வர் ஜெ.ஜெயலலிதா.

ஜெயலலிதாவுடன் தமக்கு ஏற்பட்ட சில மறக்க முடியாத அனுபவங்களை பற்றி இங்கே பேசுகிறார்.

நான் அவங்களை முன்பு அம்முனு தான் கூப்பிடுவேன்.

அப்ப அம்முவோட வயசு எட்டு இருக்கும்னு நினைக்கிறேன். சர்ச் பார்க்கில் படிச்சுட்டு இருந்தாங்க. யார் மூலமாகவோ என்னைப்பத்தி தெரிஞ்சு ஒரு சபா நிகழ்ச்சியில் அவங்கம்மா சந்தியா, அம்முவுக்கு நீங்க தான் டான்ஸ் சொல்லித்தரணும்னு என்னை கேட்டுக்கிட்டாங்க. நானும் ஒப்புக்கிட்டேன்.

நான் அப்ப அபிராமிபுரத்தில் குடியிருந்தேன். அம்முவோட வீடு தி.நகர். சிவஞானம் தெருவில் இருந்தது. வாரத்தில் மூன்று நாட்கள் நாட்டியப்பயிற்சி. மாலை, நாலரை மணியிலிருந்து ஆறு வரைக்கும் வகுப்பு நடக்கும்.

ரிக்ஷாவில் நான் போய் இறங்கும் நேரத்தில் தயாராக இருப்பார் அம்மு. நாட்டியத்திற்கேற்ற உடல் வாகு அம்முவிடம் நிறைய இருந்தது.

சொல்லிக் கொடுக்கிற அசைவுகளை கற்பூரம் மாதிரி புரிஞ்சுக்குவாங்க. நாட்டியம் மட்டுமல்ல, எல்லா கலைகளிலும் அவருக்கு ஆர்வம் அதிகமா இருந்தது.

1960 ஆம் ஆண்டு ஆர்.ஆர்.சபாவில் அம்முவின் நாட்டிய அரங்கேற்றம் நடந்தது.

நடிகர் திலகம் தான் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். அதில் ரொம்ப சிறப்பா ஆடினாங்க. எனக்கு ரொம்ப பெருமையா இருந்தது.

குரு - சிஷ்யை உறவுக்கு மேலே அம்மா - மகள் பாசத்தை அவங்ககிட்டே பார்ப்பேன். வகுப்பு முடிஞ்சு நான் வீட்டுக்கு திரும்பும்போது சில நேரத்திலே என்னோட ரிக்ஷாவிலே வருவாங்க. எங்க வீட்டிலே இருக்கிற குழந்தைகளோட அவங்களும் ஒரு குழந்தையா விளையாடுவாங்க.

சாக்லெட் கொடுத்து எனக்கு நடனம் சொல்லித்தந்தவங்க சரஸா டீச்சர் என்று ஒரு பேட்டியில் சொல்லியிருக்காங்க. அது இருபது வருஷத்துக்கு முந்தைய குமுதத்திலே வந்ததாக நினைவு.

வெண்ணிற ஆடை படம் வருகிற வரை நடனம் கத்துக்கிட்டே இருந்தாங்க.

அதுக்கப்பறம் தானே தயாரித்த நாட்டிய நாடகங்கள் பலவற்றை அரங்கேற்றினாங்க. ஒவ்வொரு முறையும் எனக்குத்தவறாமல் அழைப்பு வரும்.

முதல் தடவையாக முதலமைச்சரான பிறகு என்னை கூப்பிட்டு அனுப்பினாங்க. போனேன். சந்தோஷப்பட்டேன்.

என்னோட சரஸாலயா நாட்டிய பள்ளியோட பொன் விழாவை கொண்டாடினேன். அதுக்கு அவங்களை கூப்பிடணும்னு போய்ப்பார்த்தேன். ஆனால் அவரை சந்திக்க முடியவில்லை.

அதுக்கப்புறம் கீழே விழுந்து என் கை முறிஞ்சு போச்சு. அப்பவும், சி.எம்.மை பார்க்கணும்னு தோணுச்சி, போனேன். ரொம்ப நேரம் காத்திருந்தேன். சந்திக்கிற வாய்ப்பு கிடைக்கலை.

இன்னைக்கு என்னோட மாணவி, தமிழ்நாட்டின் முதல்வராக இருக்கிற விஷயமே எனக்கு பெருமை தான் என்கிறார் சரஸா.

நன்றி : ஜங்ஷன் 2002



# அஞ்சலி தேவியை நேரில் பார்ப்பதற்காக பொய் சொன்ன திருடன்

சாவித்திரி, பாணுமதி, வைஜயந்திமாலா, பத்மினி ஆகியோர் காலத்தைச் சேர்ந்தவர் அஞ்சலிதேவி. இப்போது இவருக்கு 83 வயதாகிறது. இரண்டு மகள்மாரும் அமெரிக்காவில் வசிக்கிறார்கள்.

சென்னையில் வாழும் இவர், நினைத்தால் புட்டபர்த்தி செல்வார். பேரப் பிள்ளைகள் ஞாபகம் வந்தால், அமெரிக்கா செல்வார். இப்படித்தான் தான் விரும்பியவாற தன் வாழ்க்கையை அமைதியாகக் கழித்துக் கொண்டிருக்கிறார் அஞ்சலிதேவி.

இவர் ஒரு தெலுங்குப் பெண். ஆந்திராவின் காகிநாடா இவர் சொந்த ஊர். இவருக்கு எட்டு வயதாக இருக்கும் போது, நாடக இசையமைப்பாளரான ஆதி நாராயணராவ் என்பவரிடம் இசைப் பயிற்சி வழங்குங்கள் என்று இவரது அப்பா இவரை ஒப்படைத்து விட்டாராம். பாடுவது, நாடகங்களில் நடிப்பது, என்ற வாழ்க்கை வளர்ந்தது. இவர் பெரியவரானதும் தன் குருவையே திருமணம் செய்து கொண்டார். இவருக்க முதல் குழந்தை பிறந்த போது இவருக்கு 18 வயதிருக்குமாம்.

முதல் காட்சி என்ன தெரியுமா..? மன்னரும், ராணியும் அந்தப்புரத்தில் நடனம் ஆடிக் கொண்டிருப்பார்கள். தேவதையான அஞ்சலிதேவி, மன்னரை மயக்கி தேவலோகம் அழைத்துச் செல்ல வேண்டும். இந்த காட்சியில் தேவதையை ராணி என்று நினைக்கும் மன்னர், தேவதையை கட்டிப்பிடித்து கன்னத்தில் முத்தமிட்டு விடுவார்.

இயக்குனர் இக் காட்சியை அஞ்சலிக்கு விளக்கியதுமே அரண்டு போனார் அவர். நடிக்கவே மாட்டேன் இப்படி ஒரு காட்சியில். திருமணமான நான் ஒரு தாயும் கூட. முத்தக் காட்சியில் நான் நடிப்பதா..? எனப் புலம்ப ஆரம்பிக்கவே விசயம் அவர் கணவர் காதுக்கு எட்டியது. அவர் வந்து சமாதானம் சொன்னார். நடிகரின் விரல்கள் கூட உன் மேல் படாது, அவர் முத்தம் கொடுக்கவும் மாட்டார். கொஞ்சம் தலை சாய்த்து போஸ் கொடுத்தால், மிகுதியை ஒளிப்பதிவாளர் பார்த்துக் கொள்வார் என்று விளக்கமாகச் சொன்னதும்தான் அஞ்சலிதேவி அக்காட்சியில் நடிக்கச் சம்மதித்திருக்கிறார். இவர் கதாநாயகியாக நடித்து வெளியான முதல் படம் டி.ஆர்.சுந்தரம் இயக்கிய "ஆதித்தன் கனவு. இவர் ஆந்திராவில் இருந்து 1946 ஜனவரி 13 ம் திகதி சென்னைக்கு நடிப்பதற்காக (தேவதை வேடத்தில்) வந்தார். அதன் பின்னர் எம்.ஜ.ஆர்., ஜெமினி, சிவாஜி என முன்னணி நடிகர்களுடன் அவர் ஏராளமான படங்களில் நடித்தார். பிற் காலத்தில் தொலைக் காட்சி நாடகங்களிலும் அவர் நடித்தார். ஆதித்தன் கனவு வெளியான பின்னரேயே அவர் குணச் சித்திர கதாநாயகியாக அறியப்படலானார். பின்னர் லவ குச என்ற படத்தில் சீதையாக நடித்தார். அப்போது சீதையாக நடிப்பதென்பது பெரிய விசயம். இவர் தன் வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான சம்பவமொன்றை இப்படிச் சொல்கிறார்:

"திருட்டுக் கேஸ் ஒன்றில் மாட்டிக் கொண்ட ஒருத்தன் இதுக்கு முன்னாடி உங்க வீட்ல வேலை செய்ததாகச் சொல்றான். நீங்க நேரில் வந்து இவன் உங்கள் வீட்டில் வேலை வெய்தவனான்னு அடையாளம் காட்டுங்க.." என்று செங்கல்பட்டு கோர்ட்டுக்கு வரச் சொல்லி ஆர்டர் வந்தது. நானும், வக்கீலும் போனோம்.. இருபத்தைந்து வயது இளைஞனைக் காட்டினாங்க. "இவனை இதற்கு முன் நான் பார்த்ததே கிடையாது.." என்றேன். கொஞ்ச நேரம் சிரிசிசுக்கிட்டே இருந்த அவன், 'நான் இவங்க வீட்டில் வேலை செய்ய வில்லை. ஆனால், இவங்களைப் பார்க்கப் போகும்போதெல்லாம் கூர்க்கா விரட்டி அனுப்பிடுவான். சரி, இவங்களை எப்படியாவது நேரில் பார்த்துவிட வேண்டுமென்றுதான் இப்படி ஒரு பொய் சொன்னேன்..'னு சொன்னான் பாருங்க. நான் அப்படியே திகைச்சுப் போயிட்டேன். அந்த ரசிகனை உண்மையிலேயே என்னால் மறக்கவே முடியாது.. அதை இப்ப நினைச்சால்கூட சிரிப்பு வருது.."

ஜெமினி கணேசனுடன் 25 படங்களில் நடித்துள்ள இவர், எம்.ஜி.ஆருடன் ஐந்து படங்களிலும், பூங்கோதை, நான் சொல்லும் ரகசியம், முதல்தேதி, பக்த துக்காராம், ஆகிய படங்களில் சிவாஜியுடன் சேர்ந்தும் நடித்திருக்கிறார்.

துக்காராம் என்ற படத்தைத் தயாரித்தவர் அஞ்சலிதேவி. ஒரு சண்டைக் காட்சியில் கெஸ்ட் ரொலில் தோன்றுவதற்கு சிவாஜி சம்மதித்திருந்தாராம். ஒரு நாள் ஹைதராபாத்தில் படப்பிடிப்பில் இருந்த சிவாஜி தொலை பேசியில், "நாளை காலை ஏழு மணிக்கெல்லாம் சென்னை வந்து விடுவேன் படப்பிடிப்புக்கு ரெடியாக இருங்கள்.." என்று தகவல் சொல்ல, அஞ்சலி தேவி அதற்கான ஏற்பாடுகளை அவரே அவசரமாகச் செய்திருக்கிறார்.

மறு நாள் காலை சிவாஜி சரியான நேரத்துக்கு கிண்டி படப்பிடிப்பு நடக்கும் இடத்துக்கு வந்து மேக்கப் போட்டுக் கொண்டார். பீன்னர் குதிரையில் ஏறி உட்காரப் போனவர் மயங்கி தரையில் விழுந்து விட்டார். படப்பிடிப்புக் குழுவே ஆடிப் போனது. அஞ்சலிதேவி கதறி விட்டார். தண்ணீர் தெளித்து உணர்வு நிலைக்கு வந்தவரிடம், படப்பிடிப்பை ரத்து செய்து விடலாம் என்று அஞ்சலிதேவி சொல்ல, அதற்கு மறுப்புச் சொன்ன சிவாஜி, சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு, நடிக்கத் தயாரானார். பின்னர் மாலை ஐந்து மணிவரை நடித்துக் கொடுத்து விட்டு புறப்பட்டார்.

புறப்படுவதற்கு முன்னர், "அஞ்சலி இன்றைக்கு மட்டும்தான் எனக்கு கால் ஷீட் இல்லை. அதனால்தான் உனக்கு போன் பண்ணினேன். இன்றைக்கு நடித்துத் தராவிட்டால், ரொம்ப காலம் காத்திருக்க வேண்டியிருக்கும். படத்தை வெளியிட தாமதமாகும்.

ஆதனால்தான் படப்பிடிப்பை நிறுத்த வேண்டாம் என்று சொன்னேன் " என்று சொன்னாராம் சிவாஜி. சிவாஜிக்கு எவ்வளவு பெரிய மனசு என்று பூரித்துப் போகிறார் அஞ்சலிதேவி



# கேணல் கடாபி:



## உப்பரிகையிலிருந்து சரித்திரத்தின் குப்பைத்தொட்டிக்குள்...

ராம்ஜி

உலகில் இதுவரை கொடுங்கோல் ஆட்சி நடத்திய எல்லா சர்வாதிகாரிகளுக்கும் தெரியாமல்போன ஒரு விஷயம்தான் உலகில் எதுவுமே நிரந்தரமல்ல என்பது. இதை கௌதம புத்தர் 2500 ஆண்டுகளுக்கு முன்னரேயே சொல்லிவிட்டார். ஆனால் பதவி, புகழ், பணம் வந்ததுமே பேராசைகளையும் நான் நிரந்தரமானவன் என்ற மமதையும் அவர்களுக்கு வந்துவிடுகிறது. இதற்கு கேணல் கடாபி விதிவிலக்கல்ல.

உலகில் 7வது பெரிய எண்ணெய் ஏற்றுமதி நாடான லிபியாவின் சொத்துக்களை தன் குடும்பச்சொத்தாக பாவித்து 42 ஆண்டுகளாக கோலோச்சி வந்த கடாபிக்கும் இப்போது முடிவு கட்டியிருக்கிறார்கள் அந்நாட்டு மக்கள்.

மக்களின் நண்பனாக முகம் காட்டி உலகின் இளைய முஸ்லிம் சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக பதவியை பிடித்த லிபியாவின் முன்னாள் அதிபர் இன்று அந்நாட்டவரால் வெறுக்கப்படும் மனிதராகி இருக்கிறார். அவர்கள் 6 மாத காலமாக கடாபியின் கடுமையான அடக்குமுறைகளையும், தாக்குதல்களையும் சமாளித்து 700க்கும் அதிகமான லிபியர்களின் இரத்தத்தின் மீது தமது வெற்றியை நிலைநிறுத்தி இருக்கிறார்கள். இந்த வெற்றியை அடைவதற்காக கேணல் கடாபியின் ஆட்சியை கவிழ்ப்பதற்காக அந்நாடு பாரிய இழப்புகளையும் பொருளாதார பின்னடைவுகளையும் சந்தித்திருக்கிறது. அடங்க மாட்டேன் என்றவரை அடங்கவே மாட்டோம் என்ற மக்கள் குரல் பெரும் தியாகங்களின் பின்னர் அடக்கியிருக்கின்றது. மக்களின் மன்னராக இருந்திருக்க

வேண்டியவர் இன்று முசோலினி, ஹிட்லர், பொல்பொட் வரிசையில் இணைந்திருப்பது காலத்தின் கோலம்.

டுனீசியா, எகிப்து, சிரியா, லிபியா ஆகிய சமீபத்தில் மக்கள் போராட்டம் வெடித்த நாட்டு மக்களை எடுத்துக்கொண்டால் அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா, இலங்கை போன்ற ஜனநாயக நாடுகளில் வசிக்கும் மக்கள் எவ்வளவோ கொடுத்து வைத்தவர்கள். தம்மை ஆளும் தலைவர் தமக்கு பிடிக்கவில்லை என்றால் அடுத்த தேர்தலிலேயே அமைதியாக வாக்களிப்பதன் மூலம் அவரை பதவியிலிருந்து எழுப்பிவிட முடிகிறது.

நாட்டுக்கு இழப்பில்லாமல், இரத்தம் சிந்தாமல் நாம் இதை செய்து விடுகிறோம். ஆனால் தமது தலைவர்களை பதவியிறக்குவதற்கு இந்நாடுகளின் மக்கள் எவ்வளவோ போராட வேண்டியிருக்கிறது பார்த்தீர்களா?

நாம் ஏன் ஜனநாயக ஆட்சி முறையை பாதுகாக்க வேண்டும் என்பதற்கு இதை விட வேறு என்ன உதாரணம் நமக்குத்தேவை..?

70களின் முற்பகுதியில் கொழும்பில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின்

உச்சி மாநாடு நடைபெற்ற போது மார்ஷல் டிற்றோ, இந்திரா காந்தி,

ஆச் பிஷப் மக்காரியோஸ் போன்ற உலகப்பெரும் தலைவர்களுடன் இளைய தளபதியாக கேணல் கடாபியும் கொழும்பு வந்திருந்தார். அவர் ஹொலிடே இன் ஹோட்டலில் தங்கியிருந்தார். அவரை பார்ப்பதற்காக மக்கள் வெள்ளம் ஹோட்டலின் முன்னே கூடியிருந்தது. அன்று இளைஞர்களின் இதய தாகமாக கடாபி விளங்கினார். ஏராளமான முஸ்லிம் வீடுகளில் கடாபியின் படத்தை சுவரில் மாட்டியிருந்தார்கள். இந்த நட்சத்திர அந்தஸ்தும் செல்வாக்கும் முஸ்லிம் மக்கள் வாழும் நாடுகளில் எல்லாம் பரந்து விரிந்திருந்தது.

கடாபி கடைசி வரை இஸ்ரேலின், யூதர்களின் எதிரியாகவே தன்னை வெளிக்காட்டி வந்தார். அமெரிக்காவின் மேற்குலகின் வைரியாகவும் ஒடுக்கப்பட்டவர்களின் நண்பனாகவும் தன்னைக்காட்டிக்கொண்டு ஒரு முக்கிய இஸ்லாமிய தலைவராக அவர் தன்னை உலகளவில் வளர்த்துக்கொள்வதில் வெற்றியடையவும் செய்தார். இஸ்ரேலை உலக வரைபடத்திலிருந்தே நீக்க வேண்டும் என்று கூறி வந்த அவர் லிபியாவில் வாழ்ந்த யூதர்களை நாடுகடத்தவும் செய்தார். மேற்கத்திய நாடுகள் காலனி நாடுகளாக

தமக்குக்கீழ் வைத்திருந்த நாடுகளுக்கு 7.77 மில்லியன் டொலர்களை நஷ்ட ஈடாக வழங்கவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்திருந்தார். இவை அனைத்தும் உலக இஸ்லாமியர்களை அவர் பால் ஈர்க்கச்செய்திருந்தது. பசுமைப்புரட்சி என்ற பெயரிலான கொள்கை பிரகடண நூல் ஒன்றை வெளியிட்டு அதையே லிபியாவின் 'வேத நூலாகவும்' வைத்திருந்தார்.

70 களில்தான் பீ.எல்.ஓவின் ஆதரவுடன் விமான கடத்தல் என்ற ஒரு புதிய இஸ்ரேலிய, மேற்குலக எதிர்ப்பு ஆயுதமொன்றை பாலஸ்தீன கெரில்லாக்கள் கண்டுபிடித்து வெற்றிகரமாக செயற்படுத்தியும் வந்தார்கள். ஒரே சமயத்தில் 4 போயிங் பயணிகள் விமானங்கள் நடு வானில் கடத்தப்பட்டு லிபிய பாலைவனத்தில் அவை வெடி வைத்து தகர்க்கப்பட்டன. மேற்குலகை கிலி கொள்ளச்செய்த சம்பவமிது. இந்த விமானக்கடத்தல்களுக்கும் ஏனைய பயங்கரவாத தாக்குதல்களுக்கும் லிபிய அதிபரின் கடாட்சம் பெருமளவில் இருந்தது. இதனால் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் தரும் நாடு என்று மேற்குலகம் லிபியாவை அடையாளம் இட்டு அழைக்க ஆரம்பித்தது.

1993 ஆம் ஆண்டு இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட லிபிய படை வீரர்கள் இணைந்து கடாபியை தீர்த்துக்கட்ட சதித்திட்டம் தீட்டினர். ஆனால் லிபிய அதிபரின் கோத்திரத்தை சேர்ந்த விமானப்படையணியினர் இந்த சதித்திட்டத்தை முற்றாக முறியடித்தனர். கேணல் கடாபிக்கு எதிரான பல சதி முயற்சிகளில் இதுவும் ஒன்று. இதனால் ஆத்திரமடைந்த கடாபி இந்த சதித்திட்டத்துக்கு பின்னணியில் வெளிநாடுகளில் தஞ்சமடைந்திருக்கும் தனது எதிரிகளே காரணம் எனக்கருதி, அந்தந்த நாடுகளில் இருக்கக்கூடிய தனது கூலிப்படையினரை தன் எதிரிகள் மீது ஏவி விட்டார்.

கடைகளிலும் வீதிகளிலும் உணவகங்களிலும் நின்றிருந்த சமயத்தில் கடாபியின் எதிரிகள் கூலிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதன் மூலமும், ரிமோட் கன்ட்ரோல் மூலமும் தன்னால் இயங்க முடியும் என்பதை, இரத்தத்தை உறைய வைக்கும் வகையில் நிரூபித்துக்காட்டினார் கேணல் கடாபி.

லொக்கர் பீ விமானத்தகர்ப்பு சம்பவத்தோடு கடாபியின் கெட்ட காலமும்

ஆரம்பமானது. 1986 ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரேகனின்

உத்தரவின்பேரில் கடாபி வளாகம் அமெரிக்க விமானங்களில் மின்னல் தாக்குதல்களுக்கு உள்ளானது. கடாபிக்கு பாடமாக இருக்கட்டும் என்பதற்காகவே இத்தாக்குதல் என்று ரேகன் இதற்கு காரணம் கூறினார். பின்னர் அந்நாட்டின் மீது பொருளாதாரத்தடையும் விதிக்கப்பட்டது. படிப்படியாக அவர் அமெரிக்காவுக்கு வளைந்து கொடுக்கத்தொடங்கினார். பழைய கீர்த்தி அவரை விட்டு அகலத்தொடங்கியது.

உள்நாட்டில் பல நெருக்கடிகளையம் சமாளிக்க வேண்டியிருந்ததால் தன் கொடூரச் செயல்களை இஸ்ரேல் மீது அவிழ்த்து விடுவதற்கு பதிலாக தன் சொந்த மக்கள் மீதே கட்டவிழ்க்க வேண்டியதாயிற்று.

இன்று உலக நாடுகளாலும், முஸ்லிம் உலகாலும், லிபிய மக்களாலும் வெறுக்கப்பட்ட நிலையில் பதவி இழந்து தலை மறைவாகி யிருக்கிறார் கடாபி. மக்களால் விருப்பத்துடனும் பெருத்த எதிர்ப்பார்ப்புகளுடனும் தலைவர்களாக நிறுத்தப்படும் தலைவர்கள், காலப்போக்கில் மக்களின் எதிரிகளாக மாறுவதன் பின்னர் மக்களால் தூக்கி எறியப்படுவது சரித்திரத்தில் முதல் தடவையல்ல. மக்களை அறிந்திருந்தும் ஏன், எப்படி, எதற்காக மக்களின் எதிரிகளாக மாறுகின்றார்கள்.

இந்த கடாபிகள் என்பது தனியாக ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஏனெனில் மேலும் சில கடாபிகள் இன்றும் நாடுகளை ஆண்டு கொண்டுதான் இருக்கிறார்கள். இன்னும் பலர் அதிகாரத்துக்கு எதிர்காலத்தில் வரத்தான் போகிறார்கள். ஏனெனில் மனிதன் எப்போது வேண்டுமானாலும் மாறக்கூடியவன்.

# ஜெயலலிதாவின் தந்திரமான காய் நகர்த்தல்



ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் தூக்குத்தண்டனை பெற்ற குற்றவாளிகளாக சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரின் கருணை மனுக்கள் இந்திய ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்ட பின்னர் அவர்களை தூக்கிலிடக்கூடாது என்ற கோஷம் தமிழகமெங்கும் உரத்து ஒலிக்கத் தொடங்கியதை வாசகர்கள் அறிவார்கள். அவர்களது கருணை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது சரியா, தவறா? அம்மனுக்கள் மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட வேண்டுமா? என்ற பல கேள்விகளின் பேரில் நாம் கருத்துச்சொல்ல முடியாது. ஏனெனில் இது இந்திய நீதி மன்றம். ஜனாதிபதியின் அதிகாரம் மற்றும் இந்திய சட்டங்களுடன் தொடர்பு பட்டது. முற்றிலும் இந்திய நீதித்துறையுடன் சம்பந்தப்பட்ட விவகாரம். இந்தியர்களின் தீர்மானத்துக்குரிய ஒன்று. ஆனால், விடுதலைப்புலிகளின் விரோதியாகவும் ராஜீவ் கொலை வழக்குடன் தொடர்பு பட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை கொண்டவருமான தமிழக முதல்வர் ஜெயலலிதா, தற்போது எடுத்துள்ள புதிய நிலைப்பாடுதான் ஆச்சரியத்துக்குரியது.

யுத்தம் நடந்தால் மக்கள் உயிரிழக்க நேர்வது இயற்கைதான் என்று ஒரு சமயத்தில் கருத்து தெரிவித்த ஜெயலலிதா, இப்போது இலங்கை மீது பொருளாதாரத்தடை கொண்டு வர வேண்டும் என்ற பிரேரணையை தமிழக சட்ட மன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறார். இந்திய ஜனாதிபதியால் மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட பின்னர், தமிழக முதல்வரே மரண தண்டனையை இரத்துச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழகமெங்கும் எழுந்தது. இது தொடர்பாக சட்ட சபையில் பேசிய தமிழக முதல்வர், மாநில முதல்வர் என்ற வகையில் தன்னால் செய்யக்கூடியது எதுவும் இல்லை என்று அடித்துச்சொன்னார். சட்டப்படியும் அவர் சொன்னதும் சரி தான்.

இச்சமயத்தில் கலைஞர் கருணாநிதியும், மூவர் மீதும் கருணை காட்ட வேண்டும் என்று சொல்லத்தொடங்கி விட்டார். அவர் தமிழக முதல்வராக பதவி வகித்தபோது தூக்குத் தண்டனை விதிப்பது தொடர்பான விடயத்தில் உத்தியோக பூர்வமான கருத்து தெரிவிக்க வேண்டிய ஒரு சூழலில், நளினிக்கு ஆயுள் தண்டனையும் ஏனைய மூவருக்கும் தூக்குத் தண்டனையும் விதிக்கலாம் என்று சிபாரிசு செய்தவர்தான் இந்த கருணாநிதி.

ஜெயலலிதா தன்னால் எதுவும் ஆகாது என்று தெரிவித்த பின்னர், தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் செய்பவர்களின் ஆத்திரம் எல்லை மீறிப்போவதை பண்ட அவர் மறுதினமே தன் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். இம் மூவர் மீதும் கருணை காட்ட வேண்டும் என்ற ஒரு பிரேரணையை தமிழக சட்ட சபையில் ஏக மனதாக நிறைவேற்றினார். முதல் நாள் சரிந்த செல்வாக்கு மறுநாள் பன் மடங்கு எகிற, ஒரே நாளில் புகழ்பெற்ற முதல்வராகிவிட்டார் ஜெயலலிதா.

இந்நிகழ்வுகளின் இறுதி அரசியல் பிரதிபலன்கள் என்ன..?

தமிழக அரசியல் சதுரங்கத்தில் இரண்டு தடவைகளும் ஜெயலலிதா வெற்றிகரமாக காய் நகர்த்த, ஏற்கனவே மிக மோசமான செல்வாக்கு வீழ்ச்சியாலும் ஏகப்பட்ட அரசியல் மற்றும் குடும்பப்பிரச்சினைகளில் சிக்கித்திணறிக்கொண்டிருக்கும் கலைஞர் கருணாநிதியும் அவரது தி.மு.கவும் படுபாதாள வீழ்ச்சியை தற்போது எதிர்கொண்டிருக்கின்றனர்.

கடந்த இதழ் கட்டுரையில் கலைஞரை ஜெயலலிதா காப்பாற்றுவார் என எழுதியிருந்தோம். அது இப்போது சாத்தியமாகப் போவதில்லை. தற்போதைய சூழலில் ஜெயலலிதாவின் கையே ஓங்கி வருகிறது. உதயசூரியன் இன்னும் கொஞ்ச காலம் காரிருளிள் தான் காலம் தள்ள வேண்டியிருக்கும்.

- சத்யா

# பெண்ணாசை சொத்தாசை ஒத்தாசை படுகொலை





ஜயம்பதி ஜயசிங்க

**ஜூலை 8, 2011**
வெள்ளிக்கிழமை
இரவு மணி 2

திக்வெல்ல பிரதேசத்தில் நில்வெல்ல என்ற ஊர். நான்கு உருவங்கள் கையில் கத்தி மற்றும் வாள்களுடன் இருட்டில் பதுங்கி பதுங்கி சென்று கொண்டிருந்தன.

இஸபெல் ஹோட்டலை அடுத்துள்ள வீட்டை கண்டதும் அவர்களது பார்வை குத்திட்டு நின்றது.

அந்த வீட்டை தேடித்தான் அவர்கள் வந்திருந்தனர்.

வந்தவர்களில் ஒருவன், அந்தக்கோஷ்டியின் தலைவனாக இருக்க வேண்டும்.

தடித்த குள்ளமான உருவம்.

கையை உயர்த்தி சைகை செய்தான். கூட வந்த நால்வரும் நடையை நிறுத்தினார்கள்.

'அது தான் வீடு. சொன்னது எல்லாம் சரிதானே. வேலைய சரியா முடிக்கணும். முடிச்சிட்டு வந்தா காசு. ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் சரியா? கவனமா நடந்துக்குங்க' என்று சொல்லிவிட்டு அங்கேயே நின்றுகொண்டான்.

மற்றைய நால்வரும் தலையை அசைத்துவிட்டு முன்னே சென்றனர்.

அவர்கள் பதுங்கி பதுங்கி நடப்பதை பின்னால் இருந்து பார்த்து மனதில் கணக்குப்போட்டான் குள்ளத்தடியன்.

'இவனுங்க ஒவ்வொருத்தருக்கும் 50. மொத்தம் 2 லட்சம். பேசின தொகை 5 லட்சம். அப்புடின்னா எனக்கு ரொக்கமா 3 லட்சம்' என்று எத்தாளமிட்டது அவன் மனது.

நாலவரும் பதுங்கிச்சென்று அந்த வீட்டை அடைந்தனர்.

சுற்று முற்றும் பாாத்தனர்.

ஆள் அரவம் எதுவும் இல்லை.

ஒரு அடி முன்னே வைத்ததும், 'லொள்' ஒரு சின்னச்சத்தம்.. அடுத்து ஒரு முனகல்..

ஒரு கறுப்பு நாய்.. அதுவும் கும்மிருட்டில்

கையில் தயாராக வைத்திருந்த இறைச்சித்துண்டை அந்த நாயை நோக்கி வீசினான் கோஷ்டியில் இருந்த ஒருவன்.

தயாராகத்தான் வந்திருக்கிறார்கள் என்பதை இது காட்டியது.

ஆனால், அந்தக்கறுப்பு நாய் அந்த வீட்டிலோ அடுத்த வீடுகளிலோ வளர்க்கப்படும் காவல் நாய் அல்ல. காவல் நாயாக இருந்திருந்தால் இந்நேரம் குரைத்து ஊரையே எழுப்பியிருக்கும். இது என்னவோ அருகில் இருந்த ஹோட்டலில் மிச்சம் மீதியை பொறுக்கித்திண்ணும் நாய்.

இறைச்சித்துண்டை பக்கென கௌவிக்கொண்டு சுற்று முற்றும் பார்த்தது. பங்கு கேட்பதற்கு யாரும் இல்லை என்று தெரிந்துகொண்டதும், கிடைத்த இறைச்சித்துண்டை எடுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடியது.

'கடி நாய்ன்னு நினைச்சேன்.. இது ஒரு சொறி நாய்டா..'

என்று ஜோக் அடித்தான் ஒருவன்.

'உன்னை மாதிரி' என்று அவனை வெட்டினான் மற்றவன்.

'ஜோக் அடிக்காதீங்கடா.. வந்த வேலைய பாருங்க..' என்று அதட்டினான் மூன்றாமவன்.

***

மார்சல்லோ ஒரு இத்தாலியர். 60 வயது. இத்தாலியில் வீடு, காணி என்று நல்ல வசதியாக இருந்தவர். மற்றவர்களுக்கு உதவுவதில் எந்த தயக்கமும் காட்டாதவர். ஆனால் உல்லாச போக்கில் கொஞ்சம் நாட்டம் கூடியவர்.

முன்னர் ஓரிரு முறை இலங்கைக்கு சுற்றுலா வந்ததையடுத்து இலங்கையை அவருக்கு நன்றாக பிடித்துக்கொண்டது. இலங்கை சாப்பாடு, பழவகைகள் ஆகியவை மட்டுமன்றி இலங்கை கலாசாரம் மற்றும் குறிப்பாக இலங்கை பெண்களை அவர் மிகவும் விரும்பினார்.

(31ஆம் பக்கம் பார்க்க)



## அமெரிக்கத் திரைப்படங்கள்

உலகப் புகழ்பெற்ற திரைப்படங்களை தயாரிப்பதில் அமெரிக்கர்கள் தான் முன்னணியில் இருக்கிறார்கள். உலகத்திலேயே திரைப்படங்களை அதிகமாக பார்ப்பவர்களும் அமெரிக்கர்கள்தான். படம் பார்க்கும் விசயத்தில் தமிழர்களுக்கும் இவர்களுக்கும் இடையே மிகுந்த வேறுபாடு உண்டு. நமது மக்கள் ஒரே படத்தை பல தடவைகள் பாாக்கிறார்கள். அமெரிக்கர்களோ ஒரு படத்தை ஒரு தடவைக்கு மேல் பார்ப்பதில்லை.

அமெரிக்காவில் டிக்கெட் வாங்குவதற்கு தியேட்டர்களுக்குத்தான் போகவேண்டும் என்பதில்லை. ஓட்டல்கள், அலுவலகங்கள், பொருட்காட்சிச் சாலைகள், பத்திரிகை அலுவலகங்கள், புத்தக விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் முன்னதாகவே டிக்கெட்டுகளை வாங்கிக்கொள்ளலாம்.

செய்திப்படங்கள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் படமாகி திரைக்கு வந்துவிடுகின்றன. கிட்டத்தட்ட செய்திப் பத்திரிக்கைகளை பார்ப்பது போன்று அவ்வளவு துரிதமாக செய்தி நிகழ்ச்சிகள், செய்தி படங்களில் இடம் பெற்று விடுகின்றன.

அமெரிக்காவில் எந்த நேரத்தில் விரும்பினாலும் படம் பார்க்கலாம். காலை 11 மணிக்கு சினிமா காட்சி தொடங்கி, மறுநாள் அதிகாலை 4 மணி வரை ஒரே படம் தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கும். யாருக்கு எந்த நேரம் வாய்ப்பாக இருக்கிறதோ, அந்த நேரத்தில் தியேட்டருக்குள் சென்று படத்தை பாதியிலிருந்து பார்க்கத்தொடங்குவார்கள்.

அமெரிக்க தியேட்டர்கள் முதல் வரிசைக்கும், திரைக்கும் இடையே குறைந்தது 40 அடி இடைவெளி இருக்கும்படி அமைக்கப்பட்டிருக்கும். அப்பொழுதுதான் கண்கள் பாதிக்கப்படாமல் இருக்கும். நமது நாட்டிலோ, பல திரையரங்கு உரிமையாளர்கள் வருவாயை மட்டும் கருத்திற்கொண்டு திரைக்கு மிகவும் நெருக்கமாக இருக்கைகளை அமைத்திருப்பதைக் காணலாம்.

## ஓயுமா சண்டை?

*வள்ளெனக் குரைப்பார் அம்மா*
*கல்லென இருப்பார் அப்பா*
*சள்ளெனக் கதைப்பார் அம்மா*
*கொல்லெனச்சிரிப்பார் அப்பா*

*கீரியும் பாம்புமாய் தாயும்*
*தந்தையும்*
*ஏரியில் ஒதுங்கிய ஓடமாய் சேய்கள்*
*மாரியில் பெயும் மழையென*
*மனையில் தினமும் சண்டை*

*பயத்தில் பிள்ளைகள் நாங்கள்*
*பதுங்கிடுவோம் அறை மூலையில்*
*ஓயாத இந்த தகராறுக்கு*
*ஒரு முடிவு வந்திடாதா*

*அரிசி கறி வாங்குவதற்கு காசில்லை*
*அடுப்பெரிந்து இரண்டு நாளாச்சு*
*ஆரம்பமாகிவிடும் சண்டைப் பேச்சு*
*அடுத்து விழும் கனல் ஏச்சு*

*தினமும் சண்டை தொடரும்*
*திடீரென தொடங்கி நீளும்*
*மனமெல்லாம் வெந்து மாளும்*
*மானமே காற்றில் போகும்*

*பிள்ளைகள் எமக்கு நிம்மதி இல்லை*
*பிணக்குகள் தீரும் நாள் இல்லை*
*தாயும் தந்தையும்*
*இணைந்திருப்பதை*
*தனயர்கள் நாம் காண்பதெப்போ*

*நாட்டில் சண்டை ஓய்ந்தாலும்*
*நம் வீட்டில் அது ஓய்வதில்லை*
*மாட்டிக் கொண்டு தவிக்கும்*
*மைந்தர் எம்குறை தீருவதெப்போ?*

**தம்பிலெவ்வை இஸ்மாயில்**

# இலங்கை உள்ளூராட்சி சபைகளின் வரலாறு...

இலங்கையின் உள்ளூராட்சி முறை கி.மு.நான்காம் நூற்றாண்டிலிருந்தே நடைமுறையில் இருந்து வந்திருப்பதை வரலாற்று சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. இம்மன்னன் காலத்தில் கிராம எல்லைகளை வகுத்து கிராமங்களை உருவாக்கியதாக மகாவசம்சம் கூறுகிறது. சிங்கள மன்னர் காலத்தில் கிராம எல்லைகளை வகுத்து கிராம நிர்வாகத்தை கிராம சபை உறுப்பினர்கள் நடத்தி வந்திருக்கின்றனர்.

கிராமங்களில் சட்ட ஒழுங்கை பேணுதல், விவசாய அபிவிருத்தி, சிறு நீர்பாசன திட்டங்களை வழி நடத்தல், சிறு பாசன திட்டங்களை மேற்கொள்ளல் போன்ற கடமைகளை இக்கிராம சபைகள் மேற்கொண்டு வந்துள்ளன. அவை கிராமங்களில் சுதந்திரமாக இயங்கவும் செய்தன.



கிராம சபைகள் என்பது மக்கள் பெருவாரியாக வாழும் பகுதிகளை ஒரு அதிகார அமைப்புக்குள் கொண்டு வந்து அபிவிருத்தி செய்வதற்கான அரசர் காலத்து பொறிமுறையாக இருந்தது. இக்கட்டமைப்பு பலவீனமுற்று சிதைவடையத் தொடங்கியது, போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இந்நாட்டுக்குள் வந்த பின்னரேயே. போர்த்துக்கேயருக்கும், ஒல்லாந்தருக்கும் கிராமக்கடடமைப்பு, செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி குறித்து எந்த அக்கறையும் இருக்கவில்லை. அவர்களுக்குப்பின்னர் வந்த பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கிராம சபைகள் முற்றாக ஒழிக்கப்பட்டன. கிராம மட்டத்தில் ஒரு அரசியல், சமூக மற்றும் அபிவிருத்தி பொறிமுறை ஒன்று இருக்க வேண்டியதன் அவசியத்தை பிரிட்டிஷ் நிர்வாகம் ஆரம்பத்தில் புரிந்துகொள்ளவில்லை. இதன் காரணமாக 1833ஆம் ஆண்டு கோல்புரூக் சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிந்துரையின் படி கிராம சபை முறை இரத்துச்செய்யப்பட்டது.

கிராம நிர்வாக முறை இரத்துச்செய்யப்பட்டதால் கிராம மட்ட நீர்ப்பாசன வசதிகள் கவனிப்பாரின்றி பாழ்பட்டுப்போயின. விவசாயம் குன்றியது. பாதைகள் பராமரிக்கப்படாமல் பழுதடைந்தன. குளங்கள் நிர்வாகம் செய்யப்படவில்லை. கிராமங்களில் வசதி வாய்ப்புகள் பாதிக்கப்பட்ட கிராம மக்கள் வெள்ளையருக்கு எதிராக குரல் கொடுத்தனர். தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதன் விளைவாக 1848இல் மாத்தளை கிளர்ச்சி நடைபெற்றது.

கிராம சபைகள் அல்லது உள்ளூராட்சி அமைப்புகள் ஒரு நாட்டின் கீழ்மட்ட கட்டமைப்பை பரிபாலித்து நடத்துவதற்கு எவ்வளவு தூரம் இன்றியமையாதவை என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

பிரித்தானியர் இந்நாட்டை ஆள்வதற்காக இலங்கையை ஒன்பது மாகாணங்களாக பிரித்தனர். அவற்றை நிர்வகிக்க அரச அதிபர்களை நியமித்தனர். மாகாணங்கள் மாவட்டங்கள் என்றும் கிராமத்தலைவர் பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டன. இக்கிராமத்தலைவர் பிரிவுகள் சிறுகிராமத்தலைவர் பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. இக்கிராமத் தலைவர்கள் அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்பட்டனர். மத்திய அரசின் கொள்கைகளை நிறைவேற்றுபவர்களாகவே இவர்கள் செயற்பட்டனர். தமது அதிகார வரம்புக்குள் நடைபெறும் குற்றச் செயல்களை தடுப்பது, குற்றங்களை விசாரிப்பது, சிறு வரிகளை அறவிடுவது, அவற்றை பதிவு செய்வது, அரசுக்கு தேவையான புள்ளி விபரங்களை சேகரித்து வழங்குவது, மக்களின் தேவைகளை அரசுக்கு அறிவிப்பது என்பவற்றை முக்கியக்கடமைகளாக கொண்டு இக்கிராமப்பிரிவின் தலைவர்கள் செயல்பட்டனர். அரசு ஆணைகளை மக்களுக்கு விளக்கமாக எடுத்துச்சொல்வதும் இவர்களின் பணியாக இருந்தது. அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டவர்கள் கிராமங்களில் செயல்படத்தொடங்கியதும், பழைய கிராம சபை முறை முற்றாக மறைந்தது.

இந்த உள்ளூராட்சி நிர்வாகத்தின் செயற்பாடுகள் 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேயே ஆரம்பமானது. இந்த நிர்வாக முறையில் ஒரு மாற்றம் 1860 இன் பின்னரேயே ஏற்பட்டது. 1861இல் விடுக்கப்பட்ட ஒரு அரசு ஆணையின் பிரகாரம் பிராந்திய தெருக்கள் நிர்வாகக்குழுவும் மாவட்ட தெருக்கள் நிர்வாக குழுவும் நிறுவப்பட்டன.

இக்குழுக்களுக்கான உறுப்பினர்கள் ஆளுநர் நியமித்த அரச அதிபர்களாகவே இருந்தனர். அரசாங்கத்தினாலும் பெருந்தோட்டங்களினாலும் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட தெருக்களை வழி நடத்தி அவற்றை அபிவிருத்தி செய்வதும் அவற்றின் நிர்வாக நடவடிக்கைகளை கண்காணிப்பதும் இவற்றின் முக்கிய பணிகளாக இருந்தன.

கொழும்பு நகர சபை 1865ஆம் ஆண்டும் கண்டி நகர சபை 1866ஆம் ஆண்டும் உருவாக்கப்பட்டன. காலி நகரசபை 1895இல் தோற்றம் பெற்றது. இதன் மூலம் உள்ளூராட்சி நிர்வாகம் பரவலாக்கப்பட்டது. அரசு அதிகாரிகளோடு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளையும் இச்சபை உள்ளடக்கியிருந்தது. இதன் ஊடாக ஜனநாயக வழிமுறை வலுப் பெற முடிந்தது.

கிராமப்புறங்களை எடுத்துக் கொண்டால் 1871 இல் கன்சபா (கிராமசபை) முறைக்கு மீண்டும் புத்துயிரளிக்கப்பட்டது. இச்சபைகளின் தலைவர்கள் அரசு அதிகாரிகளாகவே இருந்தார்கள். கிராமங்களில் ஏற்படக்கூடிய சிறு பிரச்சினைகள், விவசாய, நீர்ப்பாசன துறைகளில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்தல், சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் நிர்வாகப்பணிகள் என்பவற்றை இவை தமது கடமைகளாகக் கொண்டன. கிராம மட்டத்தில் இவ்வாறான அதிகாரப் பரவலாக்கல் நடைபெற்றது.

19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் மற்றொரு மாற்றம் ஏற்பட்டது. 1892இல் சனிடரி போர்ட் என்று அழைக்கப்பட்ட சுகாதார சபையும், 1898இல் லோக்கல் போர்ட் என்ற உள்ளூராட்சி சபையும் ஏற்படுத்தப்பட்டது. இவற்றின் தலைவராக அரச அதிபரும் உதவி அரச அதிபரும் பதவி வகித்தனர். சுகாதார அதிகாரிகளும் இவற்றில் இடம் பெற்றிருந்தனர். பொது சுகாதார பணிகளை இவை மேற்கொண்டன.

இந்த லோக்கல் போர்டின் தலைவராக அரச அதிபர் இருந்தபோதிலும் சொத்து அடிப்படையில் வாக்குரிமை பெற்றவர்கள் வாக்களிப்பின் ஊடாக பிரதிநிதிகளை தெரிவு செய்யும் நடைமுறை கொண்டுவரப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்டவர்கள் உத்தியோக பற்றற்ற உறுப்பினர்களாக வீற்றிருந்தனர். மக்களின் சுகாதார நலன்களை பேணி வந்த சுகாதார சபை 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை செயலாற்றி வந்தது.

19ஆம் நூற்றாண்டின் முதல் 40 ஆண்டு காலத்தில் மத்திய அரசின் அதிகாரங்கள் படிப்படியாக மக்கள் பிரதிநிதிகள் வசம் ஒப்படைக்கப்படும் நடைமுறையை காண முடிந்தது. 1920 களில் ஆறு நகர சபைகள் உருவாக்கப்பட்டன. சனிடரி போர்ட், லோக்கல் போர்ட் என்பன அங்கீகரிக்கப்பட்ட நகரங்களில் செயல்பட்டன. உள்ளூராட்சி அமைப்புகளின் அங்கத்தினர்கள் பெரும்பாலானோர் மக்கள் பிரதி நிதிகளாக இருந்ததோடு இதன் தலைவர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். உள்ளுராட்சி நிறுவனங்களை நிர்வகிக்கும் பொருட்டு உள்ளூராட்சி நிர்வாக சபை என்ற பதிய சபை உருவாக்கப்பட்டது.

கிராம சபை முறையில் 1924ஆம் ஆண்டு முதல் மாற்றங்களை காண முடிந்தது. 1924 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையின் பிரகாரம் கிராம சபைத்தலைவர்களாக மக்கள் பிரதிநிதிகளை நியமிக்க வசதி இருந்தாலும் அது கட்டாயப்படுத்தப்படவில்லை. 1933இல் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணை, மக்கள் பிரதிநிதிகளே நியமனம் செய்யப்பட வேண்டும் எனக் கோரியது. இதன் மூலம் உள்ளூராட்சி சபைகள் முற்றிலுமாக ஜனநாயக வடிவம் பெற்றன.

டொனமூர் காலக்கட்டத்தை உள்ளுராட்சி சபை வளர்ச்சியில் ஒரு முக்கிய காலக்கட்டமாகக் கருதலாம். 1931 இல் உள்ளூராட்சி அமைச்சு ஏற்படுத்தப்பட்டது. ஒரு அமைச்சின் கீழ் உள்ளுராட்சி சபைகள் கொண்டு வரப்பட்டன.

1945 இல் உள்ளூராட்சி சேவை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. உள்ளூராட்சி சேவையில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் உத்தியோத்தர்களை இடமாற்றம் செய்தல், ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்தல். பதவி உயர்வு வழங்கல், புதிய நியமனங்களை மேற்கொள்ளல் போன்ற பணிகளை இது மேற்கொண்டது. இதன் மூலம் நாட்டின் சகல உள்ளூராட்சி சபைகளும் ஒன்றிணைக்கப்பட்டன. டொனமூர் பரிந்துரைகளின் மீதாக அமைக்கப்பட்ட அரசியலமைப்பின் ஊடாக உள்ளூராட்சி நிர்வாகம் அபிவிருத்தி அடைந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

1947க்கு முன் கொழும்பு, கண்டி, காலியில் மாத்திரமே மாநகர சபைகள் இருந்தன. இதன் பின் யாழ்ப்பாணம், குருணாகல், நுவரெலியா ஆகிய இடங்களில் நகர சபைகள் ஏற்படுத்தப்பட்டன. 1960இல் தெஹிவளை - கல்கிசை நகர சபையும் 63 இல் மாத்தளை மற்றும் பதுளையிலும் நகர சபைகள் ஏற்படுத்தப்பட்டன.

1947இல் பாராளுமன்ற நடைமுறை அமுலுக்கு வந்த பின்னர் நாட்டின் உள்ளூராட்சி முறையின் முக்கியத்துவம் அதிகரிக்கத்தொடங்கியது. உள்ளூராட்சி முறை இன்று மத்திய அரசின் முக்கிய அங்கம். இன்று உள்ளூராட்சி முறையானது, மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை, மாகாணசபை என நாடெங்கும் பரவலாக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைகளை அரசியல் பயிற்சிக்கல்லூரிகள் என்றும் அழைக்கலாம். அரசியல்வாதிகள் தம்மை பட்டை தீட்டிக்கொள்வது இங்கே தான். உதாரணம்: ஆர்.பிரேதாச. அரசு பேரண்ட பொருளாதாரக் கொள்கைகளையே செயற்படுத்தும். உள்ளூராட்சி மன்றங்களினால் சிறிய பொருளாதார திட்டங்களை அந்தந்த பிரதேச சூழல், தட்ப வெப்ப வேறுபாடுகள், வளங்கள் என்பனவற்றுக்கு ஏற்ப செயல்படுத்த முடியும். இச்சபைகள் தத்தமது பகுதி சார்ந்த சமய கலாசார, பாரம்பரிய தன்மைகளை வளர்த்தும், செப்பனிட்டும், ஊக்குவிக்கும் வகையிலும் செயல்பட முடியும். தமிழ் பிரதேசங்களை எடுத்துக்கொண்டால் தமிழ்மொழி வளர்ச்சி, உத்தியோக மட்டத்தில் அதன் பாவனை, பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழியை இடம்பெறச் செய்தல் போன்ற மொழி, கலாசாரம் சார்ந்த விடயங்களில் கரிசனையோடும் எடுத்துக்காட்டாகவும் செயற்பட முடியும்.

**கதிரவன்**

ஒரு சிங்களவர் தமிழ் பிரதேச உள்ளூராட்சி சபைக்கு சென்றால் அவரால் தன் தாய்மொழியில் கருமமாற்றிக்கொள்ள முடியும் என்பதை முன் எடுத்துக்காட்டாக செயல்படுத்தி தென்னிலங்கைக்கு அந்தச் செய்தியை தெரிவிக்கவும் முன்வர வேண்டும்.

தமிழ்பேசும் மக்கள் பிரதிநிதிகளின் வசம் உள்ள உள்ளூராட்சி சபைகளை தமது பிரதேச அபிவிருத்திக்காக முற்றிலுமாக பயன்படுத்தி முன்மாதிரியான சபைகளாகவும் இயங்கச்செய்ய வேண்டும். செய்வார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு.



# வாழ்வதற்கே உணவு என்றால் நர மாமிசத்தை விலக்கி வைப்பானேன்?



(கடந்த இதழ் தொடர்)

உதைப்பந்தாட்டத்தின் மூலமும் நீங்கள் மோட்சத்தை அடையலாம் என்று சுவாமி விவேகானந்தர் கூறியிருக்கின்றார். இதைக்கேட்டு பலர் வியந்தபோது உதைப் பந்தாட்டத்தில் ஈடுபடும்போது அவ்விளையாட்டு வீரன் ஏனைய விஷயங்கள் அனைத்தையுயே மறந்து, எதிரி கையில் சிக்காமல் எப்படி பந்தை பாதுகாப்பது, அதை இலக்கை நோக்கி எப்படி நகர்த்திச்செல்வது என்பதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்தியிருப்பான். வேறு எதுவுமே அவனுக்கு ஞாபகம் வராது. இது ஒரு வகையான சாதகம். இவ்வாறு மனதை ஒரு நிலையில் தொடர்ந்து குவிக்க முடியுமானால் அவரால் முக்தியை எட்ட முடியும் என்று விவேகானந்தர் இதற்கு விளக்கம் கூறியிருந்தார்.

ஓஷோ என தற்போது அறியப்படும் ரஜ்னீஷ் சாமியார் ஒரு காலத்தில் செக்ஸ் சாமியார் எனத்தவறாக அறியப்பட்டவர். பாலியல் அல்லது தாம்பத்திய உறவின் மூலமும் மனதை உயர் நிலைக்கு இட்டுச் செல்லலாம் என இவர் கூறியபோது, அதைப் பலர் தவறாக எடுத்துக் கொண்டு செக்ஸ் சாமியார் என்ற பட்டத்தை சூட்டினார்கள். அவர் சொல்ல வந்தது, காம சக்தியை சரியாக, முறைப்படி பயன் படுத்தினால் மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும் எள்பதைத்தான். முறையான தாம்பத்திய வாழ்வில் ஈடுபடும் கணவனும் மனைவியும் உடல், உள வளத்துடன் சுகதேகிகளாக வாழ்வார்கள் என்பது உண்மை. உலகின் ஆதார சக்தியை சரியாகக் கையாண்டால் அது நிறைவையும் மன மகிழ்ச்சியையும் தரும் என்பதோடு பல உடல் மற்றும் மன நோய்களையும் அண்ட விடாது என்பது மருத்துவத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு உண்மை. எனவே இதுவும் ஒரு சாதகம் தான் என்று ரஜ்னீஷ் கூறியதில் தவறு இல்லை.

அவர் தவறாகப்புரிந்து கொள்ளப்பட்டதால் ரஜ்னீஷ் என்ற பெயர் மறக்கப்பட்டு தற்போது ஓஷோ என அவர் அறியப்படுகிறார். அவர் மறைந்தாலும் அவரது நூல்களும் போதனைகளும் பலராலும் விரும்பப்படுகின்றன.

ஒரு மனிதன் வாழ்க்கையை பற்றிய ஒரு தெளிவான சிந்தனையையும் உலகின் மீது பரந்துபட்ட பார்வையையும் தன்னகத்தே கொள்ள வேண்டுமானால் அவன் பல நிலைகளைத்தாண்டிச்செல்ல வேண்டியிருக்கும். கீழ் மட்டத்தில் பல தெய்வங்கள், தேவதைகள் பல்வகை மத கோட்பாடுககள், சடங்குகள், சம்பிரதாயங்கள், கட்டுப்பாடுகள், பிரிவுகள் என பல உபாசனை மார்க்கங்கள் உள்ளன. இவற்றைத்தாண்டி மேலே வரும் போது பிரம்மம் ஒன்றே. அதையே பல பெயரிட்டு அழைக்கின்றனர் என்பதை சாதகன் உணர்கின்றான். அதையும் தாண்டி மேலே செல்லும் போது நாமங்கள் மறைகின்றன. ஒரே பரப்பிரம்மம், அதுவே பல வடிவங்களாகத் தோற்றம் அளிக்கின்றது என்ற உண்மையை சாதகன் அறிகிறான்.

சக்தி, சடப்பொருள் என்ற இரண்டும் மட்டுமே பிரபஞ்சமாகவும் சடப்பொருட்களாகவும் தோற்றமளிக்கின்றன என்பதும் அதுவே சக்தி - சிவனாக அடையாளப்படுத்தப்படுவதாகவும் அவன் உணரும்போது இவ்வளவு காலமாக அவன் நம்பி வந்த வித்தியாசங்கள், பேதங்கள், உயர்வு தாழ்வு, அழகு, அசிங்கம், சுவை, சுவையற்றவை, விருப்பு, வெறுப்பு போன்றவை போலியான தோற்றங்களே என்ற உண்மை அவனுள் பளிச்சிடுகிறது.

இந்த ஒரு சூழலில் அவனால் சாதாரண, பௌதீக உலகில் ஒரு அங்கமாக தொடர்ந்து வாழமுடியாது போகும். அவனது செயல்களும் சிந்தனைகளும் சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியாததால் அவனுக்கும் சாதாரண மனிதர்களுக்கும் இடையில் ஒரு பாரிய இடைவெளி ஏற்பட்டு விடுகி றது. இதனால் அவன் சாதாரண மக்களிடமிருந்து விலகி வாழ வேண் டிய தேவை ஏற்பட்டு விடுகிறது.

சிலர் மாமிசம் சாப்பிடமாட்டார்கள். சிலர் தாவர பட்சணிகள், வேறு சிலர் ஆறு நாள் மாமிச பட்சிகளாக இருந்து ஏழாம் நாள் மட்டும் தாவரப்பட்சணிகளாக மாறி விடுவார்கள். இந்த வாசனை பிடிக்கவில்லை என்ற காரணத்துக்காக மட்டும் ஒரு உணவை சிலர் உண்ண மாட்டார்கள். இந்த மீன் சாரைப்பாம்பை நினைவு படுத்துகிற மாதிரி இருப்பதால் உண்ண மாட்டேன் என்பார் ஒருவர். ஆனால் தொண்டைக்குள் சென்று விட்டால் உணவை வாசனையால், தோற்றத்தால், ருசியால் உடல் அறிவதில்லை. இரசாயன ரீதியா-கவே அறிகிறது. சத்துத் தொகுதிக-ளாக உணவை பிரித்து எங்கெங்கு அனுப்ப வேண்டுமோ அங்காங்கே அனுப்பி விடுகிறது. கழிவை மலமாகவும் சிறுநீராகவும் வெளியேற்றி விடுகிறது.

எனவே ஒரு சாதகன் வாழ்வதற்காகவே உண்பான். அது காய் கனியாகவும் இருக்கலாம், மாமிசமாகவும் இருக்கலாம். கொமாண்டோ படைவீரர்களுக்கான பயிற்சியின்போது உணவு கிடைக்காத ஒரு சூழலில் காட்டில் கிடைக்கக்கூடிய உயிரினங்களை வேட்டையாடி அவற்றை பச்சையாக உண்பது எப்படி - அதற்கான உளவளத்தை எப்படி கட்டி எழுப்பிக் கொள்வது என்பதை சொல்லிக் கொடுக்கிறார்கள். இதையே தான் ஒரு சாதகனும் செய்கிறான்.

இப்போது விஷயத்துக்கு வருவோம். அகோரிகள் நர மாமிசம் புசிப்பார்களா..?

விருப்பு வெறுப்புக்களை கை விட்டவனுக்கு கோழி இறைச்சியும் நெருப்பில் வெந்த மனித மாமிசமும் ஒன்றாகத்தானே இருக்க வேண்டும்? இரத்த வெறி கொண்ட ஒரு மன நோயாளி மனித மாமிசம் ருசிப்பதற்கும், இதற்கும் இடையே நிறைய வித்தியாசம் உண்டு. மாமிசம் உண்பவர்களில் பலர் கோழி இறைச்சி சாப்பிடுவேன், மாட்டிறைச்சி சாப்பிட மாட்டேன் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வார்கள். மாமிசம் சாப்பிடுவேன் என்று வந்த பின்னர் அதென்ன அதை உண்பேன்.. இதை சாப்பிட மாட்டேன் என்று வகைப்படுத்துவது..?

உண்மையான அகோரி அல்லது ஆன்மிகத்தின் உயர்படி நிலைக்கு வந்து விட்ட ஒருவர், அவசியமா-னால் மனித மாமிசம் உண்பார். வாழ்வதற்கே உணவு என்றான பின்னர் மாமிசத்தில் என்ன வித்தியாசம் பாராட்ட முடியும்..? கண்ணாடியைக் கழற்றிவிட்டு பார்த்தால் எல்லாம் ஒன்றாகத்தானே தெரியும்..?

ஷோபனா சக்தி

## மர்ம மனிதன்

வேதம் இறங்கிய மாதத்தில்
பூதம் புறப்பட்டு வந்ததாம்
சேதம் அதிகம் அதனால்
சோகம் உள்ளம் எங்கும்

மர்ம மனிதன் என்பவனாம்
மரத்தில் ஏறித்தாவுகிறான்
கூரை மீது ஏறியங்கு
குதித்து மதிலை தாண்டுகிறான்

கிறீசை உடலில் பூசி
கிலி கொள்ளச்செய்கிறான்
மாறுவேடத்தில் அலையுமிவன்
மர்மம் துலங்குவதெப்போ


மானிடப்பிறவியோ இவன் -
இல்லை
மாற்றுக்கிரகத்தை சேர்ந்தவனோ
ஏனிப்படி எம்மை
வதைக்கின்றான்
ஏதுமறியாமல் தவிக்கின்றோம்

பெண்ணென்றால் பேயும்
இரங்குமாம்
பெண்களையே குறிவைக்கும்
இவன்
பேயை விடக்கொடியவனோ
பேதலித்து நிற்கிறோம்

இரவில் இளைஞருக்கு
தூக்கமில்லை
இரும்புத்தடி, கத்திகள் சகிதம்
ஊரைக்காக்கும் பணியால்
உழைப்புக்கும் போக
வழியில்லை

சமாதானம் வந்ததென்று
சந்தோசத்தில் இருக்க
சண்டாளன் வந்து அதை
கெடுக்க
நிம்மதி குலைந்து இங்கு
நித்தமும் நிர்க்கதியில்
வாழுகின்றோம்.

- பாத்திமா மைந்தன்



நீங்களும்தான்!

எஸ்.ஏ.பி

## வரட்டு கௌரவம் சார்ந்த நமது உணவுக் கலாசாரம்

ஷோபனா

# சாப்பாட்டை வீணடிப்பதில் நமக்கு அப்படி ஒரு ஆனந்தம்..!



வள்ளுவருக்கு வாசுகி அமுது படைக்கும்போது கூரான ஒரு குச்சியையும் வைக்கச் சொல்வாராம். சிந்தும் உணவை குத்தி எடுப்பதற்காக அது பயன்படுமாம். இது தரும் நீதி, உணவை வீணாக்க வேண்டாம் என்பதாகும். தமிழர் கலாசாரத்தில் உணவை எப்படி ஏற்க வேண்டும் என்பதற்கு பல விதிமுறைகள் உள்ளன. சாப்பிடும் முறைகளும் உள்ளன. மேசையில் இருந்து சாப்பிட்டால் காலாட்டிக்கொண்டு சாப்பிடக்கூடாது என்பார்கள் அக்காலத்தில் பாட்டிமார், தட்டில் மிச்சம் வைக்காதே என்று பிள்ளைகளை திட்டுவார்கள்.

வரண்ட பூமியில் வாழும் மக்களுக்கு எப்போதுமே உணவும் தண்ணீரும் கஷ்டம்தான். எனவே இந்த இரண்டையும் எப்படி வீணாக்காமல் பயன்படுத்துவது என்பதில் அம்மக்கள் அதிக கரிசனையாக இருப்பார்கள். நமது உணவு உண்ணும் கலாசாரம் ஐரோப்பியர் வருகையின் பின்னர் நிறையவே மாறிப்போனது. இன்று நாம் 90 சதவீதம் ஐரோப்பிய உணவு கலாசாரத்தையே பின்பற்றி வருகிறோம். சைவமோ, அசைவமோ, இதுதான் உண்மை. பயன்படுத்தும் காய்கறிகள், மாமிசம், பழங்கள் - அவற்றை பதப்படுத்த, சுவையூட்ட, மிருதுவாக்க, பாதுகாக்க பயன்படுத்தும் முறைகள் அனைத்தும் மேற்கத்திய முறைகளே.

சில விஷயங்கள் காலத்தின் கோலத்தால் தவிர்க்க முடியாததாகி விடுகின்றன. நமது உணவு கலாசாரமும் அப்படியாகிவிட்டது. நாம்தான் இலங்கையில் சைவம், அசைவம் என்று தமிழில் சொல்லிக் கொண்டடிருக்கின்றோம். தென் தமிழ்நாட்டில் வெஜ், நான் வெஜ்தான்!

அறுபதுகளில் இறைச்சி அல்லது மீனுடன் ஹோட்டலில் பகல் சாப்பாடு சாப்பிட்டால் 65 சதம் தான் பில் வரும். இன்று 65 ரூபாவுக்கும் சோறு கறி கிடைக்காது. அப்போது மக்கள் நிறைய சாப்பிடுவார்கள். நீரிழிவு, பருத்த உடல் வாகு, இரத்த அழுத்தம் எல்லாம் அப்போது எங்கே போயிருந்தனவோ தெரியாது. கிராமப்புறங்களில் மாலை ஐந்தரை மணிக்கே இரவு சாப்பாடு முடிந்துவிடும். பெரும்பாலானவர்கள் பிளேட் பாவித்து உண்பதில்லை. குண்டான், மண்சட்டி என்பவற்றிலேயே சோறு போட்டு சாப்பிட்டு விட்டு பின்னர் அதிலேயே தண்ணீர் வார்த்து பருகி ஏப்பம் விடுவார்கள். சோறு கறிகளை பிளேட்டில் போட்டு நாட்காலியில் அமர்ந்து உண்ணும் வழக்கம் கிராமப்பகுதிகளுக்கு 75 களின் பின்னரேயே வந்து சேர்ந்தது. இன்றும் கூட பலர் சாப்பிட்டு முடிந்த தட்டிலேயே தண்ணீர் ஊற்றி பருகுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

அக்காலத்தில் ஹோட்டல்களில் சோறு சமைக்கும்போது கூடவே பாக்குக்கொட்டைகளையும் போட்டு அவிப்பார்களாம். பாக்கில் இருக்கும் துவர்ப்புச்சுவை, சோற்றில் கலந்து சாப்பிட வருபவர்களின் பசியை அடக்கிவிடுமாம். ''நிறைய பசியோடு போனேன் ஹோட்டலுக்கு. ஆனால் நினைத்த மாதிரி சாப்பிட முடியவில்லை'' என்று எவராவது சொன்னால் ''அப்படியா, அப்படியானால் அந்த ஹோட்டலில் பாக்கு சேர்த்து சோறு வடிப்பார்களாக இருக்கும்..'' என்று கேட்டுக் கொண்டிருப்பவர் சமாதானம் சொல்வார்.

பிளேட்டை சுற்றிவர பரிமாறப்பட்டிருக்கும் கறி வகைகளை எடுத்து சோற்றில் போட்டு குழைத்து, உருட்டி (ரவுண்டு கட்டி) வாயில் பெரிய கவளமாக வைத்த அடுத்த கணமே அடுத்த கவளத்தை தட்டில் தயார் செய்யத்தொடங்கிவிடுவார்கள். வேகமான இந்த செயற்பாடு, பிளேட் சாப்பாட்டுக்கு உகந்தது இல்லை என்பதால் மேசை எல்லாம் சிந்தி சிதறி நாறடித்து விடும்.

இதில் வெட்கக்கேடான விஷயம் 50,60 களில் பிளேட்டில் சாப்பிடக்கற்றுக்கொண்ட காலத்தில் சிந்தி சிதறி சாப்பிட்ட நம்மவர்கள் மூன்று தலைமுறைகளின் பின்னரும் சிந்தி சிதறித்தான் நமது வீடுகளிலும் ஹோட்டல்களிலும், அலுவலக கண்டீன்களிலும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கும் பலர், உணவுத் தட்டில் உள்ள எல்லா கழிவுகளையும் - கறிவேப்பிலை, ரம்பை, மீன், கோழி எலும்புகள், வெங்காயம், பச்சை மிளகாய் போன்றவற்றை கழிவு தொட்டிக்குள் போடாமல் கழுவும் தொட்டியிலேயே அவற்றை போட்டு விடுகிறார்கள். இதனால் தொட்டியில் நீர் தேங்கி நிற்கத்தொடங்கும். அலுவலக கண்டீனில் அல்லது ஹோட்டல்களில் கழுவும் குழாய்த்தொட்டிகள் பெரும்பாலும் பி.ப.இரண்டு இரண்டரை மணியளவில் கீழே இறங்க முடியாமல் அழுக்கு நீர் நிறைந்து காணப்படுவது வாடிக்கை. காரணம், சாப்பிடும் கலாசாரம் இன்றும் நமக்கு கை வரவில்லை.

குப்பைத்தொட்டியில் கொட்ட வேண்டியதை கழுவும் தொட்டியில் கொட்டக்கூடாது என்பதை அறியாத இவர்கள் நிச்சயம் பாமரர்கள் அல்ல. நன்கு படித்தவர்கள், உயர் அதிகாரிகள், சொந்த வீடு, வாகனம் என வசதியாக வாழ்பவர்கள், பொறுப்பான பதவிகளில் இருப்போர்தான் இவ்வளவு அநாகரிகமாக பொது இடங்களில் நடந்து கொள்கின்றனர்.

வாடிக்கையாளர்கள் அதிகம் சாப்பிட்டால் பிசினஸ் நஷ்டமாகி விடும் என்று எண்ணிய அன்றைய ஹோட்டல்காரர்கள், சோறுடன் பர்க்கைப்போட்டு சமைத்தார்கள் என்றால் பிற்காலத்தில் 'எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடுங்கள்' என்ற பு:.பே பாணி உணவுப் பரிமாறல் வழக்கத்துக்கு வந்தது. அனேகமாக 80ம் ஆண்டின் பின்னரேயே :.புபே பாணி கொழும்பு ஹோட்டல்களில் அறிமுகமானது. பு:.பேயின் நோக்கமே, தினுசு தினுசான நளபாகங்களை பல நிறங்கள், வாசனைகள் கொண்டதாக தயாரித்து அவற்றை வாடிக்கையாளர்கள் கண்களால் பார்க்கச்செய்வதும் அவற்றை ருசி பார்க்கச்செய்வதுமாகும். எவ்வளவு உணவுகள் பரப்பிக்கிடந்தாலும் எவராலும் ஒரு அளவுக்கு மேல் சாப்பிட முடியாது. ஆசை ஆசையாக நிறைய அயிட்டங்களை தட்டில் வைத்துக் கொள்ளும்போது மனம் நிறைவடைந்துவிடும். வயிறும் நிறைந்து விடும். உணவின் பின்னர் இனிப்பு வகைகளை உண்ண வயிற்றில் இடம் விடத்தானே வேண்டும்..! நவீன ஹோட்டல்காரார்களின் இந்தப்புதிய சிந்தனை பாக்கு சிந்தனையை விட முற்றிலும் வேறானது!. சோறு போடும்போது குறைவாக பிளேட்டில் போடுகிறார்களே என்ற எண்ணம் ஏற்படும். ஆனால் சாப்பிட்டு முடிந்ததும் வயிறு நிறைந்திருக்கும். பசியோடு இருக்கும்போது நிறைய உண்ண வேண்டும் போல் இருக்கும். சாப்பிடத்தொடங்கியதும் அந்த எண்ணம் மறைந்துவிடும்! ஏனெனில் ஆசைப்படும் அளவுக்கு எவராலும் உண்ண முடியாது என்பதே உண்மை..!

இன்று உண்வுப்பண்டங்களின் விலை அதிகமாகிவிட்டது. ஹோட்டல்களில் சாப்பாடு 130 ரூபாவில் ஆரம்பித்து ஆயிரம் ரூபாவை தாண்டிச்செல்கிறது. இருந்தாலும், பணம் செலவழித்து பெறும் உணவை சரியாக உண்ண நாம் இன்னும் பழகவில்லை.

ஒரு திருமண வீட்டுக்குச்சென்று முக்கால் வாசி சாப்பாடு முடிந்த நிலையில் சாப்பிட்ட பீங்கான்கள் அல்லது இலைகள் குவிக்கப்பட்டிருக்கும் இடத்தை எட்டிப்பார்த்தீர்களானால், சாப்பிட்டவர்கள் தமது தட்டுகளில் நிறையவே சோறு கறிகளை மீதம் வைத்திருப்பதை அவதானிக்கலாம். சமைக்கப்படும் மொத்த உணவுப்பதார்த்தாங்களில் ஒவ்வொரு திருமண வைபவங்கள், விருந்துபசாரங்கள் மற்றும் ஹோட்டல்களில் கால்வாசி பகுதி குப்பைத்தொட்டிகளையே சென்றடைகின்றன.

தேவையான அளவு பறிமாறிக் கொள்ளுங்கள் என்பதே செல்:.ப் சேர்விஸ் முறையின் நோக்கம், இதன் மூலம் உணவுப்பதார்த்தங்கள் வீணாவதைத்தடுக்கலாம் என்று கருதினார்கள். ஆனால் நாமோ நமது வயிற்றுக்கு என்ன தேவை, எவ்வளவு தேவை என்பதை அறியாமல் பேராசையுடன் தட்டில் போட்டுக்கொண்டு, இறுதியில் சாப்பிட முடியாமல் பெறுமதியான பதார்த்தங்களை வீணடித்து விடுகிறோம். நாமே நமக்கு பறிமாறிக் கொள்ளும் முறையின் கீழ் ஒரு வாடிக்கையாளர் தனக்கு தேவையானதை திரும்ப வந்து பறிமாறிக்கொள்ளலாம், ஆனால் நாம் என்ன செய்திருக்கிறோம்..?

நாம் பணம் செலுத்திவிட்டோம், சாப்பிடுவதும் சாப்பிடாததும் நம் வேலை அல்லது நாம் இங்கே கௌரவ விருந்தினர்கள். நம்மை யாரும் கேள்வி கேட்க முடியாது என்று கர்வத்துடன் உணவுகளை வீணடிக்கிறோம்.

ஜெர்மனி ஹம்பேர்க் நகரில் சில இந்திய நண்பர்கள் உணவகத்துக்கு சாப்பிடச்சென்றார்களாம். அங்கே ஜெர்மனிய வாடிக்கையாளர்கள் தமக்கு தேவையான உணவுகளை மட்டும் ஆர்டர் பண்ணி அவற்றை மிச்சம் மீதி வைக்காமல் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். நல்ல பசியில் இருந்த இந்திய நண்பர்கள் நிறைய உணவுப் பதார்த்தங்களை ஆர்டர் பண்ணினார்கள். அவை மேசைக்கு வந்ததும் வெட்டினார்கள். ஆனாலும் இறுதியில் மூன்றில் ஒரு பங்கு உணவு மீதமாகி விட்டது. பில்லைக்கொடுத்துவிட்டு வெளியே வரும்போது யாரோ அழைப்பது மாதிரித் தெரியவே திரும்பிப் பார்த்திருக்கிறார்கள்.

அங்கே அமர்ந்திருந்த மூன்று மூதாட்டிகள் உணவகப் பெறுப்பாளரிடம் ஏதோ முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். பொறுப்பாளர் இவர்களிடம் நீங்கள் உணவை மீதம் வைத்ததை அவர்கள் ஆட்சேபிக்கிறார்கள் என்று ஆங்கிலத்தில் கூறியிருக்கிறார். இவர்களுக்கு ரோஷம் வந்து நாங்கள் தான் பணம் செலுத்தி விட்டோமே..! அப்புறம் இவர்களுக்கென்ன வந்தது..? என்று திருப்பிக்கேட்டிருக்கிறார்கள்.

அப்போது ஒரு மூதாட்டி, பணம் உங்களுடையது ஆனால் உணவு என்பது பொதுச்சொத்து, இன்று எத்தனையோ பேர் உணவு கிடைக்காமல் தவிக்கிறார்கள். பொதுச் சொத்தை வீணாக்கும் உரிமை உங்களுக்குக் கிடையாது. என்று சொல்லியாபடியே தன் கைபேசியில் யாருடனோ தொடர்பு கொண்டார்.

சில நிமிடங்களில் சமூக பாதுகாப்பு சேவைப்பிரிவில் இருந்து சீருடை அணிந்த ஒருவர் அங்கு வந்திருக்கிறார்.

(31ஆம் பக்கம் பார்க்க)

### வாடா மலர்



பாரதி

அறுபதுகளில் தமிழ்ப் படங்களில் நடிகைகளுக்குப் பஞ்சம், தேவிகா, பத்மினி, சரோஜா தேவி, பத்மினி, சாவித்திரி, பின்னர் ஜெயலலிதா ஆகியோருக்கு அப்பால் புதிய நடிகைகள் அறிமுகமாகவில்லை. இக்கால கட்டத்தில், 1965 இல் திரையுலகில் அறிமுகமாகி சிவாஜி, எம்.ஜி.ஆர்.ஜெய்சங்கர், ரவிச்சந்திரன் எனப்பல முன்னணி நடிகர்களுடன் நடித்த தாமரை அழகி நடிகையே பாரதி. இப்போது சென்னையில் அமைதியாக காலத்தை கழித்துக் கொண்டிருந்கிறார்.





வாழ்வகம் இல்லத்தின் முகப்புத்தோற்றம்

# விழிப்புலனற்றவர்களுக்கு ஒளிவிளக்காக திகழும் சுன்னாகத்து வாழ்வகம்

**கனகசூரியர்**

குறைபாடுள்ள பிள்ளையொன்று பிறந்துவிட்டால் அப்பிள்ளையை சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கும் பழைய கால நிலைமை இப்போது முற்றிலுமாக மாறிவிட்டது. நாகரீக வளர்ச்சியும், கல்வியறிவில் ஏற்பட்ட முன்னேற்றகரமான நிலைமைகளும், குறைபாடுள்ள பிள்ளையை சாதாரண செயற்பாடுடைய பிள்ளைகளுள் ஒருவராகவே கருதி, அவர்களுக்குரிய சகல வசதிகளும் கிடைக்கக்கூடிய வகையிலான ஒரு நிலைமை இப்போது தோன்றிவிட்டது.

இந்த செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்துச்செல்லும் ஒரு இல்லமாக 'வாழ்வகம்' விளங்குகிறது. வடபகுதி கிராமமான சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் மிகப்பரந்த நிலப்பரப்பில் நல்லதொரு சூழலில் 'கல்வியே ஒளி, கல்வியே வழி' என்பதனை மகுடவாசகமாக கொண்டு செயற்பட்டுவரும் இந்த இல்லத்தின் தலைவராகவும், பொறுப்பாளராகவுமிருந்து சிறப்பான வகையில் சேவையாற்றி வருபவர் ஆறுமுகம் ரவீந்திரன். இவரும் விழிப்புலன் வலுவிழந்த ஒருவர் தான்.

1986இல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இணைந்து 1990 இல் பட்டதாரியாக' வெளியேறினார். இவருடன் பல்கலைக் கழகத்தில் பயின்ற மாணவியொருவரை காதல் திருமணம் செய்து கொண்டார். இவர் இப்போது சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். 2001ஆம் ஆண்டில் கல்வி முதுமாணிப்பட்டத்தை பெற்றுக்கொண்ட ஆறுமுகம் ரவீந்திரன் இப்போது யாழ். தேசிய கல்வியியற்கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றி வருகிறார்.

இந்த இல்லம் தோற்றம் பெறுவதற்கு காரணமாக இருந்தவர் செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி என்ற ஆசிரியையாகும்.

இவரது பெருமுயற்சியால் 1988 ஆம் ஆண்டு தெல்லிப்பழை கிராமத்தில் வாடகை வீடொன்றில் இதன் செயற்பாடு ஆரம்பமானது. 1990 ஆம் ஆண்டில் போர்க்காலச் சூழ்நிலைகளினால் மக்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்த போது இல்லத்தின் செயற்பாடுகள் தடைப்பட்டன. 1992 ஆம் ஆண்டிலிருந்து உடுவில் கிராமத்திலுள்ள வாடகை வீடொன்றில்



வாழ்வகம் இல்லம் தோற்றம் பெறுவதற்கு பெரிதும் காரணமாகவிருந்த செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி

இல்லம் மீண்டும் இயங்கத் தொடங்கியது. 1995ஆம் ஆண்டில் ஏற்பட்ட மற்றுமொரு இடப்பெயர்வின் காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்த இல்லத்தின் செயற்பாடுகள் மீண்டும் 1997ஆம் ஆண்டிலிருந்து மானிப்பாயிலுள்ள வாடகை வீடொன்றில் ஆரம்பமாகி இடம்பெற்றன. அப்போது சமூக சேவை திணைக் களத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற கடிதமொன்றில் வாழ்வக இல்லத்திற்காக கட்டிடமொன்றை அமைப்பதற்கு நிதியுதவி செய்வதாகவும், அதற்காக சொந்தக்காணி ஒன்றை பெற்றுக்கொள்ளும்படியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அவ்வேளையில் ஆறு.திருமுருகன் சொற்பொழிவாற்றுவதற்காக இலண்டன் சென்றபோது அவரது முயற்சியின் காரணமாக அங்குள்ள தமிழ் அனாதைகள் நம்பிக்கை நிதியத்தினர் நன்கொடையாக வழங்கிய ஒரு தொகை நிதியுதவியுடன் தற்போது வாழ்வகம் அமைந்துள்ள 32 பரப்பு காணியை கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. RRAN எனப்படும் வட பிரதேசத்துக்கான புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம் ஊடாக சமூக சேவைத் திணைக்களம் ஆரம்பகட்ட வேலைகளுக்கான நிதியுதவியை வழங்கியிருந்தது. இந்த வகையில் அமைக்கப்பட்டு 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதியன்று இந்த சொந்த கட்டிடத்தில் ஆரம்பமான வாழ்வகம் இப்போது படிப்படியான வளர்ச்சி நிலையை சந்தித்து வருகிறது என்கிறார் வாழ்வகத்தலைவர் ஆ.ரவீந்திரன்.



ஆறுமுகம் ரவிந்திரன்

விழிப்புலன் வலுவிழந்தோருக்கான இல்லமான வாழ்வகம் ஆரம்பமாவதற்கு அடிப்படையாகவிருந்த காரணிகள் பற்றி சொல்லும்படி கேட்டோம்.

1972ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட கல்வித்திட்டமொன்று நடைமுறைக்கு வந்தது. இதன்படி விழிப்புலன் வலுவிழந்த மாணவர்கள் சாதாரண பாடசாலைகளிலும் இணைந்து அங்குள்ள மாணவர்களுடன் சேர்ந்து கல்வி கற்பதற்கு வசதி கிடைத்தது.

ஆனால் வடபகுதியை பொறுத்தவரையில் இத்தகைய மாணவர்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை இருந்தது. இந்த வேளையில் தான் அன்னலட்சுமி அம்மையாரின் பங்களிப்பு கிடைத்தது. இவர் மேல் மாகாணத்தில் ஆசிரியராக சேவையாற்றி வந்தவர்.

1972 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து யாழ் மாவட்டத்தில் தனது ஆசிரியப்பணியை பொறுப்பேற்றுக்கொண்டார். இவர் வடபகுதியிலுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று பார்வையற்ற பிள்ளைகளை அரவணைத்து சாதாரண பாடசாலைகள் பலவற்றில் அவர்கள் கல்வியைத் தொடர வழிவகுத்தார்.

அன்னலட்சுமி அம்மையார் மனதில் பார்வையற்ற மாணவர்கள் தங்கியிருந்து தமது கல்வியை மேற்கொள்ளக்கூடியதாக இல்லம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் நீண்ட காலமாகவே இருந்து வந்தது. இதன் அடிப்படையில் தோற்றம் பெற்றதுதான் இந்த வாழ்வகம் என்கிறார் ரவீந்திரன்.

விழிப்புலன் வலுவற்ற பிள்ளைகள் தங்கியிருந்து தங்கள் கல்வியை தொடருவதற்காக வடபகுதியில் ஆரம்பிக்கபட்ட முதலாவது இல்லம் இதுவாகும்.

இதேயிடத்தில் 2002 ஆம் ஆண்டில் 23 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த இல்லத்தில் இப்போது 20 ஆண்களும், 23 பெண்களுமாக மொத்தம் 43 பிள்ளைகள் தங்கியிருந்து கல்வி கற்று வருகிறார்கள்.

இவர்களுள் 5 முதல் 25 வரையிலான வயதிற்குட்பட்டவர்கள் இருக்கிறார்கள்.

ஆண் பிள்ளைகள் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும், பெண் பிள்ளைகள் சுன்னாகம் இராம நாதன் கல்லூரியிலும் கல்வியை தொடர்கிறார்கள். யோகலிங்கம் சுதாகரன் என்ற மாணவனும், டில்வியா ஞானசீலன், ராஜலட்சுமி மார்க்கண்டு, றேகா கிருபானந்த தேவன் ஆகிய மாணவிகளும் யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறார்கள். இந்த வாழ்வகம் இல்லத்தில் ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்குமான தனித்தனியான விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சாதாரணமாக கண் பார்வையுள்ளவர்களே கணினியை செயற்படுத்தி வருவதை பார்த்திருக்கிறோம். இந்த இல்லத்தில் தங்கியிருக்கும் விழிப்புலன் வலுவற்ற பிள்ளைகளுக்கும் கணினிப் பயிற்சி வழங்கப்படுகிறது. சாதாரண விசைப்பலகையைத்தான் இதற்கு பயன்படுத்துகிறார்கள். ஆனால் விசேடமாக பேசும் மென்பொருன் கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

கணினியை செயற்படுத்தும்போது திரையில் வரும் எழுத்துக்கள் என்ன என்பதை அந்த பேசும் மென்பொருள் சொல்லும். அப்போது அதனைக்கேட்டு அறிந்துகொள்ள முடிகிறது.

இங்கு கல்வி கற்றவர்கள் ஆசிரியர்களாகவும் மட்டுமன்றி அரச உயர்பதவிகளிலும் இருக்கிறார்கள் என்பது ஆச்சரியத்துக்குரிய உண்மை.

வலிகாமம் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் நடந்து வரும் மாற்று ஆற்றலுடையோர் மெய்வல்லுனர் போட்டியில் எங்கள் வாழ்வகப்பிள்ளைகளும் கலந்து கொண்டு வருகிறார்கள். ஓட்டம், குண்டெறிதல் போன்ற போட்டிகளில் இவர்கள் பங்குகொள்கிறார்கள். கடந்த மூன்று வருடங்களாக தொடர்ச்சியாக முதலாவது இடத்தை பெற்று வருவதன் மூலம் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துள்ளோம் என்கிறார் ரவீந்திரன் பெருமையுடன்.

வாழ்வகப்பிள்ளைகளின் நலன் பேணும் வகையில் வெளியிலிருந்து எத்தகைய உதவிகள் கிடைத்து வருகின்றன?

''தனிப்பட்ட அன்பர்களும், நிறுவன ரீதியிலான அமைப்புகளும் அரசியல் பிரமுகர்களும் அவ்வப்போது வழங்கி வரும் உதவிகளுடன் எங்கள் செயற்பாட்டை முன்னெடுத்துச்செல்கிறோம். சிலர் தங்கள் குடும்பத்தை சேர்ந்தவர்களது பிறந்த தினம், திருமண ஆண்டு நிறைவு மற்றும் குடும்பத்தினரது அல்லது உறவினர்களின் நினைவு தினங்கள் போன்ற நிகழ்வுகளின்போது இங்குள்ள பிள்ளைகளுக்கு உணவு வழங்குவதற்கென நிதியுதவிகளை செய்வது வழக்கம். சில பத்திரிகை நிறுவனங்கள் தங்களது வெளியீடுகளை இல்லத்திற்கு இலவசமாக வழங்கி வருகின்றன. தினமும் எங்கள் பிள்ளைகளுக்கு இவற்றை வாசித்து வருகிறோம்.

''அண்மையில் இந்தியாவிலுள்ள க்ரியா அகராதி நிறுவனம் பிரெயில் பதிப்பு தமிழ் அகராதிகளை வாழ்வகத்திற்கு அன்பளிப்பு செய்தது. இந்திய மொழிகளில் முதன்முதலாக க்ரியா அகராதி நிறுவனம் தற்கால தமிழ் அகராதியை பிரெயில் பதிப்பாக வெளியிட்டிருப்பதுடன் முதன்முதலாக அவற்றை எங்கள் வாழ்வகம் இல்லத்திற்கே அன்பளிப்பாக வழங்கியிருப்பதையும் சிறப்பாகச்சொல்ல வேண்டும். க்ரியா நிறுவனத்தின் பதிப்பாசிரியர் எஸ்.இராமகிருஷ்ணனின் ஏற்பாடாக இலங்கை நாணயத்தின்படி ஏழு இலட்சத்திற்கும் மேலான பெறுமதியான 53 அகராதிப்பிரதிகள் எங்களுக்கு கிடைத்துள்ளன" என்று கூறுகிறார் ரவீந்திரன்.


இறுதியாக ஒன்று, இந்த வளாகத்தில் பிரார்த்தனை மண்டபத்துக்கான கட்டட வேலைகளும் அன்னலட்சுமி அம்மையாரின் சிலை வைக்கப்பட்டுள்ள கட்டடத்தின் கீழ்த்தளம் அலுவலகத்துக்காகவும் மேல்தளம் மாநாட்டு மண்டபத்துக்காகவும் என வடிவமைக்கப்பட்ட கட்டட வேலைகளும் அரைகுறையாக உள்ளன. வசதி படைத்த அன்பர்கள் முன்வந்து இப்பணிகள் பூர்த்தியடைய உதவினால் அது உண்மையிலேயே மகேசன் சேவையாக இருக்கும்.




**முடிந்தவர்கள் தயவு செய்து உதவுங்கள்**

## அன்றும் இன்றும்

மணி ஸ்ரீகாந்தன்




இங்கே நூறு வருடங்களுக்கு முன்னர் 1900 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கொழும்பு யூனியன் பிளேசையும், இன்றைய யூனியன் பிளேசையும் காண்கிறீர்கள். வலப்பக்கமாக காணப்படும் கட்டடமான சமசமாஜக்கட்சிக் காரியாலயம் இன்றைக்கும் அப்படியே தோற்றமளிப்பது விசேஷமான அம்சம். சரி, நூறு ஆண்டுகளுக்கு முன்னர் விசாலித்து நின்ற அதே மரம்தானா இன்றைக்கும் அங்கே நின்று கொண்டிருக்கிறது?

# தன்னை மறந்து சிகரட்டை சுண்டி விட்டபோது...

*எழுபதுகளில் நான் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளனாகச்சென்று செய்தி சேகரித்து வருவேன். அப்போது எனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்கள் சிலவற்றை இங்கே வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.*

நீர்கொழும்பு நகருக்கு ஒரு சில கிலோமீட்டர் தூரத்தில் புறநகர்ப்பகுதியொன்றில் இருந்தது சில்வாவின் கடை. அருகே புனித அந்தோனியார் தேவாலயம். இதனால் அப்பகுதியில் ஓரளவு சனப்புழக்கம் இருப்பது வழக்கம். எனவே சில்வாவின் கடை எப்போதும் பரபரப்பாகவே இருக்கும்.

சில்வாவின் கடை சின்னதுதான். ஆனால் எந்தப்பொருளை கேட்டாலும் இருக்கு, வேணுமா என்றுதான் பதில் வருமே தவிர இல்லை என்று சொல்லவே மாட்டார். தொகையாக வாங்க முடியாவிட்டாலும் எந்தவொரு பொருளையும் சில்லறையாக சில்வாவின் கடையில் வாங்க முடிந்தது.

சில்வாவுக்கு 40 வயது தான் ஆகிறது. அன்பான மனைவி, ஆசைக்கொரு மகள், ஆஸ்திக்கொரு மகன்.

பண்டிகைக்காலம் வரும்போது சில்வாவின் கடையில் விற்பனை களை கட்டும். இதனால் இம்முறை ஓரளவு அதிகமாகவே பட்டாசுகளை வாங்கி வைத்திருந்தார் சில்வா. கடந்த வருடம் பண்டிகை காலத்தில் மூன்று முறை பட்டாசு வாங்கித்தான் வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. இதனால் தான் இம்முறை அதிக பட்டாசுகளை வாங்கி வைத்திருந்தார் சில்வா.

ஆனால் பட்டாசுகளை அடுக்கி வைத்திருந்த அறைச் சுவற்றில் முதல் நாள் மழையினால் ஏற்பட்ட ஒழுக்கு காரணமாக பட்டாசுகள் கொஞ்சம் ஈரமாகி நமத்துப்போயிருந்தன. அடுத்த நாள் காலை முதல் வேலையாக ஈரமாகிப் போயிருந்த பட்டாசுகளை வீட்டின் பின்புறத்தில் வெயிலில் காயவைத்து அருகில் நாற்காலியில் அமர்ந்து பட்டாசுகள் காய்வதை பார்த்துக்கொண்டிருந்தார் சில்வா.

அந்த நேரம் தான் அங்கே வந்தான் குமார. சில்வாவின் பால்ய கால நண்பன். இரண்டு வருட காலத்துக்குப்பின் இப்போது தான' சில்வாவை பார்க்க வருகிறான். குமாரவை கண்டதும் சில்வாவுக்கு உள்ளம் பூரித்துப்போனது. இருவரும் ஆனந்தமாக கதைத்தனர்.



இரண்டு வருடங்களுக்குப்பின் நண்பனை காணவந்த குமார சும்மா வரவில்லை. பான பதாதிகளுடன் தான் வந்திருந்தான்.

சில்வாவின் மனைவி செய்து கொடுத்த முட்டைப்பொறியல், கோழி குறுமா ஆகியவற்றுடன் தாகசாந்தி இனிதே நடந்து முடிந்தது.

தாகசாந்தி முடியும் வரை முற்றத்தில் காய்ந்து கொர்டிருந்த பட்டாசுகளை பார்த்துக்கொண்டிருந்த சில்வாவின் மனைவி வீட்டுக்குள் நுழைந்தாள்.

பானம் தந்த உற்சாகத்தில் சில்வாவும் குமாரவும் வெளியே வந்தார்கள். பழைய விஷயங்களை தம்மை மறந்த பேசிக்கொண்டிருக்கையில் கையில் இருந்த சிகரட் பாக்கெட்டை நீட்டினான் குமார. இருவரும் இரண்டு சிகரட்டுகளை பற்ற வைத்துக்கொண்டார்கள்.

பேச்சு சுவாரஷ்யத்தில் பட்டாசுகளுக்கு அருகே இருந்த நாற்காளியில் அமர்ந்து கொண்டார் சில்வா. அந்தக்கால அனுபவங்களை மீண்டும் கிளறிக்கொண்டிருந்தார்கள். அந்தக்கால அனுபவங்களை நினைத்து நினைத்து வாய் விட்டு சிரித்தனர்.

பேச்சுக்கு நடுவே குமாரவுக்கு பாத்ரூம் போகும் அவசரம் வந்தது. இரு வருகிறேன் என்று சில்வாவிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குள் போனான் குமார.

பழைய ஞாபகங்கள், சில்லறை குறும்புகள் பசுமையாக நெஞ்சில் மேலெழுந்து நிற்க உடல் சிலிர்த்துப்போனார் சில்வா. இந்தக்குதூகல சிலிர்ப்பில் ஆழ்ந்'து போயிருந்த சமயத்தில் கையில் இருந்த சிகரட்டு விரலைச்சுட்டது. கையை உதறினார். சிகரெட்டு மேலே சென்று காய்ந்து போயிருந்த பட்டாசுகளின் நடுவே விழுந்தது.

டுமீல் டுமீல் என தன்னைச்சுற்றி பட்டாசுகள் வெடிக்கும் சத்தத்தை கேட்டபோது தான் பட்டாசுகள் காயவைத்திருந்தமை சில்வாவின் ஞாபகத்தில் உறைத்தது. எழும்ப முயன்ற சில்வா தள்ளாடி கீழே குப்புற விழுந்தார்.

பட்டாசு வெடிக்கும் சத்தம் கேட்டு குமாரவும், சில்வாவின் மனைவி பிள்ளைகளும் ஓடி வந்தனர். நண்பனைக்காப்பாற்ற வெடிக்கும் பட்டாசுகளுக்குள் நுழைந்தான் குமார. பட்டாசு சத்தத்தில் அண்டை அயலவர்கள் ஓடி வந்தார்கள். சில்வாவையும் குமாரவையும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றார்கள்.

பலத்த தீக்காயங்களுடன் இருந்த சில்வா நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தான். குமார பலத்த காயங்களுடன் இருந்தபோதும் உயிர் தப்பினான். ஆனால் உடல் முழுதும் வடுக்கள்.

ஏ. மதுரை வீரன்



### ஒரு வயதைத் தாண்டிய பின்னரும்...

குழந்தை பிறந்த பின் வீரிட்டு அழும். அது போல குறிப்பிட்ட மாதங்களுக்கு பின் தவழும். அதன் பின் ஆ..ஊ.. என்று ஏதோ பேசும். ஒரு வயதை தாண்டிய பின்னும் பேச வராவிட்டால் கண்டிப்பாக டாக்டரிடம் காட்ட வேண்டும். எதையும் கேட்கமுடியாமல் போனதால் தான் குழந்தை பேசத்தயங்குகின்றது. அதற்கான சிகிச்சையை உடனடியாக தரவேண்டும்.


வண்ண வானவில்

வண்ண வானவில்
விளம்பரக் கட்டணங்கள்

| | |
|---|---|
| முழுப்பக்கம் (கறுப்பு வெள்ளை) | - ரூ 25,000.00 |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 28,000.00 |
| கறுப்பு மற்றும் இரண்டு கலர் | - ரூ 30,000.00 |
| முழு வர்ணப் பக்கம் | - ரூ 32,000.00 |

**சாதாரண விளம்பரங்கள்**

| | |
|---|---|
| கறுப்பு வெள்ளை | - ரூ 125.00 கலம் செ.மீ |
| கறுப்பு மற்றும் ஒரு கலர் | - ரூ 140.00 கலம் செ.மீ |
| கறுப்பு இரண்டு கலர் | - ரூ 150.00 கலம் செ.மீ |
| முழு வர்ணம் | - ரூ 160.00 கலம் செ.மீ |

12% வட் வரி சேர்க்கப்படும்.

தொடர்பு கொள்க : 0112429367
ப(f)க்ஸ் : 0112429320

# கப்டன் விஜயகாந்த்

## சில குறிப்புகள்

விஜயகாந்தின் நிஜப்பெயர் நாராயணன். அது தாத்தாவின் பெயர் என்பதால் விஜயராஜ் என வீட்டில் அழைக்கிறார்கள். சினிமாவுக்கு வந்த பின்னர் டைரக்டர் எம்.ஏ.காஜா வைத்த பெயர் விஜயகாந்த். அடுத்த படத்திலேயே டைரக்டர் விஜயன் அதை அமிர்தராஜ் என மாற்றியும் நிலைத்தது வியகாந்த் தான்..!

வீட்டுப்பூஜை அறையில் மெக்கா மதினா படங்களும், இயேசு - மேரி மாதா படங்களும், திருப்பதி வெங்கடாசலபதியும், முருகனும், பிள்ளையாரும் சிறப்பிடம் பெறுகிறார்கள். இப்பவும் மனசு சரி இல்லை என்றால் கண்ணூர் தர்காவுக்கு போய் வழிபாடு செய்வார் விஜயகாந்த்.

ஐயப்பன் கோயிலுக்கு 18 வருடங்களாகச் சென்று வந்தவர், நடுவே பக்தர்கள் இவர் காலில் வழுந்து வணங்குவதை பழக்கமாகக்கொண்டவுடன் இப்பேது கோயிலுக்கு செல்வது இல்லை.

எல்லாத்தம்பி, தங்கைகளுக்கும் திருமணம் செய்து கடமையை முடித்தபோது விஜயகாந்துக்கு வயது 37 ஆகிவிட்டது. அதற்குப்பின் தான் அக்காவின் வற்புறுத்தலின் பேரில் பிரேமலதாவை கைபிடித்தார். விஜய பிரபாகரன், சண்முக பாண்டியன் என இரண்டு மகன்கள்.

தமிழ் சினிமாவில் பெரும் சாதனையாக 1984 இல் மதுரை சூரன் முதல் ஜனவரி 1 படம் வரை 18 படங்களும் 1985ஆம் ஆண்டில் மட்டும் அலை ஓசையில் ஆரம்பித்து நானே ராஜா நானே மந்திரி வரை 17 படங்களிலும் ஹீரொவாக நடித்திருக்கிறார். இந்தச்சாதனை வேறு எந்த ஹீரோவும் செய்யாதது. அதே போல் எந்த நடிகரின் 100 வது படமும் கேப்டன் பிரபாகரனைப்போல செம ஹிட்டானதில்லையாம்..!

பள்ளியில் படிக்கும்போது ஃபுட் போல் பிரமாதமாக விளையாடுவார். இப்போதும் ஃபுட்போல் வெறியர். இங்கிலாந்துவரை போய் நேரில் ஃபுட் போல் போட்டிகளை பார்த்து ரசிப்பார். அவரது மகன்களுக்கும் இப்போது ஃபுட்போல் பிரியம் வந்துவிட்டது.

விஜயகாந்த் வில்லனாக நடித்த ஒரே படம்.. இனிக்கும் இளமை. அதற்குப்பிறகு எல்லாமே ஹீரோ வேடம்தான்.

இதுவரை விஜயகாந்த் 152 படங்களில் நடித்திருக்கிறார். 153 வது படம் அவரது டைரக்ஷனில் வருகிறது. இவ்வளவு நாள் களத்தில் இருந்ததால் படம் இயக்க வேண்டும் என்பது அவரது விருப்பம்.


நடிகர் ராஜேஷின் தம்பி திருமணத்தில் தான் எம்.ஜி.ஆரோடு கைகுலுக்கி சந்தித்து பேசினார் விஜயகாந்த். அதை ஒருவரும் புகைப்படமாக எடுக்கவில்லையே என்ற வருத்தம் அவருக்கு உண்டு.

விஜயனாந்தின் மூத்த மகன் பிரபாகரன் இஞ்சினீயரிங் முதலாம் ஆண்டு படிக்கிறார். இளைய மகன் சண்முக பாண்டியன் பிளஸ் வன் படிக்கிறார். இரண்டு பேருக்கும் சினிமாப் பக்கம் வரும் ஐடியாவே இருக்கவில்லை.

வீட்டில் செல்லமாக ரொக்கி, சீசர், டேனி என்ற மூன்று நாய்களை வளர்த்து வருகிறார்.

செயின் ஸ்மோக்கராக இருந்த விஜயகாந்த் திருமணத்துக்கு பிறகு அந்தப்பழக்கத்தை அறவெ விட்டுவிட்டார். அசைவப்பிரியரான அவர் இப்போது மீன் சாப்பிடுவதோடு நிறுத்திக்கொள்கிறார்.

கமல், ரஜினி போன்றவர்கள் விஜயகாந்தை விஜி எனவும், நெருங்கிய நண்பர்கள் பொஸ் எனவும், கட்சி வட்டாரத்தில் கேப்டன் எனவும் அழைக்கி றார்கள்.




திருநாவுக்கரசு, ஜெயலலிதா, ஆர்.எம்.வீ கேட்டும் தராத எம்.ஜீ.ஆரின் பிரசார வேனை விஜயகாந்துக்கு கொடுத்திருக்கிறார் ஜானகி எம்.ஜி.ஆர். அதோடு எம்.ஜி.ஆர், ஜானகி எம்.ஜி.ஆர் எனப்பெயர் பொறித்த மோதிரங்களையும் தம்பதியினருக்கு வழங்கி மகிழ்ந்திருக்கிறார் திருமதி ஜானகி.

ஞாயிற்றுக்கிழமை கேப்டன் வீட்டில் 100 பேராவது சாப்பிடுவார்கள். ஒவ்வொரு நாளும் அலுவலகத்திலும் அந்த அளவுக்குச்சாப்பாடு நடக்கும். வந்து செல்கிறவர்களை வெறும் வயிறோடு திரும்ப அனுப்ப மாட்டார்.

இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகர் டைரக்ஷனில் 17 படங்களும், ராமநாரா யணன் இயக்கத்தில் 17 படங்களும் நடித்திருக்கிறார் விஜயகாந்த். அவரோடு அதிக படங்களில் ஜோடியாக நடித்தவர் நளினி.

பாரதிராஜா தவிர்த்து பெரிய டைரக்டர்களின் படங்களில் நடித்ததே இல்லை விஜயகாந்த்.

முழுநேர அரசியல்வாதியாக, எதிர்க்கட்சித்தலைவராக ஆகிவிட்ட நடிகர் விஜயகாந்த் கொஞ்சம் கொஞ்சமாக சினிமாவை விட்டு விலகி வருகிறார். அதே சமயம் தன்னுடைய மகன் சண்முகபாண்டியனை ஹீரோவாக்கும் முயற்சியில் விஜயகாந்த் அவரது மனைவி பிரேமலதா மற்றும் மொத்த குடும்பமே ஈடுபட்டு வருகிறார்களாம். இந்நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் டைரக்டர் பூபதி பாண்டியன் ஒரு கதை சொல்ல விஜயகாந்த் வீட்டிற்கு சென்றாராம். அப்போது அவரின் கதையை விஜயகாந்தின் மொத்த குடும்பமும் உட்காரந்து கேட்டதாம். கதை பிடித்து போக, அடுத்த கட்ட வேலைகளிலும் இறங்கியிருக்கிறாராம் விஜயகாந்த்.




# இளமை கொழிக்கும் சென்னைக்கு வயது 371!

தமிழ் நாட்டின் தலைநகரின் பெயர் தமிழில் இருக்க வேண்டாமா..? அதென்ன சென்னை என்ற தமிழ் அல்லாத பெயரில் அமைந்திருக்கிறது.. என்ற ஒரு சந்தேகம் பலருக்கும் இருக்கத்தான் செய்கிறது.. சென்னாப்பட்டணம் என்பது தான் காலப்போக்கில் சென்னையானது. சென்னை என்பது தெலுங்குப்பெயர்.

தெலுங்கு நாயக்கர்கள் தமிழகத்தை நீண்டகாலமாக ஆண்டு வந்தனர். தஞ்சை பெரிய கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில், மதுரை நாயக்கர் மஹால், ராமேஸ்வரம் கோயில் என பல பெரிய கோவில்களில் விஸ்தாரமான திருப்பணி ஆற்றியிருக்கிறார்கள் இந்த தமிழ் பேசும் நாயக்க மன்னர்கள். தமிழகத்தில் இருந்து வந்த நாயக்கர்களே கண்டி இராச்சியத்தை ஆளவும் செய்தனர். தமிழகத்தில் நிலவிய தெலுங்கு நாயக்க மன்னர்களின் செல்வாக்கையே சென்ன என்ற பெயர் நினைவூட்டுகிறது.


கூவம் நன்னீர் ஆறாக இருந்தபோது...

இப்போது சென்னை நகருக்கு 371 வயதாகிறது. இந்நகரம் 1639 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22 ம் திகதி தோற்றம் பெற்றது. இதற்கு முன்னர் மீன்பிடி கிராமமாக அறியப்பட்ட இடம் இது. போர்த்துக்கேயர் இங்கே வந்து குடியேறிய பின்னரேயே இந்த இடம் நகரமாக வளர்ச்சி பெற ஆரம்பித்தது. 1552 ஆம் ஆண்டு இன்று சாந்தோம் (St.Thomas) என்று அழைக்கப்படும் பகுதியில் போர்த்துக்கேயர் குடியேறி வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

1639 ஆம் ஆண்டு பிரான்சஸ் டே மற்றும் கோகன் ஆகிய இரு கிழக்கிந்திய கம்பனி அதிகாரிகள் தமது உதவியாளர் பெரிதின்னப்பா என்ற தெலுங்கரின் உதவி-யோடு இப்போது சென்ட்.ஜோர்ஜ் கோட்டை அமைந்திருக்கும் இடத்தை வாங்கினார்கள். சென்னை நகரம் உருவாவதற்கான முதல் படியாக இது அமைந்தது.

ஐயப்பன், வேங்கடப்பன் ஆகிய இருவரே இந்த இடத்தை ஐரோப்பியருக்கு விற்றனர். இவர்களின் தந்தை பெயர் சென்னப்ப நாயக்கன். இவர் நினைவாகவே கோட்டைக்கு வடக்கே அமைந்திருந்த ஊருக்கு சென்னப்பட்டணம் என்று போர்த்துக்கேயர் பெயர் சூட்டினர்.

கோட்டைக்கு தெற்கே அமைந்திருந்த ஊரை போர்த்துக்கேயர் மதராஸ் எனடறு அழைத்தனர்.

பின்னர் இங்கு வந்த பிரிட்டிஷ்காரார்கள் இந்த இரண்டு ஊர்களையும் இணைத்து 'மட்ராஸ்' என்று அழைக்க ஆரம்பித்தார்கள். தமிழர்கள் சென்னப்பட்டணம் என்றே அழைத்து வந்தனர். ஆங்கிலேயர் கைக்கு வந்த பின்னர் சென்னை பெருநகராமாக வளர்ச்சி அடையத்தொடங்கியது.

நிறைய மருத்துவ மனைகள் இருப்பதால் இந்தியாவின் மருத்துவத்தலைநகர் என்று சென்னையை அழைக்கிறார்கள்.

பிரசித்தி பெற்ற சென்னை பல்கலைக்கழகம் 1857 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் செயல்பட ஆரம்பித்தது.

பிரபலமான கன்னிமரா நூலகத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம் 1830 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. 1896ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் இந் நூலகம் தேசிய களஞ்சிய நூலகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அன்றைய மெட்ராஸ் ஆளுநரான கன்னிமரா பிரபுவின் பெயர் இதற்கு சூட்டப்பட்டுள்ளது.


கடந்த ஆண்டு திறந்து வைக்கப்பட்ட அண்ணா நூற்றாண்டு நூலகம் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாக கருதப்படுகிறது. 3.75 லட்சம் சதுர அடிப்பரப்பில் அமைந்திருக்கும் இந் நூலகம் 180 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

இன்றைய சென்னையின் மக்கள் தொகை 75 லட்சம். ஒரு சதுர கிலோ மீட்டரில் 24, 416 பேர் வசிக்கிறார்கள். ஆயிரம் ஆண்களுக்கு 918 பெண்கள். கல்வியறிவு வீதம் 80.14 நகரின் 25 வீதமான மக்கள் வாழ்வது குடிசை பகுதிகளில் என்பது சோகமான உண்மை.

ஒளிரும் நட்சத்திரம்

பனி விழும் இரவது. குளிரும் தென்றல் இமை மூடும் நேரமிது. இனிய கனவுகள் மலர.. ஜில் என்று ஒரு குட் நைட்..

- மஜீத். மாவடிப் பள்ளி


மெரீனா கடற்கரை: அன்று



# காமமும் அரசியலும் – 4

## ரஸ்புட்டீன் ரஷ்ய பேரோட்சியை ஆட்டுவித்தது எப்படி?



மாரி அன்டனெட்

ஆண் அரசியல்வாதிகள் அல்லது பெரிய நிறுவனங்களின் தலைவர்கள் பெண்களைப் பயன்படுத்தி எதிரிகளாகக் கருதப்படுபவர்களின் இரகசியங்களை அறிவதற்கு முயற்சி செய்வது எல்லாக் காலங்களிலும் நடைபெற்று வந்திருக்கிறது. ஒரு நபரிடம் இருக்கும் பலவீனத்தை அறிந்து அந்தப் பலவீனத்தை அவருக்கு தெரியாமலேயே பயன்படுத்தி அவரை வீழ்த்துவதே இந்த உத்தியாகும். பிரெஞ்சு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருந்த டொமினிக் ஸ்ட்ரஸ்கன் இந்த வலையில் வீழ்த்தப்பட்டவரே என்று பலரும் நம்புகின்றனர். அவர் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளில் இருந்து தற்போது அவர் விடுவிக்கப்பட்டுள்ளார். அந்தப் பலவீனம் பெண்ணாசையாக மட்டும் இருக்க வேண்டியதில்லை. பணத்தாசை, பதவியாசை, தனது எதிரி வீழ்ந்து நாசமாக வேண்டும் என்ற எண்ணம், மதுவுக்கு அடிமையாகும் தன்மை என இந்தப் பலவீனங்கள் பல்வகைப்படும். அதீத தெய்வ பக்தி, மூட நம்பிக்கை போன்றவற்றையும்கூட சிலர் தமக்கு வாய்ப்பாக பயன்படுத்திக்கொள்கின்றனர்.

இதே சமயம், பெண்களின் பேச்சைக்கேட்டு மண்ணில் வீழ்ந்தவர்களும் உள்ளனர். பிரெஞ்சு மன்னர் லூயி, தன் இராணி சொல்கிறபடி கேட்பவர். பிரெஞ்சு புரட்சியின்போது மக்களின் வறுமை, பசிப்பிணி ஆகிய எரியும் பிரச்சினைகளை அறியாமல் மது,மாது என ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்த இம்மன்னன் தன் இராணியான மாரி அன்டனெட் சொல்கிறபடியே நடந்தார். அரசியாரிடம் தாம் உண்பதற்கு ரொட்டி கிடைப்பதில்லை என்று மக்கள் முறையிட்டபோது ரொட்டி கிடைக்காவிட்டால் கேக் உண்பதுதானே! என்று அரசி அலட்சியமாக திருப்பிக்கேட்டதாக ஒரு சம்பவத்தைச் சொல்வார்கள். இதன் உண்மைத்தன்மை எப்படியாக இருந்தாலும் அந்த அரசியாருக்கு மக்களைப்பற்றிய எந்த சிந்தனையும் இருக்கவில்லை என்பதையும் இந்த அலட்சிய போக்கின் காரணமாக அரச குடும்பமே கில்லட்டின் கத்திக்குப் பலியாக நேர்ந்தது என்பது வரலாறு. அரசனோ, தலைவனோ, வர்த்தகப்புள்ளிகளோ, எப்போதுமே தமது பதவி - கடமைகள் வேறு, குடும்பம் வேறு என்று பிரித்து வைத்திருக்க வேண்டும். ஏனெனில் அதிகார மையங்களில் ஊடுருவல் என்பது எப்போதும் நிகழ்ந்து கொண்டேயிருக்கும் ஒன்று. சாதாரண குடும்பங்களை எடுத்துக்கொண்டாலும், கணவனை குறி வைத்தோ அல்லது மனைவியை குறி வைத்தோ காரியங்களை சாதித்துக்கொள்ள நினைப்பவர்கள் ஊடுருவலை நடத்திக்கொண்டே தான் இருக்கிறார்கள்.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் முதலமைச்சரான பின்னரேயே அதுவரை விலாசமில்லாமல் ஒதுங்கியிருந்த ஜெயலலிதா அவரிடம் வந்து சேர்ந்தார். ஏற்கனவே எம்.ஜி.ஆருக்கும் அவருக்கும் இடையே நெருக்கம் இருந்தது. அந்த உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டதும் அவரது பலவீனங்களை அறிந்து வைத்திருந்த ஜெயலலிதா வெகு விரைவிலேயே கட்சியில் செல்வாக்கு மிக்கவராக மாறினார். அவரது நம்பிக்கைக்குப்பாத்திரமான இரண்டாம் நிலைத்தலைவரானார்.

அரசியல் என்பதன் அரிச்சுவடியே தந்திரமும் கிடைக்கும் வாய்ப்பை செவ்வனே பயன்படுத்திக்கொள்வதுமாகும்.



16ம் லூயி


ரஷ்ய மன்னர்
இரண்டாம் நிக்கலஸ்
தன் குடும்பத்துடன்



எம்.ஜி.ஆர்.சுகவீனமுற்றிருந்தபோது அவர் முதலமைச்சர் பதவிக்கு பொருத்தமற்றவர் என டில்லிக்கு கடிதம் எழுதும் அளவுக்கு சக்திமிக்கவரானார். இதே சமயம் மக்களும் அவரை எம்.ஜி.ஆரின் வாரிசாக ஏற்றுக்கொண்டார்கள்.

எனினும் எம்.ஜி.ஆருக்குப்பின்னர் அ.தி.மு.க வுக்கு பொருத்தமான தலைவராக அவரால் வரமுடிந்தது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. ஜெயலலிதா நடிகையாக வெற்றி வலம் வந்தபோது ஒரு நிருபர், சினிமாவுக்கு வராமல் இருந்திருந்தால் என்னவாகி இருப்பீர்கள் என்று கேள்வி கேட்டபோது, டொக்டராகி இருப்பேன், என்ஜினியராகி இருப்பேன் என்று வழமைபோல கூறாமல், அரசியலில் நுழைந்து மேடைகளில் பேசிக்கொண்டிருப்பேன் என்று அவர் பதில் சொன்னார். அரசியலில் வாய்ப்புக்கான எந்த அறிகுறியும் இல்லாத காலத்திலேயே அவருக்கு அரசியலில் ஆர்வம் இருந்திருக்கிறது. வாய்ப்பு வந்தபோது மக்கள் திலகத்துக்கு தன் மேல் இருந்த கிறக்கத்தை பயன்படுத்தி தன் இலட்சியத்தை அவர் வெற்றிகரமாகவே அடைந்தார். இன்று அவர் அசைக்க முடியாத அரசியல்வாதி. கலைஞரின் கண்ணுக்குள் விரலை விட்டு ஆட்டும் முதலமைச்சர்.

ரஷ்ய சாம்ராஜ்யத்தின் இறுதிப்பகுதியில் அதன் கடைசி சக்கரவர்த்தியாக திகழ்ந்தவர் இரண்டாம் நிக்கலஸ். அவரது மனைவி பட்டத்துராணி அலெக்சான்றியா. மன்னனை தன் மடிக்குள் வைத்திருந்தாள். இவர்களது பட்டத்து இளவரசர் அலக்ஸி நிக்கோலாவிக் ஒரு மர்ம வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தான். இன்றைக்கு அதன் பெயர் ஹீமோபீலியா. அதாவது இரத்தம் உறையாத நோய். சிறு காயம் ஏற்பட்டாலும் இரத்தம், உயிர்போகும் வரை வடிந்து கொண்டிருக்கும். இதை எப்படி சுகப்படுத்துவது என்று மன்னர் தவித்துக்கொண்டிருந்தபோது ஒரு நாடோடி மந்திரவாதியின் அறிமுகம் அவருக்குக்கிடைத்தது. 1872ஆம் ஆண்டு சைபீரிய கிராமமொன்றில் பிறந்திருக்கவேண்டும் என நம்பப்படும் ரஸ்புட்டீன் மன்னரின் மாளிகைக்கு அழைத்து வரப்பட்டான். அவனது இயற்பெயர் கிரிகறி யெ.ஃபிமோவிச். வாட்டசாட்டமான உருவம். முரட்டுக்குரல், நீண்ட தலை மயிர், தாடி, அழுக்கு உடை, மது நாற்றம் என உள்ளே வந்த அவன். தன்னால் அந்த வியாதியை குணப்படுத்த முடியும் என்று கூறினான். முழந்தாளிட்டு இறைவனை பிரார்த்தித்து அலக்ஸியின் இரத்தத்தை உறைத்துப்போகச்செய்தான். அரசி அலெக்சான்ரியாவுக்கு அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி. அந்தக்கணமே ரஸ்புட்டீனின் மாயவலையில் வீழ்ந்தாள்.



ரஸ்புட்டீன்

ரஸ்புட்டீன் மது, மாது என வாழ்க்கையை ஓட்டிவந்த ஒரு விவசாயி. அல்லது விவசாய குடும்பத்தில் இருந்து வந்தவன். கடவுளின் அனுக்கிரகம் தனக்கு இருப்பதாக நம்பினான். அவனது நடவடிக்கைகளும் முரட்டுத்தனமான ஆண்மை வேகமும், அலட்சிய வாழ்க்கையும் அலெக்சான்ட்ரியாவுக்கு நன்கு பிடித்துப்போனது. அரசி, அவனது கைப்பாவையானாள். சக்கரவர்த்தியும் இதைக்கண்டுகொள்ளவில்லை.

ரஸ்புட்டீனோ தன் காதல் சாம்ராஜ்யத்தை அரசி-யோடு நிறுத்தாமல் விஸ்தரித்தான். பல ரஷ்ய பிரபுக்களின் மனைவி மாரும் அவன் விரித்த வலையில் வீழ்ந்தனர். அவன் தரும் சுகத்துக்காக தவமிருந்தனர்.

இந் நிலையில் முதலாம் உலகப்போர் மூண்டிருந்ததால் சக்கரவர்த்தி நிக்கலஸ் தானே படை நடத்தி யுத்த முனைக்கு சென்றான். ரஷ்ய சாம்ராஜ்யத்தின் உள்விவகாரங்களை கவனிக்கும் பொறுப்பு அரசியிடம் வர, அவளது பிரதான ஆலோசகரா-னான் ரஸ்புட்டீன். படிப்பறிவு இல்லாத ரஸ்புட்டீனிடம் இரண்டு ஆயுதங்கள் மட்டுமே இருந்தன. முதலாவது அவனது காம சக்தி, இரண்டாவது நோய்களையும் பிரச்சினைகளையும் தீர்க்கும் மாய சக்தி.

இக்காலப்பகுதியில் ரஷ்ய உயர் அரசியல் மட்டத்தில் அவன் பெரும் செல்வாக்கு செலுத்தினான். ஊழல் மிகுந்த கோவில் குருமாரை அமைச்சர்களாக நியமித்தான். ரஷ்ய இராணுவ விவகாரங்களிலும் தலையீடு செய்தான். யாரோ ஒருவன் திடீரென வந்து ரஷ்ய அரசியலில் ஆதிக்கம் செலுத்துவதை பொறுக்காத எதிர்கோஷ்டியினர் ரஸ்புட்டீனை தீர்த்துக்கட்ட முடிவெடுத்தனர்.

1961 டிசம்பர் 29 ஆம் திகதி அவனை இரவு விருந்துக்கு அவனது எதிரிகள் அழைத்தனர். ஏற்கனவே மது அருந்தியிருந்த ரஸ்புட்டீன் அங்கே சென்றான். அவனுக்கு விஷம் கலந்த மது, தேனீர், கேக் என்பன தரப்பட்டன. அவை அவனை ஒன்றும் செய்யவில்லை. அடுத்ததாக அவனை துப்பாக்கியில் சுட்டனர். கீழே விழுந்த அவன், எழும்பி மாளிகையின் முன்வாசல் வழியாக ஓடினான். மீண்டும் அவன் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. கீழே விழுந்தாலும் அவன் மரணமடையவில்லை. அவனை கயிற்றால் கட்டி பக்கத்தில் உறைந்து போயிருந்த நேவா ஆற்றுக்கு தூக்கிச்சென்றனர். ஆற்றிலே ஒரு துளை போட்டு ஐஸ் தண்ணீரில் இறக்கி துளையை மூடிவிட்டனர். மறுநாள் தோண்டிப்பார்த்தபோது அவன் இறந்திருந்தான். எனினும் மூச்சுத்திணறலால் கைகளையும், கால்களையும் அசைத்திருந்ததற்கான அறிகுறிகள் தென்பட்டனவாம்.

ஆண் மீதான பெண் மோகம், ஒரு சாம்ராஜ்யத்தையே ஆட்டுவித்ததற்கு ரஸ்புட்டீன் வரலாறு ஒரு சான்று.

**அருள் சத்தியநாதன்**

பிரான்சிலும் ஒரு அரசி, மாரி அன்டனட் தன் கணவனை அதிகார மமதையுடன் ஆட்டி வந்தார். பிரான்சை 16ஆம் லூயி மன்னன் ஆண்டபோது மக்கள் பசி பட்டினியால் வாடினர். உற்பத்தியை விட அதிக சனத்தொகை பிரான்சில் வாழ்ந்ததும், பிரபுக்களும் அரச குடும்பமும் விவசாயிகளின் நிலை பற்றி கொஞ்சமும் அக்கறை கொள்ளாமல் ஆடம்பர வாழ்வில் மூழ்கியிருந்ததும் பிரெஞ்சு புரட்சிக்கு வித்திட்டன. அரசியாருக்கு மக்களின் கவலைகள் பற்றி எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

அரசியின் கைப்பாவையாக இருந்ததால் மக்கள் புரட்சியின் தீவிரம் பற்றி லூயி மன்னனும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. மது, மாது, ஆடம்பர வாழ்க்கை என்றிருந்த மன்னரின் கதவை இறுதியில் பிரெஞ்சு புரட்சி வந்து தட்டியது, மன்னரின் முழுக்குடும்பமுமே கில்லட்டின் கத்திக்கு பலியானது.

இப்படி ஏகப்பட்ட உதாரணங்கள் இருந்தாலும் காமமும், அரசியலும் நகமும், சதையும் போலத்தான். எதிர்காலத்திலும் பழி தீர்க்க, பதவியேற்க பதவியிழக்க, வாழ்வில் வெற்றிபெற இவ்விரண்டும் இணைபிரியா தோழர்களாக நின்று பலருக்கும் உதவத்தான் போகிறது. ஏனெனில் சரியாக பயன்படுத்தினால் வீரியம் குறையாத சிறந்த ஆயுதங்கள் இவை.

முற்றும்




## பென் டிரைவ் பயன்படுத்தும்போது...

இன்று எல்லா பென் டிரைவ்களும் ஒரே தரத்தில் கிடைத்தாலும் நண்பர்களிடம் கேட்டுவிட்டு அவர்கள் எத்தனை நாட்கள் பயன்படுத்தி உள்ளனர் என்பதை பொருத்து அதை வாங்கலாம்.

பிரவுசிங் சென்டர்களில் பயன்படுத்த வேண்டாம்.

அடிக்கடி ஃபோர்மட் செய்யாதீர்கள். தேவை இருப்பின் மட்டும் செய்யவும்.

பென் டிரைவ் வேறு யாரிடமாவது கொடுத்து இருந்தால் பின்னர் வாங்கும்போது ஸ்கேன் செய்து வைரஸ் இருந்தால் மட்டும் ஃபோர்மட் செய்யலாம்.

தண்ணீரில் விழுந்துவிட்டால் கம்பியூட்டரில் செருக வேண்டாம். அதை நன்றாக காயவைத்து தண்ணீர் போய்விட்டது என்று தெரிந்த பின் மட்டும் செருகவும்.

பென்டிரைவ் சொருகியவுடன் ஸ்கேன் செய்ய சிறந்த மென்பொருள் யு.எஸ்.பி டிஸ்க் செக்கியுரிட்டி.

## மோனாலீசாவின் கண்ணாமூச்சி புன்னகை

மோனாலீசாவின் புன்னகை கடந்த 500 ஆண்டுகளாக புரியாத புதிராக இருந்து வந்தது. பிரான்ஸ் நாட்டின் புகழ்பெற்ற ஓவியர் லியர்னாடோ டாவின்சி 1500 களில் வரைந்த அற்புத ஓவியம் இது.

இந்த ஓவியம் ஐந்து நூற்றாண்டுகளாக உலகம் முழுவதும் பேசப்படுவதற்கு அவளது உதடு பிரியாத புன்னகை தான் காரணம். மோனாலீசாவின் முகத்தை நேரடியாக பாக்கும்போது புன்னகைப்பது தெரியாது. ஆனால் ஓவியத்திலிருந்து சற்று பார்வையை விலக்கினால் அந்த புன்னகை புலப்படும்.



இந்த மர்மத்திற்கு அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் மார்கிரெட் லிவிங்ஸ்டன் விடை கண்டுள்ளார்.

மோனாலீசாவின் ஓவியத்தை உற்றுப்பார்க்கும்போது அதன் புன்னகை மறைவதற்கும் நம் கண்களின் பார்வை தான் காரணம் என்கிறார் அவர்.


நம் கண்களுக்கு இரு விதமான பார்வைகள் உண்டு. ஒன்று நேர்ப்பார்வை, மற்றது ஓரப்பார்வை. நாம் பெரும்பாலும் நேர்ப்பார்வையை தான் பயன்படுத்துகிறோம். ஓரப்பார்வை குறைவு. மோனாலீசாவின் புன்னகை கிட்டத்தட்ட முற்றிலும் கீழ் பகுதியில் நிகழ்கிறது. எனவே ஓரப்பார்வையில் தான் அது புலப்படும் என்கிறார் மார்கரெட்

உதாரணமாக அச்சடிக்கப்பட்ட ஒரு பக்கத்தில் உள்ள ஒரு எழுத்தை மட்டும் கூர்மையாக பார்த்தால் அந்த குறிப்பிட்ட எழுத்துக்கு வெகு அருகில் உள்ள மற்ற எழுத்துக்கள் கூட என்னவென்று தெரியாது.

இந்த கோட்பாடுதான் டாவின்சியின் ஓவியத்தில் வேலை செய்கிறது.


மோனாலீசாவின் கண்களையோ அவளது முகத்தின் வேறு பகுதிகளையோ பார்க்கும்போது அந்த புன்னகை நமக்கு புலப்படாது. டாவின்சி மட்டுமல்ல மேலும் பல ஓவியர்களும் மனித பார்வையின் தன்மைகளை அந்த காலத்திலெயே உணர்ந்துள்ளனர். விஞ்ஞானிகள் இப்போதுதான் கண்டுபிடிக்கின்றார்கள் என்கிறார் மார்கரெட்.

## சீரியல் நம்பர்களை தொலைத்துவிட வேண்டாம்



உங்களுடைய கம்பியுட்டரின் சீரியல் நம்பரை கவனித்திருக்கிறீர்களா? அல்லது உங்களிடம் இருக்கும் டி.வி, டி.வி.டி பிளேயர் போன்ற டிஜிட்டல் சாதனங்களின் சீரியல் நம்பரை கவனித்திருக்கிறீர்களா,

இந்த சீரியல் நம்பர்கள் சாதனங்களைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு தமது கையிறுப்பு நிலையை அறியப் பயன்படுகின்றன. பல வேளைகளில் அதனை பயன்படுத்துவோருக்கும் தயாரித்தவருக்கும் சில பிரச்சினைகளைத் தெளிவாக அறியவும் அது பயன்படுகிறது. தொழில்நுட்ப ரீதியாக உங்களுக்கு நிறுவனம் உதவிட இந்த சீரியல் நம்பர் பயன்படும். உங்கள் கம்பியுட்டருக்கு ஏதேனும் ஒரு உதிரிப்பாகம் புதிதாக தேவைப்படுகிறது என்றால் அதன் தன்மையை அறிய இந்த சீரியல் நம்பர் உதவிடும். கம்பியுட்டர் கீ.போர்டு மற்றும் பிரின்டர் போன்ற சானங்களில் பின்புறம் அல்லது அடிப்பாகத்தில் இருக்கும் இதனை முழுமையாக குறித்து வைத்து தேவைப்படும் போது அதனை முழுமையாக தெரிவிக்க வேண்டும்.



இதே போல பல மென்பொருள் தொகுப்புகளுக்காக அவை தரப்படும் சி.டி அல்லது சி.டிக்களின் கவரில் இந்த சீரியல் நம்பர் அச்சிடப்பட்டிருக்கும்.

நாம் இந்த சி.டி கவர்களை மாற்றி விடுவோம் என்பதால் வாங்கியவுடனேயே இதனை பார்த்து எழுதிப் பத்திரப்படுத்த வேண்டும். வரப்போகும் காலத்தில் மனிதர்களுக்கும் இதுபோல சீரியல் நம்பர் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## செப்டெம்பர் மாத பலாபலன்கள்

01-09-2011 தொடக்கம் 30-09-2011 வரை

சோதிடமாமணி நவா

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு புரட்டாதி மாதம் புன்னகை தவழும் மாதமாகும். தொழில் நிலைகளில் முன்னேற்றம் ஏற்படும். பணவரவுகள் தாராளமாக வந்துசேரும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தர்களும் மாணவர்களும் உரிய நாட்பலன்களை பெறுவர். முதலீட்டாளர்கள் தேவைக்கேற்ப முதலீடுகளை வைத்துக் கொண்டு ஆதாயமடைவர். சகலவிதத்திலும் மேட இராசியினருக்கு நன்மை தரும் மாதமிது. அதிர்ஷ்ட திகதிகள் 3,9,21

### இடபம்

கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருக சீரிடத்து முன்னறை நட்சத்திரங்களில் பிறந்த வர்களுக்கு இடர் களையும் மாதமாக அமையும். செய்தொழில்களில் ஏற்பட்டிருந்த கண்டங்கள் விலகி, நன்னிலை உருவாகும். பணவரவுகளில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். குடும்பத்தில் தடைப்பட்டிருந்த கருமங்கள் நிறைவேறும். உத்தியோகத்தர்கள் மாணவர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். முதலீட்டாளர்கள் முதலீடுகளில் கூடிய கவனம் செலுத்தி கூடிய ஆதாயத்தை பெற்றுக்கொள்வர். இயன்ற வரை பாடுபடவைக்கும் மாதமிது. அதிர்ஷ்ட திகதிகள் 5,14,23

### மிதுனம்

மிருக சீரிடத்து பின்னரை திருவாதிரை புனர்பூசத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மிதமிஞ்சிய நன்மைகள் சேரும் மாதமாகும். செய்தொழில்கள் சீராக இயங்கும். பணவரவுகள் உரிய வேளையில் வந்துசேரும். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் நன்மையின் பொருட்டு இடம்பெறும். உத்தியோகத்தர்கள், மாணவர்கள் தமது கருமங்களில் முன்னெச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நன்மை தரும். முதலீட்டாளர்களுக்கு கூடிய இலாபம் தரும் மாதமிது. அதிர்ஷ்ட திகதிகள் 6,15, 24

### கடகம்

புனர்பூசத்து நாலாங்கால் பூசம் ஆயிடை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சிறிது கவலைகள் வந்து மனக்குழப்பம் தரும் மாதம். செய்தொழில்களில் அவதானம் தேவை. நம்பி ஏமாற்றமடைய வாய்ப்புண்டு. பணவரவுகள் தாமதமாகி வந்து சேரும். குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகள் வந்து மறையும். உத்தியோகத்தர்களும் மாணவர்களும் மனக்கஷ்டங்களை எதிர்கொள்வர். முதலீட்டாளர்கள் கடும் பிரயத்தனத்தின் மத்தியில் ஆதாயமடைவர். கர்க்கடக இராசியினர் கடும் முயற்சியுடன் செயற்படும் மாதமாகும். அதிர்ஷ்ட திகதிகள் 4, 22

### சிங்கம்

மகம், பூரம், உத்தரத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சிறப்பு தரும் மாதமாகும். தொழில் நிலையில் எதிர்பார்த்த முன்னேற்றம் ஏற்படும். புதிய முயற்சிகள் பலிதமாகும். பணவரவுகள் ஓரளவு திருப்தி தரும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த பிணக்குகள் குறையும். மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மனக்குறைகள் நீங்கும். முதலீட்டாளர்களின் எண்ணங்கள் சில தடைகளின் பின் கைகூடும். சிங்க இராசியினருக்கு சிக்கல் தராத மாதமாகும். அதிர்ஷ்ட திகதிகள் 7, 16

### கன்னி

உத்தரத்து பின்முக்கால் அத்தம், சித்திரையின் முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சிறிது கவலையும் அதன் பின் நன்மையும் தரும் மாதம். செய்தொழில்கள் யாவும் சீராக இயங்காமல் மனக்குழப்பங்களை தரும். பணவரவுகள் தாமதமாகி பின் வந்து சேரும். குடும்பத்தில் வீண் மனஸ்தாபங்களும் செலவுகளும் ஏற்பட வாய்ப்பு உண்டாகும். உத்தியோகத்தர்கள் மாணவர்கள் முதலீட்டாளர்கள் தமது செயற்பாடுகளில் கவனமுடன் இருப்பது நல்லது. கன்னி இராசியினருக்கு கவலை தந்து களிப்புறச்செய்யும் மாதமிது. அதிர்ஷ்ட திகதிகள் 3, 21

### துலாம்

சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு துயர் நீங்கும் மாதமாகும். செய்தொழில்கள் சீராக நடைபெறும். எதிர்பார்த்த பண வருவாய்கள் கிடைத்து மகிழ்ச்சியை கொடுக்கும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த மனக்கஷ்டங்கள் விலகும். உத்தியோகத்தர்கள், மாணவர்கள் கூடிய பிரயாசத்தின் மத்தியில் நன்மைகளைப் பெற்றுக் கொள்வர். முதலீட்டாளர்களுக்கு இலாபம் தரும். துலா இராசியினருக்கு மனக்குறைகள் அகற்றும் மாதமிது. அதிர்ஷ்ட திகதிகள் 19, 28

### விருச்சிகம்

விசாகத்து நாலாங்கால் அனுஷம், கேட்டை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு நன்மையும் தீமையும் கலந்த மாதமாகும். புதிய முயற்சியினால் அதிக செலவுகள் ஏற்படும். குடும்பத்தில் மனக்குறைகள் நீங்கும். உத்தியோகத்தர்கள், மாணவர்கள் பல சிரமங்களின் மத்தியில் நன்மையடைவர். முதலீட்டாளர்களின் எண்ணங்கள் ஏமாற்றத்தின் மத்தியில் நிறைவேறும். விருச்சிக இராசியினருக்கு சிறிது கஷ்டம் கொடுத்து நன்மை தரும் மாதமிது. அதிர்ஷ்ட திகதிகள் 14, 23

### தனுசு

மூலம், பூராடம், உத்தாரடத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தன இலாபம் தரும் மாதமாகும். செய்தொழில்கள் சீராக நடைபெறும். பணவரவுகள் திருப்திகரமாக அமையும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானத்துடன் நடந்துகொள்வது நல்லது. உத்தியோகத்தர்கள், மாணவர்கள் யோசித்து செயலாற்றுவது நல்லது. முதலீட்டாளர்கள் கஷ்டத்தின் மத்தியில் ஆதாயம் பெறுவர். தனு இராசியினருக்கு சிறிது தயவு காட்டும் மாதமிது. அதிர்ஷ்ட திகதிகள் 12,30

### மகரம்

உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னறை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மங்கிய நிலவொளி போல் மகிழ்ச்சி தரும் மாதம். செய்தொழில்கள் சிறப்பாக நடந்தேறினும், ஏதோ ஒரு குறை தென்படும். பணவரவுகள் திருப்திகரமாக அமையாது. குடும்பத்தில் வீண்செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தர்கள், மாணவர்கள் நன்மையடைவர். முதலீட்டாளர்கள் பண நெருக்கடிக்குள் ஆளாகுவர். மகர இராசியினருக்கு மனக்குழப்பம் தராத மாதமாகும். அதிர்ஷ்ட திகதிகள் 10,19

### கும்பம்

அவிட்டத்துப்பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு குறை தீர்க்கும் மாதம். செய்தொழில்கள் யாவும் மகிழ்ச்சி தரும். பணவரவுகளில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். தேவைக்கேற்ப பணவரவுகள் கிடைக்கும். குடும்பத்தில் மனமகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மனக்குறைகளுக்கு ஆளாவர். முதலீட்டாளர்கள் முதலீடுகளில் அவதானமாக நடந்துகொண்டால் ஆதாயம் கிடைக்கும். கும்ப இராசியினருக்கு கூடிய கஷ்டம் தராது. அதிர்ஷ்ட திகதிகள் 18, 27

### மீனம்

பூரட்டாதி நாலாங்கால் உத்திரட்டாதி ரேவதி நட்சத்திரங்கில் பிறந்தவர்களுக்கு மினுமினுக்கும் மாதமாகும். செய்தொழில்கள் யாவும் பல சிரமங்களின் மத்தியில் முன்னேற்றமடையும். மணவரவுகள் தாமதமாகுவதால் மனக்குழப்பங்கள் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தர்கள், மாணவர்கள் மறைமுகைத் தடைகளை எதிர் கொள்வர். முதலீட்டாளர்கள் முதலீடுகளை தருணம் பார்த்து செய்வது நன்மை தரும். மீன இராசியினருக்கு மிகையான தொல்லை தராது. அதிர்ஷ்ட திகதிகள் 5, 23

# வானவில் மருத்துவம்

பதில் தருபவர் :
**எஸ். எப். எல். அக்பர்,** *MBBS (Cey) MS (Cey)*
*MRCOG (UK)* மகற்பேற்று மருத்துவம், பெண் நோய் மருத்துவம்

**திருமணமாகி ஒன்றரை ஆண்டுகளாகின்றன. எனக்கு வயது 21. என் மனைவிக்கு மூன்று மாதங்களுக்கு முன் கருச்சிதைவு ஏற்பட்டது. கருச்சிதையிவ் பின்னர் மாதவிடாய் ஏற்பட்டதால் வயிறு கழுவுதல் அவசியம் இல்லை எனச் சொல்லிய மருத்துவர் விட்டமின் மாத்திரைகளை தந்தார். வயிறு கழுவாத நிலையில் என் மனைவி திரும்பவும் கருவுற்றால் என்ன செய்வது?**

**எஸ்.சந்திரன், மட்டக்களப்பு**

## கருச்சிதைவின் பின்னர் வயிறு கழுவுதல் அவசியமா?

ப : கர்ப்பிணிகளை எடுத்துக்கொண்டால் அவர்களில் 15 முதல் இருபது சதவீதமானோருக்கு இயற்கையாகவே கருச்சிதைவு ஏற்படுகின்றது. இதைத்தவிர்ப்பதற்கு இல்லை. ஒரு முறை கருச்சிதைவு ஆனது என்பதற்காக இரண்டாவது கர்ப்பமும் கலைந்துவிடும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் திரும்பவும் கருச்சிதைவு ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். கருச்சிதைவை மருத்துவ ரீதியாக இரண்டாகப் பிரிக்கலாம். முதலாவது முழுமையான கருச்சிதைவு. அதாவது மிச்சம் மிகுதி எதுவுமின்றி கரு முழுமையாக கருப்பையை விட்டு வெளியேறி விடுவது முழுமையான கருச்சிதைவு என்று அழைக்கப்படுகிறது. கருச்சிதைவின் பின்னர் கருவின் சிறு பாகங்கள், துணிக்கைகள் கருப்பையில் தங்கியிருப்பது முழுமையற்ற கருச்சிதைவு என அழைக்கப்படுகிறது. ஒரு கருச்சிதைவு முழுமையானதா அல்லது முழுமையற்றதா என்பதை அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனிங் மூலம் அறிந்து கொள்ள முடியும். முழுமையானது என்றால் வயிறு கழுவுதல் அவசியப்படாது. இந்த ஸ்கேனிங் முறை இல்லாத காலத்தில் அனைவருக்கும் வயிறு கழுவப்பட்டது உங்கள் மனைவிக்கு முழுமையான கருச்சிதைவு ஏற்பட்டடிருக்க வேண்டும். அதன் பின்னர் மாதவிடாய் ஒழுங்காக வருவதால் கவலைப்படுவதற்கு எதுவுமே இல்லை. மாதவிடாயும் இயற்கையின் சுத்திகரிப்பு முறை ஒன்று தானே..!

**வயது 22. திருமணமாகி இரண்டு ஆண்டுகள். முதல் குழந்தை கிடைத்து ஒரு வருடமாகிறது. ஒரு வருடமாகியும் கூட் இன்னும் எனக்கு மாதவிலக்கு ஏற்படவில்லை. வயிரும் ஓரளவு பெரிதாக இருக்கிறது. சிறுநீர் பரிசோதனை மூலம் கர்ப்பம் இல்லை என்று தெரிய வந்தது. எனக்கும் இப்போதைக்கு இன்னொரு குழந்தை தேவையில்லை. இருந்தாலும் பயமாக இருக்கிறது. கர்ப்பம் தரிக்காமல் உடலுறவு கொள்ள வழிகள் உள்ளனவா? மாதவிடாய் ஏற்படாமலேயே கருத்தரிக்க முடியுமா..?**


**பெயர் குறிப்பிட விரும்பாதவர்,**
**மாத்தளை**

ப : சாதாரணமாக பிரசவத்தின் பின் ஆறு வாரத்தில் இருந்து எட்டு வாரங்களுக்குள் மாதவிலக்கு மறுபடியும் ஆரம்பிப்பது வழக்கம். ஆனால் தாய் ஹோர்மோன் ஊசிகள், மாத்திரைகள் பாவித்திருந்தால் மாதவிலக்கு தள்ளிப்போகலாம். ஒரு தாய் குழந்தைக்கு முலைப்பாலூட்டும் காலத்தில் கருத்தரிக்கும் வாய்ப்பு அனேகமாக இல்லை. இது இயற்கை கருத்தடை. ஆனால் பாலூட்டும் காலத்தில் ஒரு பெண் கருத்தரிக்கவே மாட்டார் என்று அறுதியிட்டு கூறமுடியாது. உங்கள் பிரச்சினைக்கு அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனிங் எடுத்துப்பார்த்தால் உண்மை தெரியும். மாதவிடாய் ஏற்படாமல் கருத்தரிக்கவும் முடியும் என்பதால் முன்னெச்சரிக்கையாக கருத்தடை வழிகளை பின்பற்றுங்கள். ஆணுறை, பெண் கருத்தடை சாதனங்கள் உள்ளன. இவற்றை பாவிப்பது பாதுகாப்பானது.


*கர்ப்பம் தொடர்பான நோய்கள், வருத்தங்கள் பெண் நோய்கள் தொடர்பான உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்*
***எஸ். எப். எல். அக்பர்***
*பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். உங்கள் கேள்விகளை தெளிவாகவும் சுருக்கமாகவும் நெடுநாள் நோயானால் ஏற்கனவே எடுத்துக் கொண்ட சிகிச்சைகளின் போட்டோ பிரதிகளையும் இணைத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். வயதை குறிப்பிட மறக்க வேண்டாம். பெயர் குறிப்பிட விரும்பாதவர்கள் அதை தனிக் கடிதத்தில் தெரிவிக்கலாம். எனினும் பெயர் முகவரி குறிப்பிட மறக்க வேண்டாம். இது எமது தேவைக்காக,*

**வானவில் மருத்துவம்,**
**த.பெ. எண். 1218**
**கொழும்பு.**
e-mail: vannavaanavil@gmail.com

## கைபேசி பெட்டறி ஆற்றல் நீடித்து நிலைக்க என்ன செய்ய வேண்டும்?



கடைகளில் விதம் விதமான கைபேசிகள் விற்பனைக்கு வந்துள்ளன. அதை வாங்குவதா இதை வாங்குவதா என்று திண்டாடிப்போவோர் பலர். எதை வாங்கினாலும் நீங்கள் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயம் அதன் பெட்டறி. அது நீண்ட நேரமும் நீண்ட ஆயுளுடனும் உழைக்கக் கூடியதா என்பதே முக்கியம். ஏனெனில் கைபேசியில் நீங்கள் என்ன செய்தாலும் அதற்கான மின்சாரத்தை வழங்குவது பெட்டறியே.



முடிந்த வரை உங்கள் கை பேசியை தயாரித்த நிறுவனத்தின் பெட்டறி மற்றும் சார்ஜர்களையே பயன்படுத்துங்கள். விலை அதிகம் என்பதால் குறைந்த விலை பெட்டறியை பாவிக்க வேண்டாம். பெட்டறியின் நீண்ட ஆயுளுக்கு இது உதவும்.

அதிக வெப்பமான இடத்தில் பெட்டறியை வைக்க வேண்டாம். பெட்டறியை அடிக்கடி கழற்றி மாற்றவும் வேண்டாம். மெயில் செக் பண்ணிய பின்னர் அல்லது இணையத்தை உபயோகித்த பின்னர் இணைய உபயோகத்தை நிறுத்தி வையுங்கள். இதன் மூலம் சார்ஜ் சீக்கிரம் இறங்குவதை தவிர்க்கலாம்.

பலர், தூங்கும்போது கைபேசியை சார்ஜுக்கு போட்டுவிட்டு காலையில் ஓ.ஃப் பண்ணுவார்கள். இது தவறு. இப்படி செய்வதால் பெட்டறி சூடாகி உப்பிப்போய் செயலற்றுப்போய்விடலாம்.

ரிங்டோன் அளவை குறைத்து வையுங்கள். மேலும் அடிக்கடி கைபேசியை 'சைலண்ட்'டில் வைக்க வேண்டாம். விதவிதமான ரிங்டோன்களை வைத்துக்கொள்வது பலரும் செய்யும் ஒன்று. நல்லது. ஆனால் முழுப்பாடலும் ஒலிக்கும்படி வைத்துக்கொள்ள வேண்டாம். பெட்டறி சார்ஜ் இறங்குவதற்கு இதுவும் காரணம். லைவ் வோல் பேப்பர், வீடியோ ரிங்டோன், அதிக பிக்ஸல் உள்ள படங்கள் என்பனவற்றை பயன்படுத்துவதும் பெட்டறி சார்ஜ் விரைவிலேயே தீர்ந்து போக வழி செய்யும்.


ப்ளூடுத்தை எப்பொழுதும் செயற்பாட்டில் வைத்திருக்க வேண்டாம். தேவையானபோது மட்டும் பயன்படுத்தி ஓ.ஃப் செய்துவிடுங்கள். வை.ஃபையையும் தேவையான போது மட்டும் பயன்படுத்தி ஓ.ஃப் செய்து விடுங்கள்.

புதிதாக கைபேசியை வாங்கியதும், சிம்மை போட்டுப் பேசத்தொடங்க வேண்டாம். முதல் வேலையாக கைபேசியை தொடர்ச்சியாக எட்டு மணித்தியாலம் சார்ஜ் பண்ணுங்கள். மின்சாரம் ஏற்றும்போது முதல் இரண்டு மணித்தியாலயத்திலேயே ஃபுல் என்று காட்டும். கழற்றிவிட வேண்டாம். மேலும் ஆறு மணித்தியாலயம் சார்ஜ் ஏற்றுங்கள்.

அதன் பின்னர் இரண்டு மணித்தியாலயம் சார்ஜ் பண்ணினால் போதும். ஃபுல் என்று காட்டியதும் நிறுத்தி விடுங்கள்.

இரண்டு அங்குல திரை கொண்ட எல்லா மல்டி மீடியா வசதிகளும் கொண்ட ஒரு கைபேசிக்கு குறைந்தது 1000 mah திறன் கொண்ட பெட்டறி அவசியம். பட்டறியின் பின்புறத்தில் இந்தத்தகவல் இருக்கும். இந்தத்திறன் இருந்தால் தான் கேம் விளையாட்டு, இணைய உலா, எம்பி3 உபயோகம், வீடியோ பார்த்தல், வை.ஃபை உபயோகம் எனப் பல பாவனைகளுக்கு பெட்டறி தாக்குப்பிடிக்கும்.

## 'வானவில்' குறுக்கெழுத்துப் போட்டி 10



### இடமிருந்து வலம்

1 சரோஜா தேவியை இப்படியும் அழைப்பார்கள் (10)
4 பத்தில் ஒன்று (3)
5 நல்லவன் (5)
6 இப்படி செலவு செய்யக்கூடாது (4)
8 தமிழ் நாட்டு நகரம் (5)
9 பாடல் (3)
10 எமக்கு நல்லது நடப்பதை விரும்புவர் (7)
13 விஞ்ஞான கற்பனை எழுத்தாளர் (3)
15 இதை எடுத்துத்தான் பெண்கள் தலை சீவுவார்கள் (5)
16 இந்தியாவின் முன்னாள் கிரிக்கட் காப்டன் (4)
17 கவலை (4)
18 ஒழுக்கம் (3)
20 நகைச்சுவை சஞ்சிகை (6)

### மேலிருந்து கீழ்

1 கவிஞர் (6)
2 அடித்தால் சத்தம் வரும் (4)
3 கௌரவர் படைக்கு தலைவன் (6)
7 தொலைவு (3)
9 இது நன்றாக இருந்தால் பிரச்சினைகள் குறையும் (5)
14 இனிக்கும் தின்பண்டம் (4)
16 இதை அமைத்து தேர்தலில் போட்டியிடலாம் (3)
18 பத்தும் பறக்கும் (2)
19 உலகம் (2)

*சரியான விடைகளை எழுதி*
*25. 09. 2011க்கு முன்*


**குறுக்கெழுத்துப் போட்டி - 10**
**வண்ண வானவில்**
**த.பெ. இலக்கம் 1218**
**கொழும்பு**

*என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடை எழுதுபவர்களில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர், முகவரி பிரசுரமாகும்.*

**குறுக்கெழுத்துப் போட்டி இல 09க்கான விடைகளும் பரிசுபெற்றவர்கள் விபரங்களும் 22ஆம் பக்கத்தில்....**

***பழகும் முன் தனிமை***
***பழகிய பின் இனிமை***
***பிரிவு என்பது கொடுமை***
***பிரிந்தால் தான் தெரியும்***
***நட்பின் அருமை***
***இதுதான் பிரண்ட்ஷிப்***

***- நதீஷா***



**ஆயிரம் கோடி நட்சத்திரம் விண்ணில் இருந்தாலும் இரவுக்கு அழகு நிலவு தான். ஆயிரம் உறவுகள் மண்ணில் இருந்தாலும் வாழ்க்கைக்கு அழகு நல்ல நட்புதான்.**

## வானவில் சிறுகதை

# மழலை

தெளிவத்தை ஜோசப்



திடீரென்று தான் அது நடந்தது! எத்தனை பேர் இருக்கின்றோம். யாருமே எதிர்ப்பார்க்கவில்லை.

அந்த இரண்டு வயது குழந்தையை சுற்றி இத்தனை பேர் இருந்தும்இது எப்படி நடந்தது!

இரண்டு வயது பெண் பிஞ்சின் குஞ்சு விரல்களுக்கு எட்டும் உயரத்தில் குளியலறைக்கதவின் வெளிக்கொக்கி இருந்திருக்கிறது. நடு விரலால் உந்த, கொக்கி மேலே போய்விட கதவு திறந்துகொண்டு விட்டது. அம்மாவுடன் பிஞ்சுக்கைகளில் சவர்க்காரம் குழைத்துக் குதூகலித்த பழக்கத்தில் உள்ளே நுழைந்துவிட்டது குழந்தை.

நுழைந்தது மட்டுமல்லாமல் நுழைந்த வேகத்தில் கதவையும் சாத்திக்கொண்டுவிட்டது.

உள்ளே இருப்பது வெளியில் இருப்பது போல் வெறும் கொக்கி அல்ல. பித்தளையிலான உயர் ரக சொய்பர் கொண்டி.

'பபா எங்கே..' என்று யாரோ ஒருவர் எழுப்பிய குரல் எல்லோரையும் திடுக்கிட வைத்து விட்டது. எங்கே எங்கே என்று தேடுகிறார்கள். சின்னதை காண முடியவில்லை.

முன் ஹாலை ஒட்டினாற் போல் ஒரு பக்கம் படுக்கையறை, மறுபக்கம் குழந்தையின் விளையாட்டறை. இரண்டுக்கும் இடையில் குளியலறை. குளியலறையின் கதவை பூட்டிவிட்டால் உள்ளே நடப்பதொன்றும் வெளியே தெரியாது. இப்போதும் அதேதான்..!

குளியலறைக் கதவில் வெளியே கொண்டி தொங்கிக் கொண்டிருந்ததால் உள்ளே யாரோ இருக்கிறார்கள் என்று அர்த்தம்.

சின்னதின் மமாவுக்கு தான் பளீரென அது தெரிய வந்துள்ளது.

வெளியே கொண்டி தொங்கிக்கொண்டிருக்கிறது. கதவை தள்ளி பார்த்தால் உள்ளே கொண்டி போடப்பட்டிருக்கிறது.

'மமா நான் உள்ளி...' என்னும் உற்சாகமான மழலை வெளியிலிருப்போரின் காதுகளில் நாராசமாய் நுழைகின்றது.

படபடவென்று தட்டிப்பார்க்கின்றார்கள். தள்ளிப்பார்க்கின்றார்கள். கதவு பூட்டப்பட்டிருக்கிறது.

இப்போது குழந்தை உள்ளே! குளியலறைக்குள் தன்னந்தனியாக..!

அம்மா, அம்மம்மா எல்லோரும் வெளியே..! குளியலறைக்கதவருகே.. கூட்டமாக பதறிக்கொண்டும், கைகளை பிசைந்து கொண்டும்.. மெதுவாக கதவைத்தட்டிக்கொண்டும்..! குழந்தையாக கதவை திறந்து கொள்ளாவிட்டால் வெளியே இருப்பவர்களால் ஒன்றும் செய்ய முடியாது.

கதவை உடைப்பதென்பது உடனடி சாத்தியமான காரியமில்லை.

லேசாக உடைப்பதற்கு ஏதுவாகவா கதவுகள் அமைக்கப்படுகின்றன? 'பேபி.. கதவத்திறங்கம்மா.. பூட்டின மாதிரியே மத்தப்பக்கம் கொண்டியை தள்ளுங்கம்மா..'

'கதவு கிட்டவே நில்லுங்கம்மா.. உள்ளுக்கு போகாதீங்க.. வழுக்கும்..'

வெளியே இருந்து பல விதமான குரல்கள்.. பலவிதமான கோரிக்கைகள்.

வெளியில் இருந்து கேட்கும் குரல்களுக்கு பதில் குரலாக கேட்பது அடிக்கொரு தடவை சொய்பர் ஆட்டப்படும் ஒலியும் கூடவே.. மமி.. மமி என்னும் குழந்தையின் கம்மிய குரலும் மட்டுமே..

உள்ளே நுழைந்து கதவை பூட்டிக்கொண்டபோது இருந்த குதூகலம் குழந்தையிடம் இப்போது மறைந்துவிட்டது.

தனக்கு பிரியமானவர்கள் எவருடைய முகமும் தெரியவில்லை. ஏதோ ஒரு பாதாள உலகத்திற்குள் தள்ளப்பட்டு, தனியாக மாட்டிக்கொண்டது போன்றதொரு பயம் தோன்றுகின்றது.! ஒருவருமே அருகில் இல்லை என்கிற தனிமை உணர்வு மேலெழுகின்றது.

'தாத்தாக் கண்ணைக் காணவில்லையே' என்னும் ஏக்கமும் கூடவே வருகின்றது. காணவில்லை என்பது குரல் கேட்கவில்லையே என்னும் ஆதங்கம்.

'தாத்தாவை குழந்தை தாத்தா கண்ணே' என்று அழைக்கும். தாத்தாவும் குழந்தையை எத்தனை எத்தனையோ செல்லப்பெயர் சூட்டி அழைத்தாலும் கூடவே ஒரு கண்ணேயையும் சேர்த்துக்கொள்வார். குஞ்சுக் கண்ணே, பூக்கண்ணே, சில்வியாக்கண்ணே.. இப்படி! அதன் எதிரொலிதான் இந்த தாத்தாக்கண்ணே!

தாத்தா தன்னுடைய படிப்பறையில் பைபிள் படித்துக்கொண்டிருந்தார்.

ஏசு, பேசிக்கொண்டிருக்கிறார். சீடர்கள் அருகில் இருக்கின்றனர். மக்கள் தங்கள் சந்தேகங்களை கேட்க வந்திருந்தனர்.

'நீங்கள் கூறும் மோட்ச ராஜ்ஜியத்தில், பேரின்ப வீட்டில் யாருக்கு அதிக மகிமை' என்று அவர்கள் கேட்டார்கள்.

ஏசு ஒரு குழந்தையை தூக்கி மார்பில் அணைத்துக்கொண்டார்.

'உண்மையாகவே உங்களுக்கு சொல்கின்றேன். நீங்கள் குழந்தைகள் போல் இருக்க வேண்டும். இல்லை என்றால் மோட்ச ராஜ்ஜியத்தில் உங்களுக்கு இடம் கிடையாது. குழந்தையை போற்றுகிறவன் என்னை போற்றுபவனாகின்றான்'

வீட்டை சுற்றி குழந்தை, குழந்தை என்னும் குரல்கள் கேட்கின்றன. எழுந்து வெளியே வந்தவர் நிலைமைகளை உணர்ந்துகொண்டார்.

''குஞ்சுக்கண்ணே அப்படியே நில்லுங்கள்.. தாத்தா உங்களிடம் வருகின்றேன்...'' என்று குரல் கொடுத்தார்.

குழந்தைக்கு திடீரென ஒரு குதூகலம். யாரோ ஒருவர் தன்னிடம் வரப்போகிறார். இந்தத்தனிமை ஓடிவிடும்.. அவர் என்னை தூக்கிக்கொண்டு போய் மம்மியிடம் கொடுத்துவிடுவார்...

வீட்டைச்சுற்றி ஓராள் உயரத்திற்கு ஒரு மதில் இருக்கின்றது. சுற்று மதிலுக்கும் வீட்டுச்சுவருக்கும் இடையில் உள்ள இடம் நாய் பூனைகள் ஓட மட்டுமே போதுமானது. மனிதர்கள் அதற்குள் நுழைந்து நடக்க வேண்டுமாயின், கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடிக்க டேவிட் பிளேய்ன் என்னும் அமெரிக்கன் லண்டனில் உண்ணாவிரதம் இருந்தது போல் 40 நாள் இருந்து உடல் மெலிய வேண்டும்.

இப்போது குழந்தை சிக்குண்டிருக்கும் குளியறைக்கும் ஓராள் உயரத்துக்கு மேலாக ஒரு ஜன்னல் இருக்கிறது. கைகூட நுழைய முடியாத அளவுக்கு இரும்பு க்றில் பூட்டப்பட்டுள்ள ஜன்னல் அது. எப்போதும் திறந்தே தான் இருக்கும். வீட்டின் சுற்று மதிலின் உயரத்திற்கும் கம்மியான உயரத்திலேயே ஜன்னல் இருப்பதால் அதை மூடிவைக்கும் தேவை ஏற்படுவதில்லை. சமையலறைக்கதவு வழியாக வெளியே வந்து பூனைகள் மட்டுமே மகிழ்வுடன் உலாவும் அந்தச்சின்ன சந்துக்குள் நுழைந்து முதுகை சுவர் பக்கம் வைத்து பக்கவாட்டில் நகர்ந்து வீட்டை சுற்றி மறுமுனைக்கு வந்தால் குளியலறை ஜன்னலடியில் நிற்போம்.

வந்தாயிற்று... திறந்த ஜன்னலின் உச்சந் தலையை உரசிக்கொண்டிருக்கிறது. எதையாவது வைத்து ஏறினால் தான் ஜன்னலால் உள்ளே பார்க்க முடியும்.

ஆளே நுழைய முடியாத சந்துக்குள் எதைக்கொண்டு வந்து வைத்து ஏறுவது..!

ஆளே நுழைய முடியாதென்றால் எதற்காக இந்தச்சந்து என்று யாரும் கேட்கலாம். அது வீட்டுக்காரரை கேட்க வேண்டிய கேள்வி.

பின் சுவரில் ஒரு காலும், வீட்டுச்சுவரில் ஒரு காலுமாக ஊன்றி உந்தி உந்தி ஏறி தலையை ஜன்னல் வரை உயர்த்தியாகிவிட்டது.

பூட்டப்பட்டுவிட்ட கதவில் முதுகைச்சாய்த்தபடி சோர்ந்து போய் நிற்கிறது சிசு.

கதவின் மண்வர்ணப் பின்னணியில் ஒரு லில்லி மலர் போல.

மெதுமெதுவாக உயர்ந்த தாத்தாவின் முகம் ஜன்னலில் தெரிந்தவுடன் சோர்வுற்றுப்போயிருந்த அந்த சின்ன வதனத்தில் ஏற்பட்ட மகிழ்வை பார்க்க வேண்டுமே!

இதோ கைக்கெட்டும் தூரத்தில் எனக்கொரு துணை என்ற துணிவு! அதனால் ஏற்பட்ட மகிழ்வு. அந்த மகிழ்வில் முகிழ்ந்த லாவண்யம். கதவின் சாய்விலிருந்து அசைந்து அசைந்து முன்னேறுகிறது குழந்தையின் முகம். திரைத்துணியில் அசைந்தாடும் ஓவியம் போல்!

இப்படியே தான் இரண்டுக்கு ஒன்றரை அடிப் படம் ஒன்று இருக்கிறது முன் ஹாலில். இதே பூஞ்சிரிப்புப் பார்வையுடன்.

இரண்டாவது பிறந்த தின நினைவுக்காக கோவிலுக்கு போய் வீட்டுக்கு திரும்புகையில் 'மமாவும்' பப்பாவும் ஸ்டூடியோவுக்குப்போய் ஒரு நெஞ்சளவு போஸ்கார்ட் சைஸ் படம் ஒன்று எடுத்துள்ளார்கள் குழந்தையை ம்ட்டும். படத்தை வாங்கச் சென்றபோது ''டெறிப்லி போட்டோஜினிக் லிட்டில் ப்ளவர்' என்ற கொமென்டுடன் படத்தை கொடுத்துள்ளார் ஸ்டூடியோக் காரார்.

பிறகொரு நாள் எதற்காகவோ அந்த ஸ்டூடியோவுக்கு போனபோது திகைத்துப்போய் விட்டனர் பெற்றோர். குழந்தையின் படம் பெரிய அளவில் ஸ்டூடியோ விளம்பரத்துடன் அழகாக கண்ணாடி பிரேமுக்குள்.

'எங்கள் குழந்தையை எங்கள் அனுமதி இன்றி எப்படி விளம்பரத்துக்குப் பாவிக்கலாம்..' என்று ஸ்டூடியோக்காரருடன் சண்டை பிடித்துள்ளார்கள். 'வழக்குப்போடுவோம்' என்று கொதித்துள்ளார்கள். பிறகு ஒரு விதமாக சமாதானம் கொண்டு விளம்பரத்தை வெட்டி அப்புறப்படுத்திவிட்டு பெரிய அளவிலான படத்தை வாங்கிக்கொண்டு வந்து ஹாலில் மாட்டினார்கள்.

கதவில் சாய்ந்தபடி சோகமும், சோகம் மறைந்த ஒரு ஒய்யாரமுமாக இதோ நிற்கிறதே இதே போலத்தான்.

'தாத்தாக்கண்ணே' என்று பலமாகக் கூவியபடி ஜன்னலை நோக்கி விரைய எத்தனித்தது குழந்தை.

'வரவேண்டாம் கண்ணே.. அங்கேயே இரு.. கதவுப்பக்கம் திரும்பி கொண்டியை காட்டுங்கள்..' என்கின்றார் தாத்தா.

சரியாக சொய்பரின் உருண்டை தலையை பிடித்துக்காட்டுகிறது குழந்தை.

சொய்பரின் கீழ் இடைவெளிக்குள் விழுந்து கிடக்கிறது இந்தக்குமிழ்.

அதைப்பிடித்து தான் குழந்தை ஆட்டுகிறது. ஒலி எழுப்புகிறதே தவிர முன், பின்னாக அது ஓட மறுக்கிறது.

'அதுதான் அதுதான்' உற்சாகமாக கூறுகின்றார் தாத்தா. 'அதைப் பார் செல்லம்' என்கிறார்.

குழந்தை அதை நேராக்குகிறது. மேல் இடைவெளிக்குள் அது விழுந்துவிட்டால் மறுபடியும் இப்பக்கம் அப்பக்கம் ஓடாது.

ஆகவே குழந்தையின் விரலசைவுகளையே உன்னிப்பாகக்கவனித்துக்கொண்டிருந்த தாத்தா, குமிழைக்குழந்தை நேராக உயர்த்தியதும் இப்போது தள்ளு என்றார்.

பூட்டுகிற பக்கம் தள்ளிப்பார்த்து ஏமாறுகிறது குழுந்தை. அந்தப்பக்கம் இல்லை மற்றப் பக்கம் என்று தாத்தா கூறி முடிக்குமுன் சின்ன விரல்கள் இயங்கின. 'கிளிக்' என்னும் ஒலியுடன் கொண்டி விலகியது. கதவு திறந்துகொண்டது.

தேவனைத்தொழ வான் நோக்கி உயரும் பக்தர்களின் கரங்கள் போல் எத்தனை கரங்கள் நீளுகின்றன!

வெளியே ஓடிவந்த குழந்தை அம்மாவின் கரங்களுக்குள்'அடைக்கலமாகின்றது.

இனியொரு தடவை இப்படி நேராமல் இருக்க என்ன செய்யலாம்.. வெளியிலிருக்கும் கொக்கியை குழந்தைக்கு எட்டாத உயரத்தில் அடித்துக்கொள்ளலாமா.. என்பது போன்ற சிந்தனைகளில் மூளையை குழப்பிக்கொண்டனர் கூடி நின்ற பெரியவர்கள்.

'இன்னொரு தடவை இப்படி நடந்து விட்டால் இதேபோல் திறந்து கொள்வேன்..' என்ற தெளிவான சிந்தனையுடன் குழந்தையின் பிஞ்சுக்கைகள் அம்மாவின் கழுத்தை இறுக்கிக்கொண்டன. கண்களின் ஓரம் தாத்தாவை தேடுகிறது.



பத்திரிகையாளர் : எல்லோரும் அஜித்த தலைன்னு சொல்றாங்களே அப்போ நீங்க யாரு..?

விஜய் : நான் அதுக்கு மேல

பத்திரிகையாளர் : அதுக்கு மேலன்னா நீங்க என்ன மயிரா?

ஏ.ஜே.எம்.ஜாபீஸ்,
தோப்பூர் 05

# மும்பை நாயகிகளின் வரவால் கதி கலங்கி போயிருக்கும் தமிழ் நடிகைகள்




தமிழ் சினமாவில் இருந்த வட இந்திய நடிகைகளின் ஆதிக்கத்தை த்ரிஷா, அசின், அனுஷ்கா, அமலாபால்.. என தென்னிந்திய நடிகைகள் உடைத்தெறிந்தனர். இப்பொழுது மீண்டும் மும்பை மோகினிகளின் ஆதிக்கம் அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது.

அசின், த்ரிஷா போன்றவர்களுடன் ஜோடி போட்டு ஹீரோக்களுக்கு சலிப்பு வந்தவிட்டது போல..! புதுப்புது நாயகிகளை மும்பையிலிருந்து இறக்குமதி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். கமலின் 'விஸ்வரூபம்' படத்திற்காக சோனாக்ஷி சின்ஹா, விக்ரமின் 'ராஜ பாட்டை' க்காக தீக்ஷாசேத், அஜீத்தின் 'பில்லா-2' படத்திற்காக ஹியுமா குரேஷி, சிம்புவின் 'ஒஸ்தி' தனுஷின் 'இரண்டாம் உலகம்' படங்களுக்கு ரிச்சா கங்கோபாத்யா.. என வித விதமாக மும்பை பார்ட்டிகள் வந்திருக்கிறார்கள் மற்றும் வருகிறார்கள்.

ஏற்கனவே விஜய்யின் 'வேலாயுதம்' படத்தில் ஹன்சிகா மோத்வானியும், ஜெயம் ரவியின் 'ஆதிபகவன்' படத்தில் நீது சந்திராவும் , ஜீவாவின் 'வந்தான் வென்றான்' படத்தில் டாப்ஸியும் நடித்துக்கொண்டடிருக்கிறார்கள். இதனால் சவுத் பார்ட்டிகள் சங்கடத்தில் இருக்காங்க.









ரத்த உறவுகளின்
ஒவ்வொரு படத்தி
இயக்குனர் இராசு
அடுத்து இயக்கும்
நகைச்சுவை, கு
மயில்சாமியின் மக
நாயகனாக அறிமு
ஜோஸ்னா.
வழக்கமாக வாய்
இயக்குனர்களை
இந்தப்படத்தில் அ
ராமையா, சூரி, சி
பலர் நடிக்கும், 'ப

## நாயகனா

படப்பிடிப்பை துவா
''முழுக்க முழுக்
வலிமையை உண
இராசு.மதுரவன்.
ஏன் புதுமுகங்கள
''நடிகரின் முகம்
மனசில் பதிய வே
இந்தப்படத்தின்
எழுதி இருக்கிறார்.
மயில்சாமி மகன்
மயில்சாமியின் இ

## புதிய பாடம் சொல்லும் ஒத்திகை

இந்தியாவிலுள்ள பிரபலமான சுற்றுலாத்தலங்களுக்கு வருகிற பல காதல் ஜோடிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். உண்மையில் அவர்களில் பல காதல் ஜோடிகள் தள்ளிவிடப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள். தெரிந்தவர், அறிந்தவர் இல்லாமல், முன்பின் விரோதம் இன்றி ஏன் கொல்லப்படுகிறார்கள்? யாருக்கு என்ன லாபம் என்கிற கதையை உருவகப்படுத்தி உருவாகிறது 'ஒத்திகை' என்ற படம்.

கொடைக்காணல், குற்றாலம், கோவை, தலக்கோலம், சென்னை பகுதிகளில் படப்பிடிப்பை நடத்தி வருகிறார் இயக்குநர் ஏ.எம்.பாஸ்கர். இவர் தான் கதை-திரைக்கதை-வசனம், தயாரிப்பும் செய்கிறார்.



இந்தப்படத்தில் ஜெய் ஆகாஷ், அர்ச்சனா சர்மா ஜோடி போட, 'காதல்' தண்டபாணி, நெல்லை சிவா உள்பட பலர் நடிக்கின்றார்கள். 'ஒத்திகை' தப்பான பாடத்தை சொல்லாமல் இருந்தால் சரி..!

## அது முத்தக்காட்சி மாதிரி

### நிவேதிதா அதிரடி



இயக்குனர் பெப்ஸி விஜயன் படத்தில் என் வேடம், காட்சி அமைப்பு பற்றி முன்பே தெரிவித்துவிட்டார். கதைப்படி நீருக்குள் மூழ்கியிருக்கும் என்னை நாயகன் தன் மூச்சுக்காற்றை எனக்குள் செலுத்தி காப்பாற்றுவார். தண்ணீருக்கு அடியில் காப்பாற்றும்போது முத்தக்காட்சி போன்று தெரிகிறது, அவ்வளவுதான். கதைக்கு தேவையாக இருந்ததால் அப்படி நடித்தேன். தற்போது கன்னடத்தில் இரண்டு படங்கள் நடித்துக்கொண்டிருக்கிறேன். விரைவில் ஒரு தமிழ் படத்தில் நடிக்க இருக்கின்றேன் என்கிறார் நிவேதிதா.

## என் தகுதிக்கேற்ற சம்பளத்தையே பெறுகிறேன்



என்னைப்பற்றி நிறைய வதந்திகள் வருகின்றன. இந்தி படங்களில் நடிப்பதற்காக எனது சம்பளத்தை பாதியாக குறைத்துக்கொண்டதாகவும் ஒரு கோடிக்கு மேல் சம்பளம் கேட்கிறேன் என்றும் ஏராளமான செய்திகள் வருகின்றன. இந்த விஷயத்தில் ஒருபோதும் நான் கருத்துக்கூறவோ, அல்லது மறுக்கவோ மாட்டேன். பலர் பலவிதமாக தொடர்ந்து எழுதிக்கொண்டுதான் இருக்கப்போகிறார்கள்.

ஆனாலும் என் தகுதிக்கேற்ற சம்பளத்தையே பெறுகிறேன். இனி, இந்திக்குத்தான் முக்கியத்துவமா என்றும் கேட்கிறார்கள். அப்படியில்லை, நடிப்பு என் தொழில். அதனால் படங்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கிறேன். அது எந்த மொழி என்று பார்க்கவில்லை. தமிழில் ஷங்கர் இயக்கத்தில் நடிப்பது வித்தியாசமாக இருக்கிறது. இந்தியில் '3 இடியட்ஸ்' படத்தை பல முறை பார்த்திருக்கின்றேன். அதில் கரீனா கபூரின் நடிப்பு எனக்கு பிடித்திருக்கிறது. இருந்தாலும் அவர் நடித்தது போல நடிக்க மாட்டேன். இவ்வாறு இலியானா கூறுகிறார்.

## இந்திக்கு வந்தார் சினேகா

தமிழ்ல் 'ஜூன் ஆர்' படத்தை இயக்கியவர் ரேவதி வர்மா. இவர் இந்தி படம் ஒன்றை இயக்குகின்றார். நஸ்ருதீன் ஷா நாயகனாக நடிக்கிறார். நாயகியாக சினேகா நடிக்கிறார். வட நாட்டு தொழிலதிபரை மணந்து டெல்லியில் குடியேறும் தமிழ்ப்பெண்ணின் கதை.

இதில் சினேகா தமிழ் பேசி நடிக்கிறார். இது குறித்து சினேகாவிடம் கேட்டபோது 'இந்திப்படத்தில் நடிக்க எப்போதும் முயற்சித்தது இல்லை. இந்தப்படத்தில் தமிழ் பெண் பாத்திரம் என்பதால் ஒப்புக்கொண்டிருக்கிறேன். தொடர்ந்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. மற்ற விஷயங்கள் பற்றி பிறகு சொல்கிறேன்'' என்றார்.





...த்த உறவுகளின் வலிமையும் வலியையும் ...வொரு படத்திலும் பதிவு செய்து வருபவர் ...க்குனர் இராசு மதுரவன். அந்த வகையில் அவர் ...டுத்து இயக்கும் படம் 'பார்த்தோம் பழகினோம்' ...கைச்சுவை, குணச்சித்திரர நடிகரான ...யில்சாமியின் மகன் அன்புவை இந்தப்படத்தில் ...யகனாக அறிமுகப்படுத்துகிறார். கதாநாயகி ...ாஸ்னா.

...ழக்கமாக வாய்ப்பில்லாது போன ...க்குனர்களை நடிகராக்கும் இராசு. மதுரவன் ...ந்தப்படத்தில் அதைத் தவிர்த்திருக்கிறார். தம்பி ...மையா, சூரி, சிசர் மனோகர், வையாபுரி உட்பட ...ர் நடிக்கும், 'பார்த்தோம் பழகினோம்'

## ...நாயகனாகும் மயில்சாமியின் மகன்

...ப்பிடிப்பை துவங்கிவிட்டார்.

"முழுக்க முழுக்க காதல் உறவுகளின் ...லிமையை உணர்த்தும் படம் இது..!" என்கிறார் ...ாசு.மதுரவன்.

...ன் புதுமுகங்களையே தேடுகிறீர்கள்?

"நடிகரின் முகம் முன்நிற்கக்கூடாது. கதாபாத்திரம் தான் ரசிகர்களின் ...னசில் பதிய வேண்டும் என்பதற்காகத்தான்" என்கிறார்.

...ந்தப்படத்தின் அனைத்துப் பாடல்களையும் நா.முத்துக்குமாரே ...ழுதி இருக்கிறார்.

...யில்சாமி மகன் அன்பு அப்பாவைத்தாண்டி வரவேண்டும் என்று ...யில்சாமியின் இஷ்ட தெய்வம் எம்.ஜி.ஆரை வேண்டுவோம்!



பிரபதேவாவுக்கு ரம்லத்திடமிருந்து விவாகரத்து கிடைத்ததும் பிரசித்தி பெற்ற கேரளா கோவில்களுக்கெல்லாம் தன் குடும்பத்துடன் போய் வந்திருக்கிறார் நயன்தாரா. கூடவே பிரபுவிற்கு விலை உயர்ந்த வைர மோதிரம் ஒன்றையும் பரிசாக அணிவித்து ஆச்சரியப்படுத்தி இருக்கிறார். பொதுவாக வைரம் பெண்களுக்கு ஆண்கள் பரிசாக தருவதாயிற்றே என விசாரித்தால் டான்ஸ் மாஸ்டரின் ராசிக்கு வைரம் உகந்ததென்ற பதில் வருகிறது நயனிடமிருந்து.



# 3டி படம் இயக்கப் போகிறேன்

**சேரன் பேட்டி**

'மை டியர் குட்டிச்சாத்தான்' 3டி படத்துக்குப்பிறகு விஜயகாந்த் நடித்த 'அன்னை பூமி' 3டி படம் வெளிவந்தது. தொழில்நுட்பங்கள் நிறைய வளர்ந்திருக்கும் இந்த காலகட்டத்தில் தமிழில் ஏன் அதிகமாக 3டி படங்கள் உருவாகவில்லை என்று தெரியவில்லை. நானும் 3டி படம் இயக்கப்போகிறேன். அதற்கான கதையையும் தயார் செய்துவிட்டேன். கலையை ரசிக்கும் எண்ணம் மாறி பொழுது போக்கிற்காக மட்டுமே ரசிகர்கள் படம் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், வெவ்வேறு புதிய முயற்சிகள் செய்து, எங்களை நாங்களே காப்பாற்றிக்கொள்கின்றோம். மாறி வரும் ரசனைகளுக்கு ஏற்ப நம்மை மாற்றிக்கொண்டு படங்கள் தர வேண்டும் என்கிறார் சேரன்.



## சென்னையில் சமீரா

மும்பையில் குடியிருக்கும் சமீரா ரெட்டி, விரைவில் சென்னையில் குடியேறுகிறார்.

இந்தி நடிகையான சமீரா ரெட்டி தற்போது 'வேட்டை' படத்தில் மாதவன் ஜோடியாகவும், 'வெடி' படத்தில் விஷால் ஜோடியாகவும் நடித்து வருகிறார். அடுத்து கவுதம் மேனன் இயக்கும் ஒரு படத்தில் நடித்து வருகிறார். தொடர்ந்து தமிழ் படங்களில் நடித்து வருவதால் சென்னையில் குடியேற இருக்கிறார் சமீரா. இது குறித்து அவர் கூறியதாவது :

தமிழ்ப்படங்களில் நடித்து வருவதால் மட்டுமல்ல, நிஜமாகவே சென்னை எனக்கு பிடித்த ஊர். தமிழ் நாட்டு உணவு எனக்கு பிடித்திருக்கிறது. கவுதம் மேனன் உட்பட்ட நெருக்கமான நண்பர்களும் சென்னையில் தான் அதிகம். அதனால் சென்னையில் குடியேற விரும்புகிறேன். இதற்காக எனது நண்பர்கள் மூலம் சென்னையில் வீடு பார்த்து வருகிறேன்.



ஆர்யாவுடன் மதராசப்பட்டனம் படத்தில் இணைந்து நடித்த வெள்ளைக்கார நடிகை எமி ஜாக்சன் மலையாளப்படம் ஒன்றில் திலிப் ஜோடியாக நடிக்கிறார். அம்மணியை திலிப் படத்திற்கு சிபாரிசு செய்தது ஆர்யா என்பது தான் இங்கு கவனிக்கத்தக்க விஷயம்!



தமன்னாவை புக் பண்ண வரும் தயாரிப்பாளர்களிடம் ஓங்க படத்துக்கு ஒடனே கால்ஷீட் அட்ஜஸ்ட் பண்ணித்தர்றோம்! அதுக்கு எனக்கு கமிஷன் கொடுங்க என்கிறாராம் தமன்னா டாடி.



மைலாப்பூரில் உள்ள தனது சொந்த வீட்டில் தனி பூஜையறையில் சாய்பாபா படம் வைத்து வணங்கி வருகிறார் விமலாராமன்.



## சினிமாவுக்கு முழுக்கு போட்ட நடிகை

தலைநகரம் படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் மலையாள நடிகை ஜோதிர்மயி. 'நான் அவன் இல்லை', 'வெடிகுண்டு முருகேசன்' உட்பட பல படங்களில் நடித்தார். திருமணமான ஜோதிர்மயி தனது திருமணத்தை வெளிக்காட்டிக்கொள்ளாமல் நடித்து வந்தார். இந்நிலையில் திடீரென்று விவாகரத்து கேட்டு கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். வழக்கு நீதிமன்றத்தில் நடந்து வரும் சூழ்நிலையில் ஜோதிர்மயி மனக்கவலை காரணமாக சினிமாவுக்கு முழுக்குப் போட்டுவிட்டதாக கூறப்படுகிறது. ஏற்கனவே அவர் நடித்து வந்த மலையாளப்படங்களை முடித்துக் கொடுத்துவிட்டார். என்றும் புதிய படங்கள் எதையும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் அவர் சினிமாவுக்கு முழுக்க போட்டுவிட்டதாக கேரள திரையுலகில் செய்தி பரவியுள்ளது.



சோனியா அகர்வால் படுகவர்ச்சியாக உடையணிந்து ஒரு நடிகையின் வாக்குமூலம் படத்தில் நடித்து வருகிறார். தொடர்ந்து படங்களில் நடிக்க உள்ளாராம். கேட்டால் எனக்கு இன்னும் இளமை குறையவில்லை என்கிறார் அம்மணி. தற்போது 20 லட்சம் சம்பளம் பேசி நடித்திருக்கிறார்.



சமீபத்தில் நடிகர் அருண் விஜய்க்கு பிறந்த ஆண் குழந்தைக்கு 'ஆர்னவ்' என்று சமஸ்கிருதத்தில் பெயர் குறித்துக்கொடுத்திருக்கிறார் கவிஞர் வாலி. ஆர்னவ் என்றால் கடல் என்று அர்த்தமாம்.

# கவி முற்றம்

## கவிதை

உயிரின் ஒலியை
எழுதுகோல்
மொழி பெயர்த்தபோது
கிடைத்தது
கவிதை

- றாஹில்

## வேண்டுதல்

மழை வேண்டி
பிரார்த்தித்தால் நீ
பெய்த மழை
அறுவடையின்போது!

- ராஜகவி

## காதல்



அடி வயிற்றில்
இடி விழுந்தது
போல
அண்ணன்
என்றாள்.

சூர்யா
இரத்தினபுரி

## பாவம்

சுமங்கலி
பூஜையன்று
அம்மன் தாலி திருட்டு
கவலையில் பக்தை

- சுரேன்
மட்டக்களப்பு

## நாட்குறிப்பு

அன்று நீ போட்ட
கையெழுத்தை இன்னும்
அழிக்காமல் பத்திரமாய் வைத்திருக்கிறேன்
நீ கூட அதை
மறந்திருக்கலாம் ஆனால்
என்மேல் - நீ இறக்கி வைத்த
உன் வேதனைகளை நான்
மறக்கவில்லை.
அன்று ஆதரவாய் அரவணைத்தாய்
இன்று அநாதையாய் வாழ்கிறேன்
உன் இறந்த கால நினைவுகளுடன்

- எப்.எஸ்.பாஹிரா
ஹாலிஎல

## ஒரு நாள்

உனதும் எனதுமான சந்திப்பின்
இறுதி நாளாக இருக்க வேண்டும் என
இருவரும் ஒருமித்து வேண்டிய நாள்
உன்னால் நானும் என்னால் நீயும்
பகிர்ந்துகொண்ட இன்பங்களை மறந்து
பட்ட கஷ்டங்களை மட்டுமே நினைவுபடுத்திய
நாள்
மெல்லிய வெண்பனியில்
ஏறிட்டு முகத்தினை பார்த்தபடி பேசிக்கொண்ட
நாள்
அறிமுகமான நாளிலிருந்து
அருகிலிருக்க விரும்பிய இதயம்
எப்போது விடைபெறலாம் என ஏங்கிய நாள்
இதயங்கள் இடம் மாறி
எங்கள் காதல் முறிந்த
கடைசி சந்திப்பு நடந்த நாள்.

- அபி

## அந்நியன்

விடிவெள்ளி மறையாத காலை
விழி தூங்க முடியாத கனவு
விமானப்பயணம்

என்ன வாங்கலாம்
என்ன கொடுக்கலாம்
எல்லோர் நினைவும்
முட்டி மோதிற்று..

அம்மாவுக்கு அப்பாவுக்கு
ஆசைத்தங்கைக்கு
அடுப்படி வரைக்கும் என்ன
தேவையோ
கணக்கு போட்டாயிற்று

அம்மா கூட அறுபது நாள்
தங்கப்போகிறேன்
நினைவின் சுகத்தில்
அந்நாளும் வந்தது..

அத்தையும் மாமாவும்
ஏர்போட்டில்
அப்பாவை காணவில்லை
பயணம் தொடங்கிற்று

பொண்ணைக் கொடுத்த இடத்தில்
கையை நனைக்கிறதா
அப்பாவும் அம்மாவும்
அரை நாள் தங்கவும்
சங்கடப்பட
அத்தையிடம் மெல்லக்கேட்டேன்

அங்கைபோய்
நிக்கப்போறியளோ
நுளம்பு பிள்ளை
ஆஸ்பத்திரியும் பெரிசில்லை
அவையவள் வந்து நிக்கட்டும்
அல்லது போய் பகலோட
திரும்பிடுங்கோ

ஓவென்று அலறும்
என்மனது அறியாமல்
அடுக்கிப்போனா அடுக்கடுக்காய்
எங்களின் இரண்டு மாத
அட்டவணையை

அத்தை வீட்டுக்கு
அடிக்கடி வர

அம்மா சங்கடப்பட
ஆசை தங்கை
என்பிள்ளைகளை தூக்கக்கூட
பயந்து நிற்க

எனக்குப்பிடிக்கும் என்று
அப்பா வாங்கி வந்த
பிலாப்பழம் மணம் வீசிய படி
மூலையில் கிடக்க
எல்லாவற்றுக்கும்
அந்நியனாய் எந்நாட்டில்
நான்

- சுஜி

## அந்த நாள்

மாலை மங்கி
இருள் சூழத்தொடங்கியிருந்தது

சாலையோர மலர்களை
ரசித்த வண்ணம்
பேச்சை தொடர்ந்தாள்
எதையெதையோ பற்றி
தொடர்ச்சியே இன்றி

மழைக்கு அதீத காதல்
நிலமடந்தை மீதா?
எங்கள் மீதா?

பொழியத் தொடங்கினான்
மூச்சு விடவும் தாமதிக்காமல்

என்னோடு அவளும் துழாவினாள்
முழுதாய் நனைந்தும்
ஒதுங்க இடமொன்று

தஞ்சம் புகுந்தோம்
ஓர் மரத்தின் கீழ்

அவள் மூச்சுக்காற்று
ஊடலாய்
என் காது மடலோடு

ஆயிரம் ஆயிரம்
மின்னல் கீற்றுகள்
என் மனதோடு

சற்று தைரியமாய்
சேர்த்து அணைத்தேன்
உயிரோடு மெய்யையும்
இதழோடு இதழையும்

சட்டென்று உணர்ந்தவளாய்
என்னை விலக்கி விட்டோடினாள்
சிறிதளவும்
வெட்கம் விலகாமல்

- எஸ். புனிதா

## என்ன பேறு பெற்றோம்



என் இனிய சோதரரே
எங்களுக்காய் உழைத்து
உயர்ந்திருக்கும் பெரு நோக்கில்
கற்றவரும் காளையரும்
காருண்ய சீலர்களும்
களத்தில் குதித்து விட்டார்
படலை திறந்து படியேறி நின்று
கும்பிடுவார் குழைந்தலைவார்
நவரச நாயகனை நடிப்பால் தோற்கடித்து
வென்றிடுவார் வென்றபின்
வீதி வந்து கையசைத்து சென்றிடுவார்
காலம் முடிந்த பின்பு
மீண்டும் கையசைப்பார் புன்னகைப்பார்
இவ்வரிய நாடகத்தை
எம் இருப்பு வரை பார்ப்பதற்கு
என்ன பேரு பெற்றோம்
எம் இனிய சோதரரே

- நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு

## வாசக கவிஞர்களுக்கு...

பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அல்லது எஸ்.எம்.எஸ்.சிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com
தொலைபேசி - 0778021501

## மீன்கள்

விஞ்ஞானம் பொய்த்தது
நீரின்றி மீன்கள்
அவள் விழிகள்

## அழுகை

குழந்தை அழுதது
குடிக்காத பாம்புக்கு
புற்றில் பால்

## தாழ்வு

மாடுகூட 'அம்மா'
தமிழன் தான் 'மம்மி'
ஐந்திலும் தாழ்வு ஆறு

- மகேஷ், ஹட்டன்

## நீல வானமாக நம் காதல்

காதோரம் கதைபேசிய கள்வனே!
காலமெல்லாம் கதை பேசி
காதல் செய்த நாட்கள் - இன்னும்
என் மனதில் கலையவில்லை

காலம் நம்மை இரு கரையாக்கிய போதும்
நதி கரையை தொடாமல் பாய்வதுமில்லை
கரை நனையாமல் இருப்பதுமில்லை -
அதுபோல்
நம் காதல் நம்மில் நீக்குவதுமில்லை

இன்று நீ எங்கோ, நான் எங்கோ
ஆனாலும் நம் காதல் மட்டும்
அதே போல் மாறாமல் - வாழ்கின்றது இன்னும்

நாம் சேர்ந்திராத போதும் - நம் காதல்
எல்லை இல்லா நீல வானமாய்
பரந்திருக்கும் பாரினில்

- பாஹிரா




# மனைவியை சுட்டுக்கொன்ற பர்மியத் தூதுவர்

சக்தி

இலங்கை குற்றச்சம்பவ வரலாற்றில் வித்தியாசமானதும் அரிதானதும் மற்றும் மறக்க முடியாததுமான ஒரு சம்பவமாக அமைந்தது 1967 ஆம்ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற ஷேர்லி பூன்வாட் கொலை. இதன் பின்னர் இவ்வாறான ஒரு சம்பவம் இலங்கையில் நடைபெறவில்லை. உலக நாடுகளில் சமீப காலத்தில் நிகழ்ந்ததாக தகவலும் இல்லை.

ஒரு மேல் தட்டு காதல் கதையின் பின்விளைவான இச்சம்பவம் நடைபெற்றது. குற்றச்சம்பவங்கள் குறைவாகவே நடைபெறும், மனிதர்கள் தாமுண்டு, தம் வேலையுண்டு என்றிருந்த இலங்கையின் அற்புதமான அறுபதுகளில் பூன்வாட் கொலை செய்யப்பட்ட சம்பவம் பத்திரிகைகளில் வெளிவந்தபோது மக்களுக்கு அது அதிர்ச்சியை அளித்தது. ஆர்வமாக பத்திரிகைகளை வாங்கி வாசிக்கத்தொடங்கினார்கள். இன்று இந்த கொலைச்சம்பவம் தொடர்பான பழைய பத்திரிகை நறுக்குகளை புரட்டிப்பார்க்கும்பொது அன்றைய பத்திரிகையாளர்கள் இச்சம்பவத்தை விரிவாக ஆராயாமல் விட்டுவிட்டார்களோ என்ற ஆதங்கம் ஏற்படத்தான் செய்யும். ஒன்றுமில்லாத விஷயங்களுக்குகெல்லாம் ஆர்ப்பாட்டம் பண்ணும் இன்றைய ஊடகங்கள் இப்படி ஒரு விஷயத்தை எப்படியெல்லாம் டமாரம் அடித்திருக்கும் என்று எண்ணிப்பார்ப்பதே சுவையான அனுபவம் தான். அன்றைய ஊடகவியலாளர்கள் தகவல்களை தருவதோடு நிறுத்திக்கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

சாவோ பூன்வாட் ஒரு பர்மிய இராஜதந்திரி. பர்மிய வெளிவிகார அமைச்சில் பதவியில் இருந்த அவர் சீனாவுக்கான பர்மிய தூதரகத்தில் முதலாம் நிலைச்செயலாளராக பணியாற்றிய பின்னரேயே கொழும்புக்கு அனுப்பப்பட்டார். 1964ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி, கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்த எஸ்.எஸ்.வார்விக்ஷயர் என்ற பயணிகள் கப்பலில் அவரும் அவரது அழகிய மனைவி ஷேர்லி பூன்வார்ட்டும் அவரது செயலா-ளரும் வந்திருந்தனர்.

கொள்ளுப்பிட்டி விபர்ட்டி தியட்டருக்கு அண்மையில் கெப்ரி கிளப் அமைந்திருக்கிறது. கிறீன் பாத் வீதியை அண்மித்ததாக இந்த கெப்ரி கிளப்தான் பர்மிய தூதரின் இல்லமாக இருந்தது. அன்று பர்மிய தூதரகம் கோல்பேஸ் ஹோட்டலில் இயங்கி வந்தது.

1964 ஆம் ஆண்டு இலங்கை வந்த பர்மிய தூதர் பூன்வாட், 1967 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 15ம் திகதி காலை எட்டு மணியளவில் தன் வீட்டில் வைத்து தன்மனைவியை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றார். ஒரு வெளிநாட்டு தூதுவர் தன் மனைவியை அல்லது வேறு எவரையாவது இலங்கையில் வைத்து சுட்டுக்கொன்றது அதுவே முதல் தடவை. காலையில் இச்சம்பவம் நடைபெற்றாலும் உடனடியாக இச்சம்பவம் வெளியே தெரியவில்லை. காதும் காதும் வைத்த மாதிரி பகல் 12 மணியளவில் திருமதி.பூன்வாட் சடலத்தை அவர் எரித்துவிட்டார். திருமதி. பூன்வாட் கொலை செய்யப்பட்ட விவரம் இதன் பின்னரேயே வெளியே தெரியவந்தது.

பூன்வாட் பர்மாவின் கீர்த்திமிக்க ஷான் குடும்பத்தை சேர்ந்தவர். பிரபுக்குடும்பம். திருமதி.ஷேர்லி பூன்வாட், பர்மாவின் வடக்கு பிராந்தியத்தை சேர்ந்த அரச குடும்பத்தவர். அழகிய உடைகளை அணிவது, வசீகரமாக தன்னை வைத்துக்கொள்வது, நாகரீக உலக நடப்புகளில் ஆர்வம் காட்டுவது என்று நவநாகரீக நங்கையாக தன்னை வெளிப்படுத்திக்கொள்வதில் ஆர்வம் கொண்டவர் இவர். இவருக்கு 16 வயதாகும்போது பூன்வாட்டுக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டார்கள்.

சுதந்திரமாக வளர்ந்த இவர் நவநாகரிக உடைகளிலும், நாகரிக உலக நடப்புகளிலும் ஆர்வம் காட்டி வந்தார். லண்டன், பாரிஸ் எனப் பிரபல ஐரோப்பிய நகரங்களில் சுற்றித்திரிந்த ஷேர்லி பூன்வாட் நாகரீகக்கலை தொடர்பான பாடநெறியை பிரெஞ்சு சேர்போன் பள்ளியொன்றிலும், பாரிஸ் ஆடைத்தயாரிப்பு அகாடமி ஒன்றிலும் பயிற்சி பெற்றிருந்தார். பர்மாவில் இவர் பல நன்கொடை நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார். பெ.்.ஷன் ஷோ, இரவு விருந்துபசாரம் என்பனவற்றின் ஊடாக பணம் திரட்டி வலது குறைந்தோர் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு வழங்கும் கருணை உள்ளம் கொண்டவர் ஷேர்லி பூன்வாட்.


காதலன் ரெக்ஸ் டி சில்வா


இலங்கையில் வசித்த காலப்பகுதியிலும் பல நிதி திரட்டும் நிகழ்ச்சிகளை நடத்திக்கொடுத்திருக்கிறார். மரணமடைவதற்கு சல மாதங்களுக்கு முன்னர் கூட ஹவ்லக்ஸ்ஹேன சிறுவர் இல்லத்துக்காக ஒரு நாகரிக ஆடைக்கண்காட்சி நிகழ்வொன்றை நடத்தித்தந்திருக்கிறார்.

தூதுவர் சாவோ பூன்வாட்டுக்கும் இவருக்கும் இடையே வயது வித்தியாசம் மட்டுமன்றி வேறு விடயங்களிலும் முரண்பாடுகள் நிலவின. யாருடனும் சிரித்துப்பழகும் இயல்பு, நவநாகரிக விடயங்களில் காட்டும் அக்கறை, இரவு விருந்துகள், கேளிக்கைகள் காட்டும் ஆர்வம், உதவும் மனப்பான்மை ஆகிய ஷேர்லியின் பண்புகள் அவர் கணவருடைய குணங்களுடன் முரண்பட்டன.

சாவோ பூன்வாட்டின் முதல் மனைவியின் மகள் சுசான் புன்வாட் இலங்கைக்கான மலேசிய தூதுவரின் மகளை காதலித்து வந்தார். இது பூன்வாட்டுக்கு பிடிக்கவில்லை. சுசானுக்கு புத்திமதி கூறும்படி ஷேர்லியிடம் அவர் கேட்டுக்கொள்ள, சுசானிடம் இது பற்றி ஷேர்லி பூன்வாட் பேசியிருக்கிறார். அவரோ தன் காதலை கை விட தயாராக இல்லை என்று கூறியதோடு மலேசிய தூதுவரின் மகனான கிட் பகதூதை திருமணம் செய்து கொண்டார். இதுவும் பூன்வாட் தம்பதியினரிடையே தகராறை தோற்றுவித்தது.

பூன்வாட்டின் பதவிப்பணிகளுக்கு பின்னணியில் இவ்வாறான குடும்பச்சிக்கல்கள் இருந்தன. இந்நிலையில் ஷேர்லி பூன்வாட் ஆண்மைக் கவர்ச்சியும் வெளிப்படையாகப்பழகும் இயல்பும் கொண்ட ரெக்ஸ் டி சில்வா என்ற சிங்கள இளைஞனுடன் காதல் தொடர்பு கொண்டார்.

கொம்பனி வீதி நிப்போன் ஹோட்டல் அன்று பெயர்பெற்ற கொழும்பு ஹோட்டல்களில் ஒன்று. இங்கு இயங்கி வந்த இரவு விடுதி (நைட் கிளப்) யில் ரிதம் டியுக் என்ற பேன்ட் இசைக்குழுவை நடத்தி வந்த ரெக்ஸ் டி சில்வா, ஒரு பியானோ கலைஞர். பிரபலமான அந்த இரவு விடுதிக்கு ஷேர்லி பூன்வாட் அடிக்கடி வருவார். அப்போது ஏற்பட்ட காதல் தொடர்பு, திருமணம் செய்து கொள்ளலாம் என முடிவெடுக்கும் நிலை வரை நீண்டது. பூன்வாட் குடும்பப்பிரச்சினை முழுவதுமே ரெக்ஸுக்கு தெரியும்.


மனைவி, குழந்தையுடன் பூன்வாட்

பர்மியத்தூதருக்கு இவ்விவகாரம் அரசல் புரசலாக தெரியவந்தது. மூன்று குழந்தைகளின் தாயாரான நீ, இப்படி இலங்கை நபருடன் தொடர்பு வைத்திருப்பதும் அதை பிறர் அறியும்படி நடந்துகொள்வதும் நமது கௌரவத்துக்கு இழுக்காக அல்லவா அமையும்..? என்று அவர் கேட்க, அடிக்கடி தகராறு மூளத்தொடங்கியது. ஒரு தடவை ஷேர்லி பூன்வாட் ஒரு இலங்கை வர்த்தகருடன் இரவு விடுதியில் நடனமாடிக் கொண்டிருந்தபோது உள்ளே வந்த பர்மியத்தூதுவர் அவள் கையை பிடித்து தரதரவென வெளியே இழுத்துச்சென்றார். வாகனத்தரிப்பிடத்தில் மனைவியைத்தாக்கிய அவர் காருக்குள் அவளை திணித்து வீட்டுக்கு அழைத்துச்சென்றார். வீட்டிலும் நல்ல பூசை கிடைத்ததாம்.

ரெக்ஸ் டி சில்வாவுக்கும் ஷேர்லிக்கும் இடையே மூன்று வார கால நட்பு இருந்திருக்கிறது.

இந்த நிலையில் தான் 1967 அக்டோபர் 15 ஆம் திகதி காலை, எட்டு மணியளவில் மேரி ஜோசப் என்ற பாடசாலை ஆசிரியை அந்த வீட்டை தாண்டி நடந்து சென்று கொண்டிருக்கும்போது ஒரு பெண்ணின் கூச்சல் கேட்டிருக்கிறது. மாடிப்படி வழியாக ஒரு பெண் கூச்சலிட்டபடி இறங்கி வந்து வீட்டின் முன் வாசலை நோக்கி இரத்தம் வழிந்தோட ஓடி வருவதையும் பின்னால் ஓடி வந்த இருவர் அவரை இழுத்துக்கொண்டு உள்ளே செல்வதையும் கண்டிருக்கிறார்.

முதலில் ஒரு துப்பாக்கி வேட்டும், பின்னர் அடுத்தடுத்து துப்பாக்கி வேட்டுகளையும் தான் கேட்டதாகவும் ஒரு பெண்ணின் கூக்குரல் எழுந்து அடங்கியதாகவும் அந்த ஆசிரியை பின்னர் பொலிஸ் விசாரணையின்போது தெரிவித்திருந்தார்.

ஷேர்லி இறந்ததும் அடுத்த மூன்று மணித்தியாலங்களில் அவரது உடலுக்கு எரியூட்டி விட்டார் தூதுவர்.

இக்கொலை சம்பந்தமான தகவல்கள் வெளியானதும், கொள்ளுப்பிட்டி பொலிசார் விசாரணை நடத்தினர். வெளிநாட்டு தூதுவர் தொடர்பான விவகாரம் என்பதால் அவர் கைது செய்யப்படவில்லை. இலங்கை வெளிவிவகார அமைச்சு சம்பவத்தை பர்மிய அரசுக்கு அறிவிக்க, நான்கு பொலிஸ் விசாரணையாளர்கள் இலங்கை வந்து விசாரணை நடத்தி தூதுவரை கைது செய்து இரத்மலானை விமான நிலையத்தின் ஊடாக பர்மாவுக்கு அழைத்துச்சென்றனர்.

பத்திரிகையாளர்களின் கண்களை மறைப்பதற்காக அவருக்கு அராபிய உடை அணிவித்து அழைத்துச்சென்றனராம்.

பர்மாவில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் அவர் குற்றவாளியாக காணப்பட்டார். நான்கு ஆண்டு கடுழியச்சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. மேன் முறையீட்டு நீதிமன்றில் தண்டனை மூன்று ஆண்டுகளாக குறைக்கப்பட்டது.

பூன்வாட் நாட்டுக்காக சேவையாற்றியவர். தன் மனைவியின் தவறுகளை பல தடவை மன்னித்திருக்கின்றார். ஏற்கனவே விசாரணை காலத்தில் ஒரு வருடத்தை ஜெயிலில் கழித்திருக்கிறார். தொழிலும் பறிபோய்விட்டது. எனவே அவரை விடுதலை செய்கிறோம் எனத்தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டிருந்தார்.

அவர் 1970 ஆம் ஆண்டு மே மாதம் விடுதலை செய்யப்பட்டார்.

## கொலு வைக்கும்போது...



**ஒரு தட்டையான, அகன்ற பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி அதில் சின்ன பிளாஸ்டிக் வாத்து பொம்மைகளை மிதக்க விடுங்கள். கடையில் விற்கும் கலர் தெர்மாகோல் உருண்டைகளை வாங்கி, வாத்துகளுடன் கூடவே நீரில் போடுங்கள். நீரின் மேற்பரப்பில் மினுங்கும் தூளையும் தூவி விடுங்கள். விளக்கு வெளிச்சத்திலும், பேன் காற்றின் அசைவிலும் உங்கள் செயற்கை குளம் ஜொலிக்கும்.**

**இடப்பற்றாக்குறை உள்ளவர்கள் சஞ்சலப்பட வேண்டாம். ஓரளவுக்கு உயரமான பலகையின் மேல் ஜரிகை புடவையை விரித்து, அதன் மேல் இரண்டு மரப்பாச்சி, துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி, விநாயகர் பொம்மைகளை வைத்து, தரையில் ஒரு பித்தளை தாம்பாளத்தில் கோலம் வரைந்து அதன் மேல் சவ்வரிசி ஒட்டி விடுங்கள். இரண்டு பக்கத்திலும் முத்து போல் விளக்கேரிய விடுங்கள். சிம்பிளாக இருந்தாலும் தெய்வீகமாக காட்சி தரும் உங்கள் வீட்டுக் கொலு.**

**சோளப்பருப்புகளை எடுத்துவிட்ட பிறகு, சோளத் தட்டையில் பச்சைக்கலரை பூசி காயவைத்து கொலுவின் மலைப்பகுதியில் நட்டு வைத்தால் அசோகமரம் நிற்பது போல அழகாக காட்சியளிக்கும்.**

# பெண்ணின் காதல்



உன்ன பாக்க
கெடைக்கல..!!

முதல் நாள்
ஹாய்..!!

2வது நாள்
ஹவ் ஆர் யூ..?

3வது நாள்
நான் ஒன்னு
சொன்னா கோவிக்க
கூடாது..!

4வது நாள்
ஐ லவ் யூ..!

5வது நாள்
நீ இல்லாம ஒரு
நொடி கூட வாழ
முடியாது டா..!!


6வது நாள்
சொரி டா.. டு டேஸ்

7வது நாள்
ஐ ஆம் ரியலி
சொரி.. எனக்கு
மாப்பிள்ளை
பாத்துட்டாங்க..

8வது நாள்
யார் நீங்க..?

9வது நாள்
ஓ.ஐ.சீ...
யூ ஆர் மை பஸ்ட்
லவ்வர்..
அதனால உங்க
பேர என்
இரண்டாவது
குழந்தைக்கு
வெச்சிருக்கேன்..

கடைசி நாள்
மாமாவுக்கு
டாட்டா சொல்லு..



மச்சான் நான் ரொம்ப அப்செட்டா இருக்கேன்.

ஏன்டா வீட்ல எதும் பிரச்சினையா?

இல்லடா நேத்து சிலேட் வாங்க கடைக்குப் போயிருந்தேன் அங்க ஒரு செம ஃபிகர் சுமார் ஒன்றரை வயசிருக்கும் அவ அம்மா மடியில படுத்து வாய்ல விரல வச்சி சிரிச்சா பாரு ஐயோ....

அப்புறம் என்ன ஆச்சு?

நானும் பலூன்லாம் வச்சு செம சீன் போட்டேன் மச்சான் கண்டுக்கவே மாட்டேன்ட்டாடா. ரெண்டு நாளா நான் செரலாக் கூட சாப்பிடல தெரியுமா.

விடு மச்சான் நாளைக்கு அவளை தொட்டிலோட தூக்கிரலாம்.



ஆசிரியர் : என்ன நதிக்கு பக்கத்துல இருக்கிறயே.. இன்னும் நீச்சல் கற்றுக்கொள்ளவில்லையா?

மாணவர் : இது ஒரு ஆச்சரியம் இல்லையே? உங்கள எப்போதும் காற்று சுழற்றுது அதனால் நீங்கள் பறக்க கற்றுக்கொண்டீர்களா?

- ரஹீமா, ஏறாவூர் 03



நானும் என் கணவரும் வீட்டு வேலையைச்சமமா பங்கு போட்டுச்செய்வோம்..!

எப்படி..?

வீட்டுப்பாத்திரம் தேய்ச்சாக்கூட, ஆளுக்கு சமமா பிரிச்சுப்போம்..!




ஒரு பணக்கார திமிர் பிடிச்ச எஜமானிக்கும் வேலைக்காரிக்கும் சண்டை வந்து விட்டது.

வேலைக்காரி சரியாக வேலை செய்யவில்லை என்று சொல்லி எஜமானி சண்டை போட்டாள்.

சண்டை முத்தின சமயத்தில் அந்த வேலைக்காரி சொன்னாள்: போங்க அம்மா நான் உங்களை விட எவ்வளவோ உசத்தி.


எஜமானி : யார் சொன்னது. எங்க விட்டுக்காரரா?

வேலைக்காரி : இல்லை, ஆனா உங்க டிரைவர் தான் சொன்னான்.



திரைப்படத்தில் காதல் தோற்றால் இங்கு கண்ணீர் வருகிறது. பட், நிஜத்தில் காதல் வந்தால் கத்தியுடன் காதலியின் அண்ணன்.

- பா. சுபா சர்மிளா,
எட்டியாந்தோட்டை



திருமணமான ஒரு பெண்ணின் இறுதிச்சடங்கில் பல பேர் அழுது கொண்டு நின்றனர். கணவனுக்கு அருகில் நின்று இன்னொரு ஆணும் அழுது கொண்டு நின்றார்.

அக்கம் பக்கம் நின்றவர்கள் நீ ஏன் அழுகிறாய்?... என்று வினவினார்கள். அதற்கு அவன் சொன்னான் இது என் கள்ளக்காதலி என்று.

அப்போ அருகில் நின்ற கணவன் சொன்னார்!... ஏன் கவலைப்பட்டு அழுகிறாய்?... வெகு விரைவில் நான் இன்னொரு கல்யாணம் பண்ணிடுவேன்!......

## ஜன்னலுக்கு வெளியே...

சரியான விடை:

**ப்ரியாமணி**



1. கே.உஷா - வவுனியா
2. எஸ்.தர்ஷினி - இரத்தினபுரி
3. எஸ்.எச்.எம்.நஸார் - கெகுணுகொல
4. எப்.நியாஷா - நேகம
5. பிரபு - சரிக்கமுள்ள
6. எம்.ஐ.எம்.நௌஷாட் - கம்பளை
7. டீ.ஜனரட்ணம் - மட்டக்களப்பு
8. ஹசன் - மக்கொன
9. வி.சுதா - மாத்தளை
10. எம்.ரூபன் - டிக்கோயா
11. கே.எம்.எம்.ரிப்பாஸ் - தோப்பூர் 02
12. எஸ்.விபிலாஷ்னி - பதுளை
13. பானு - பண்டாரவளை
14. கே.கௌசல்யா - அரபலாக்கந்த
15. எஸ்.சியானிகா - மஸ்கெலியா
16. என்.கிருஸ்ணகுமார் - பஸ்சரை
17. எஸ்.விநோதினி - இங்கிரிய
18. டீ.தர்மினி - கிளிநொச்சி
19. பீ.மகேந்திரன் - ஒட்டுச்சுட்டான்
20. நஸீரா - கொழும்பு 15



## கண்டு பிடியுங்கள்

இப்படத்தில் பையன், திமிங்கிலம், கோழிக்குஞ்சு, இரண்டு பூனைகள், வாத்து, நாய்த்தலை, குழந்தைப்பால் போத்தல், நாய், மூன்று மீன்கள், நான்கு புத்தகங்கள், கேக்துண்டு, பன்றித்தலை, கோழி, இரண்டு வாழைப்பழங்கள், ஐஸ்கிரீம் கோன், ஆங்கில எஸ் எழுத்து, பூ, மூன்று மணிகள், தேனீர் ஜாடி, தாராவின் தலை, மூன்று பென்சில்கள், கௌபே-ாய் சப்பாத்து, செருப்பு, மூன்று காலுறைகள், குருவித்தலை, ஆங்கில எ.ஃப் எழுத்து, தொப்பி, அரைச்சந்திரன், மூன்று பறவைகள், ஆந்தைத்தலை, பெண்ணின் தலை, டி.ஷர்ட், மேசை விளக்கு மற்றும் முயல் தலை என்பன ஒளிந்துள்ளன.
கண்டு பிடிக்கிறீர்களா?

## வண்ணம் தீட்டுங்கள் - 9

சிறந்த வண்ணம் தீட்டியோரில் பெயர்கள் இடம்பெறும் ஐந்து தம்பி, தங்கைகள் இவர்கள்

1. **எஸ்.ஞானரட்ணம்** - கொழும்பு 06
2. **கே.அச்சுதன்** - மன்னார்
3. **எல்.லோஜினி** - மூதூர்
4. **சி.ப்ரியா** - கொட்டக்கலை
5. **எச்.எப்.பர்வீன்** - தர்காநகர்

## குறுக்கெழுத்து போட்டி - 09

விடைகள்

**இடமிருந்து வலம்**

பாஞ்சாலி சபதம், ராணி, விகிதம், பிரம்பு, பழுத்த, புதிர், சரண்யா, யாகம், சவுரி, சந்தனம், பசங்க, சங்கதி, கதிரை, புரவி, குறும்பு, புகழேந்தி

**மேலிருந்து கீழ்**

பாரபட்சம், சாவித்திரி, லிகிதர், சதம், பம்பரம், ராம்ஜி, புஜம், திா-சங்கு, சந்ததி, யாம், களம், வில்லி, குலம், புகழ், தின

சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

**நளாயினி ஷர்மா** - கொழும்பு
**எம்.எல்.எம்.ரஷீட்** - மாத்தளை
**எல்.சந்திரசேகரன்** - நுவரெலியா



## குருவும் சிஷ்யனும்

கடந்த இதழில் வெளியான படத்திலுள்ள ஆறு தவறுகள் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

ஆறு அதிர்ஷ்டசாலிகள்

1. வி.ஆனந்தன் - வட்டக்கச்சி
2. கே.விதுஷா - மட்டக்களப்பு
3. ஆர்.புவிதரன் - சுன்னாகம்
4. ஜெ.கௌசல்யா - பதுளை
5. எச்.எப்.எம்.பாருக் - குருநாகல்

## சொல் விளையாட்டு - 9

சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**


மாம்பழம், கல்வி, சுவர், சந்தை, மாதம்

**மேலிருந்து கீழ்**

மாசிக மாசம், பசு, கதிர்காமம், விந்தை, அரிமா

சரியான விடை அனுப்பியோரில் பெயர்கள் இடம்பெறும் ஆறு அதிர்ஷ்டசாலிகள்

1. எஸ்.யுகேந்திரன் - ஹட்டன்
2. எஸ்.பரிமளா - மட்டக்களப்பு
3. பாத்திமா ரிஷானா - ஹக்காப்பொல
4. எம்.எஸ்.எம்.ரிஸ்வி - பொலன்னறுவை
5. எஸ்.ஜானகி - கொழும்பு
6. என்.ஸ்ரீராம் - வத்தளை



# Portable Apps என்றால் என்ன?

அடிப்படையில் போட்டபல் எப்லிகேசன் என்பது ஒரு பயன்பாட்டு மென்பொருளே (application software). இதனை இயங்கு தளத்தில் (operating system) அதிகம் சாரா வண்ணம் ரிமுவபல் மீடியா (removable media) எனும் அவ்வப்போது கணினியில் பொருத்தி பயன்படுத்துவதும் கையிலெடுத்துச் செல்லத்தக்கதுமான பென் ட்ரைவ், சிடி, டீவிடி போன்றவற்றிலிருந்து இயங்கக் கூடியதாக உருவாக்கப்பட்டிருப்பதையே போட்டபல் எப்ஸ் (Portable Apps ) எனப்படுகிறது.

ஒரு போட்டபல் எப்லிகேசன் flash drive, portable hard drive, iPod> CD, DVD போன்ற எந்த ஊடகத்திலிருந்தும் இயங்கக் கூடியதாயிருக்கும்.

கணினியில் ஹாட் ட்ரைவ் பாட்டிசன்களுக்குரிய எழுத்தை (Drive Letter) மாற்றினாலும் கூட போட்டபல் எப்ஸ் இயங்கும்.. (ஆனால் வழமையான மென்பொருள்கள் இவ்வாறு இயங்குவதில்லை என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம்.)

அவை உங்கள் கணினியில் பைல் போல்டர்களை உருவாக்குவதில்லை.

ஒரு போட்டபில் அப் இயங்குவது விண்டோஸ் இயங்கு தளம் எனின் விண்டோஸினால் தானாக உருவாக்கப்படுபவை தவிர ரெஜிஸ்ட்ரியில் எந்த வித மாற்றத்தையும் செய்து விடாது.

போட்டபல் எப்ஸ் இயங்குவதற்கு மேலதிகமாக எந்தவொரு மென்பொருளும் அவசியமில்ல.

கணினியில் நிறுவியுள்ள வேறு மென்பொருளக-ளுடன் இவை முரண்படுவதில்லை.

இவ்வாறு ஒரு போட்டபில் அப்லிகேசன் பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டிருக்கும்.

இன்னும் சற்று விரிவாக விளக்குவதற்கு Firefox மென்பொருளின் வழமையான பதிப்பையும் அதன் போட்டபல் பதிப்பையும் எடுத்து நோக்குவோம்.

வழமையான குசைநகழஓ மென்பொருளை நிறுவும் போது கணினியில் பல்வேறு மாற்றங்கள நிகழ்வதுண்டு. இயங்கு தளத்தில் பைல் அமைப்பில் (file structure) மாற்றம், விண்டோஸ் இயங்கு தளம் எனின் ரெஜிஸ்ட்ரியில் மாற்றம், கணினியில் ஏற்கனவெ உள்ள HTML பைல்கள், மற்றும் இணைய தள முகவரிகள அனைத்தும் பயபொக்ஸ் மென்பொருளுடனேயே திறந்து கொள்ளும் விதமாக பிரதான இணைய உலாவி யாகுதல் என பல மாற்றங்கள் நிகழும். எனினும் போட்டபல் பதிப்பு மேலே குறிப்பிட்டது போன்று எந்த வித மாற்றத்தையும் உண்டாக்குவதில்லை. கணினியில் எவ்வித மாற்றமும் செய்ய முடியா வண்ணமே அவை உருவாக்கப்பட்டுகின்றன. இது போட்டபில் எப்லிகேசன்களின் பிரதான சிறப்பியல்பாகும்.

சரி, இந்த போட்டபல் எப்ஸ் பயன்படுத்துவது எந்த விதத்தில் உங்களுக்குப் பயனளிக்கிறது? இந்த போட்டபல் எப்ஸ்களை உங்கள் சாவிக் கொத்தில் மாட்டியுள்ள பென் ட்ரைவிலோ, கையடக்கத் தொலைபேசியிலுள மெமரி சிப்பிலோ அல்லது ட்ரொப் பொக்ஸ் போன்ற இணைய பைல் சேர்வர்களிலோ ஏற்றிவிட்டால் போதும். நீங்கள் எங்கு சென்றாலும் உங்கள் விருப்புக்குரிய எப்லிகேசனை தங்கு தடையின்றிப் பயன்படுத்தலாம்.


உதாரணமாக நீங்கள் பயபொக்ஸ் மென்பொருளை குறிப்பிட்ட சில நீட்சிகளோடு (extensions) பயன்படுத்துகிறீர்களாயிருந்தால், அவற்றையும் கூடவே உங்களோடு எடுத்துச் செல்ல முடிவதோடு வேலைத்தளத்திலோ நண்பரின் கணியிலோ தேவையான எப்லிகேசன்களைப் பயன்படுத்தவும் முடியும்.


மேலும் நீங்கள் ஒரு மென் பொருளை முழுமையாகக் கணினியில் நிறுவிப் பயன் படுத்த விரும்பினால் அதனை கணினியில் நிறுவாமலேயே முன் கூட்டியே பரீட்சித்துப் பார்க்கக் கூடிய வசதியும் போட்டபல் எப்ஸ் மூலம் கிடைக்கிறது. இந்த போட்டபல் எப்ஸ்களை கணினியில் நிறுவ வேண்டிய அவசியம் இல்லை என்பதால் தற்போது இவை கணினிப் பயனரிடையே பிரபல்யமடைந்து வருகின்றன.

போட்டபல் எப்ஸ் மென்பொருள்கள் பல்வேறு இணைய தளங்களில் கிடைக்கின்றன. எனினும் portableApps.com என்பது ஒரு நம்பகமான இணைய தளமாக இருப்பதோடு ஏராளமான பயனுள்ள இலவச போட்டபல் அப்லிகேசன்களையும் கொண்டுள்ளது.

## இந்த மாத டவுன்லோட்

புதிதாக ஒரு கணினியை வாங்கும்போது கூடவே சில எப்லிகேசன் மென்பொருள்களும் கணினி விளையாட்டுக்களும் நாங்கள் கேட்காமலேயே நிறுவப்படிருக்கும். அவற்றுள் எங்களுக்குப் பிடித்த அப்லிகேசன்களும் இருக்கும். பிடிக்காத மென்பொருள்களும் நிறுவப்பட்டிருக்கும். இந்த அவசியமற்ற மென்பொருள்கள் ஹாட் டிஸ்கிலும் நினைவகத்திலும் அதிக இடத்தைப் பிடித்துக் கொள்வதோடு கணினியின் இயக்கத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இவற்றை கணினியிலிருந்து அகற்றி விடுவதே நல்லது.





இது போன்ற உங்களுக்கு அவசியமற்ற மென்பொருள்களை அகற்றுவதற்கு விண்டோஸ் இயங்கு தளத்தில் Add/Remove Programs எனும் வசதியுள்ளது. எனினும் இதன் மூலம் ஒவ்வொரு ப்ரோக்ரமாக் அகறற வேண்டும். அவ்வாறு அகற்றுவதற்கு அதிக நேரம் விரயமாவதோடு அதற்கு பொருமையும் அவசியம். எனவே இது பொன்ற மென்பொருள்களைக் கணினியிலிருந்து இலகுவாகவும் ஒரே தடவையிலும் அகற்றுவதற்கு PC Decrapifier எனும் மென்பொருள் கருவி உங்களுக்கு உதவுகிறது. இந்த PC Decrapifier, எனும் மென்பொருள் கருவியை நீங்கள் www.pcdecrapifier எனும் இணைய தளத்திலிருந்து இலவசமாக டவுன்லோட் செய்து கொள்ளலாம்.

வானவில் Top Tips

## விண்டோஸ் டெஸ்க் டொப்பில் முகப்புப் படமாக வீடியோ காட்சி




விண்டோஸ் டெஸ்க் டொப்பில் முகப்புப் படமாக (wallpaper) இதுவரை காலமும் வித விதமன நிழற் படங்களை இட்டே மகிழ்ந்திருப்பீர்கள். எனினும் முகப்புப் பட மாக வீடியோ காட்சியொன்றை வரவழைக் கலாம் என்பதை நீங்கள் அறிவீர்களா?

அதற்கு உங்கள் கனினியில் ஓபன் சோர்ஸ் மீடியா ப்லேயர் மென்பொருளான VLC player நிறுவியிருத்தல் அவசியம். அதனை நீங்கள் videolan.org எனும் இணைய தளத்திலிருந்து டவுன்லோட் செய்து நிறுவிக் கொள்ளலாம். இந்த VLC ப்லேயர் பற்றி ஏற்கனவே வானவில் டொட் கொம் பகுதியில் சொல்லியிருக்குறேன்.

முதலில் VLC player ஐ இயக்குங்கள். அடுத்து Tools மெனுவில் Preference தெரிவு செய்யுங்கள். தோன்றும் விண்டோவில் video பட்டனை க்ளிக் செய்யுங்கள். அங்கு Output எனுமிடத்தில் ட்ரொப்டவுன் பட்டனில் க்ளிக் செய்து DirectX video output என்பதைத் தெரிவு செய்து Save பட்டனில் க்ளிக் செய்யுங்கள்.

அடுத்து VLC player ஊடாக ஒரு வீடியோ பைலைத் திறந்து கொள்ளுங்கள். வீடியோ இயங்கும் பொது அதன் மீது ரைட் க்ளிக் செய்து DirectX Wallpaper என்பதைத் தெரிவு செய்யுங்கள். இபோது டெஸ்க்டொப்பைப் பாருங்கள். டெஸ்க்டொப் ஐக்கன்களுக்கு பின்னே வீடியோ காட்சி தெரிவதைப் பார்த்து வியந்து போவீர்கள்.

இவ்வாறு வீடியோ காட்சி ஒன்றை டெஸ்க்டொப் வோல் பேப்பராக மாற்றுவது ரசிக்கக் கூடியதாயிருந்தாலும் அது கணினியின் இயக்கத்தில் பாதிப்பை உண்டாக்கலாம். எனவே இந்த விளையாட்டை அவ்வப்போது உங்கள் நண்பர்களை அசத்துவதற்கு மாத்திரம் பயன் படுத்துங்கள்.

## எம்.எஸ்.வர்டில் இலகுவாக டெக்ஸ்டைப் நுழைப்பதற்கு


எம்.எஸ்.வர்டில் இலகுவாக டெக்ஸ்டைப் நுழைப்பதற்கு ஒரு வசதியுள்ளது. இதன் மூலம் டெக்ஸ்டை டைப் செய்யாமலேயே பக்கம் முழுவதும் நிரப்பிக் கொள்ளலாம். அதற்குப் பின்வரும் வழி முறையைக் கையாளுங்கள்.

எம்.எஸ்.வர்டைத் திறந்து புதிய ஆவணமொன்றில் =rand() என டைப் செய்து எண்டர் விசையைத் தட்டுங்கள். அடுத்த வினாடியே ஒரு பந்தி டெக்ஸ்ட் தோன்றக் காணலாம்.

இன்னும் சற்று மாற்றமாக =rand(5) என டைப் செய்யுங்கள். அதே போன்ற டெக்ஸ்ட் ஐந்து பந்திகளில் தோன்றச் செய்யலாம். =rand(10>5) என டைப் செய்ய ஐந்து வரிகள் கொண்ட பத்து பந்திகள் தோன்றக் காணலாம்.

# ஒடுக்கப்பட்ட மக்களுக்காக ஓங்கிக் குரல் கொடுத்த தெணியான்

நானும் என் 9
யாழ். பயணங்களும்




தெளிவத்தை ஜோசப்

டொக்டர் எம்.கே.முருகானந்தனின் இலக்கிய வாகனம் நெல்லியடிச் சந்தியில் நின்றது. முன் ஆசனத்தில் தெணியான்.. ஓட்டுனராசனத்தில் முருகானந்தன். பின்னால் .. பேரன் சந்திரசேகரன்,

அந்தனிஜீவா நான் பிறகென்ன இலக்கிய வாகனம் தானே...

அந்தனி ஜீவாவின் மடியில் தெணியானின் மூத்த மகன் ஆதவன். முன்னே தெணியானின் மடியில் அவருடைய இளைய மகன் துஷ்யந்தன்.




அப்போது அந்தனி ஜீவாவின் மடியில் இருந்த ஆதவனுக்கு ஒரு எட்டு அல்லது ஒன்பது வயது இருக்கும். துஷ்யந்தனுக்கு ஒரு ஐந்து வயதிருக்கும்.

இப்போது நினைக்கையில் சிரிப்பாகவும் இருக்கிறது.. மகிழ்ச்சியாகவும் இருக்கிறது. பிள்ளைகள் பெரிய மனிதர்கள் ஆகி இருப்பார்கள். மனைவி மக்களுடன் அப்பாவை தாத்தாவாக்கி விட்டிருப்பார்கள். 2002ஆம் ஆண்டு வெளிவந்த தெணியானின் அவர்களின் 'கானலின் மான்' நாவலுக்கு அரச சாகித்திய விருது கிடைத்திருந்தது.

பரிசு வாங்க தெணியான் தனியாக கொழும்பு வர வீட்டார்கள் விரும்பவில்லை. கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்ட பத்துக்கு பரிசு வாங்குவதற்காக கூட்டி வந்து கூட்டிச் சென்ற துணை துஷ்யந்தன் தான்.

நெல்லியடிச் சந்தியில் இறங்கிய தெணியான் ஆதவனை ஒரு கையிலும் துஷ்யந்தனை தோளிலும் போட்டபடி எங்களிடம் விடைபெற்றார். தெணியானுக்கு உமா, ஜானகி என்ற இரண்டு மகள்களும் ஆதவன், துஷ்யந்தன் என்ற இரண்டு மகன்களுமாக நான்கு பிள்ளைகள்.

என்னுடைய நான்கு பிள்ளைகளும் நன்றாக கல்வி பெற்று நல்ல வாழ்க்கை அமைத்துக்கொண்டு நன்றாக இருக்கிறார்கள் என்று மனமகிழ்வுடன் பெருமை கொள்ளும் அப்பா அவர்.

சாகித்திய விருது பெற கொழும்புக்கு துணையாக வந்த இளைய மகன் துஷ்யந்தன் அப்போது(1963) யாழ் பல்கலைக்கழக மாணவன் என்பது குறித்து வைக்கத் தவறாத பெற்ற மனம் அவருடையது.


கல்விப் பாரம்பரியமும் இலக்கிய வளமும் கொண்டது வடமராட்சி. வடமராட்சியில் நெல்லியடி ஒரு சிறிய பட்டினம். நெல்லியடிச் சந்தியில் இறங்கிக் கொண்ட தெணியான் கால்நடையாகவே வீடேகி விடுவார் என்று நினைத்துக் கொண்டேன்.

ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்களை ஓங்கி ஒலிக்கச் செய்தவர். அவர்களின் பிரச்சினை-களையும் அவர்களுக்கு இழைக்கப்படும் தீங்குகள் கொடுமைகள் பற்றியும் நிறையவும் நிறைவாகவும் தொடர்ச்சியாகவும் இன்றுவரையும் எழுதிக்கொண்டிருப்பவரே தெணியான்.


அவருடைய முதல் நாவல் 'விடியலை நோக்கி' வீரகேசரி பிரசுரமாக 1973இல் வெளிவந்தது.

முருகபூபதி நீர்கொழும்பு இலக்கிய வட்டத்தினூடாக விடியலை நோக்கி நாவலுக்கான ஒரு வெளியீட்டு விழாவை ஒழுங்கு செய்திருந்தார். 1974ஆம் ஆண்டு மு. கனகராஜன் மற்றும் டொமினிக் ஜீவா ஆகியோருடன் என்னையும் பேசக் கூப்பிட்டிருந்தார் முருகபூபதி.

எழுபதுகளில் நான் அவ்வளவாக மேடையேறி பேசியது கிடையாது. இரண்டொரு இலக்கிய கூட்டங்களில் உரையாற்றி இருக்கிறேன். நினை வில் இருப்பது அமரர் சு.வே.யின் 'மண்வாசனை' வெளியீட்டு விழா பம்பலபிட்டி சரஸ்வதி மண்டபமாக இருக்கலாம். விழாவை ஒழுங்கு செய்திருந்த எஸ். பொ. விடாப்பிடியாக பேசவைத்தார். சாந்திகுமாரின் தீர்த்தக்கரை முதல் இதழ் அறிமுக விழா என்று ஒன்றிரண்டு.



சிவலிங்கராஜா



தெணியான்

முருக பூபதியிடம் முதலில் மறுத்தாலும் அவரும் விடாப்பிடியாகத் தான் பேச வைத்தார். இவர்களுக்கு நன்றி கூற நான் கடமைப்பட்டிருக் கின்றேன்.

நான் எழுதத் தெரிந்தவன் பேசத் தெரியாதவன். பூபதி அவர்கள் தான் இந்த பொல்லாப்புக்குள் மாட்டிவிட்டார் என்னும் பீடி-கையுடன் நான் தொடங்கினேன்.

தெணியானின் நாவல் பற்றி அவருடைய எழுத்தின் ஆழம் பற்றி. பிறகு ஈழத்தின் மார்க்சீய விமர்சனம் பற்றி வாசகர்கள் பற்றி கூட பேசி இருக்கின்றேன். எனக்கே தெரிய வில்லை. எனக்கடுத்து பேசவந்த ஜீவா எனக்கு பேச வராது என்றும் தெளிவத்தை ஜோசப் இவ்வளவு நீண்ட நேரம் பேசி இருக்கின்றார் என்றே தொடங்கினார்.

தெணியானை முதல் முதலாக சந்திக்கும் வாய்ப்பு ஒரு முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நீர் கொழும்பு மண்ணில் கிட்டியது.

அமரர் மு.கனகராஜன் அப்போது தேசாபிமானியின் இலக்கியப் பகுதியை செய்து கொண்டிருந்தார். 'விடிவை நோக்கி' வெளியீட்டு விழாவில் விமர்சகர்களை கேள்விக் குள்ளாக்குகின்றார் தெளிவத்தை' என்று தடித்த எழுத்துக்களில் தலைப்பிட்டிருந்தார்.

விமர்சகர்கள் படைப்பாளியை எந்தக் கூண்டிலும் ஏற்றலாம். எந்தக்கேள்வியையும் கேட்கலாம்.. ஆனால் ஒரு படைப்பாளி விமர்சகரை கேள்வி கேட்கலாமா..! வந்தது வினை..! அதனால்தான் என்னை பொல்லாப்புக்குள் மாட்டி விட்டவர் முருக பூபதி என்று கூறினேனோ தெரியவில்லை.

தெணியான் ஈழத்து இலக்கிய உலகுக்கு மட்டு மல்ல எனக்கும் மறக்க முடியாத, என்றும் மனதி லிருக்கும் மனிதர் தான்.

விடிவை நோக்கி நாவலுக்குப் பிறகு கழுகுகள், பொற்சிறையில் வாடும் புனிதர்கள், மரக்கொக்கு, காத்திருப்பு, கானலில் மான், சிதைவுகள், பனையில் நிழல், பரம்பரை அகதிகள், தவறிப் போனவன் கதை என்று நிறையவே நாவல்கள் படைத்துள்ளார் தெணியான். சிறு-கதைத் தொகுதிகளும் நான்கு போல் வெளிவந்திருக்கின்றன.

எழுபது வயதை எட்டிக் கொண்டிருக்கும் தெணியானின் ஆரம்பக்கல்வி யா-தேவரையாளிச் சைவ வித்தியாசாலையில் தொடங்குகிறது. இதே வித்தியாசாலையில் படித்து அது தேவரையாளி இந்துக்கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டதன் பின், அதிலேயே ஆசிரியராகி, பிறகு உப அதிபராகி 2002 இல் ஓய்வு பெற்றவர் இவர்.

இந்தத் தேவரையாளி இந்துக் கல்லூரியின் தோற்றத்துக்கு காரணமாக இருந்த சற்றே தொலைவில் உள்ள வதிரியின் வதிரி வடக்கு மெதடிஸ்ட் மிஷன் பாடசாலையில் சைவ சமய பாடங்கள் கற்பிப்பதில் எழுந்த சிக்கல் என்று தன்னுடைய இலக்கிய அனுபவம் பகிர்வில் குறிக்கின்றார் தெணியான். (மல்லிகை அக்டோபர் 2005)

இந்தக்கல்விக்கூடங்கள் பற்றிய வரலாறுகளை தன்னுடைய 'வடமராட்சியின் கல்வி பாரம்பரியமும் இலக்கிய வளமும்' என்னும் ஆய்வு நூலில் பதிந்து வைக்கின்றார் பேராசிரியர் சிவலிங்கராஜா.

தெணியானின் பிரசுரமாகாத முதற்கதை என்று அவரே குறிப்பிடுவது, வடை சுட்டு விற்கும் ஒரு கிழவி பற்றியது.

அந்தக்கிழவி சுட்டு விற்றதைப் போன்று அளவில் பெரியதும், தட்டையானதும் சுவை மிகுந்ததுமான வடைகளை நான் இது வரை வேறு எங்கும் பார்த்ததில்லை என்கிறார் தெணியான். வடமராட்சியின் தலை பட்டினமாக ஒரு காலத்தில் இருந்த பருத்தித்துறை வடையும் அதாகத்தான் இருக்க வேண்டும்.

டொக்டர் முருகானந்தனின் இலக்கிய வாகனம் பருத்தித்துறை நோக்கி கிளம்புகிறது. **(தொடரும்)**

# கண்ணதாசன் பாடல்களில் நாட்டார் அமுதம்

ஒரு நாட்டுப்புறத் தாலாட்டில் பூ என்று குழந்தையின் முகத்தை வருணனை செய்கின்றாள் தாய். உடல் உறுப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பூவாக இருப்பதாகக் கூறுகின்றாள்.

கண்ணே.. கமலப்பூ
கண்ணிரண்டும் தாமரைப்பூ..
கண் மணியே... ஏலப்பூ
காதிரண்டும் பிச்சிப்பூ
மேனி மகிழம் பூ
மேற் புருவம் செண்பகப்பூ

என்று தன் குழந்தையை பல்வேறு பூக்களாக வருணித்து தாலாட்டுகின்றாள். இப்பாடலினை அடியொற்றி,

சின்னச்சின்ன கண்ணனுக்கு
என்ன தான் புன்னகையோ
கண்ணிரண்டு தாமரையோ
கன்னம் மின்னும் எந்தன் கண்ணா

என்னும் பாடலை கவிஞர் பாடியுள்ளார்.

தாலாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் குழந்தையிடம் கூறுவதாகவே அமைந்திருப்பது வழமை. வறுமையின் கொ-டுமையினையும், அதனால் ஏற்படும் மன அழுத்தத்தினையும் தாலாட்டுப்பாடல்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

ஏழைக்குடிசையிலே..
ஏன் பிறந்தாய் செல்வமுத்தே எத்தனையோ
சீமாட்டி
ஏங்கித் தவங்கிடக்க
என் வயிறு தேடி
ஏன் பிறந்தாய் செல்வமுத்தே..

என்ற நாட்டுப்புற பாடலை கண்ணதாசன் தனது கவிதையில்,

ஏன் பிறந்தாய் மகனே - ஏன் பிறந்தாயோ..
இல்லையொரு பிள்ளை என்று
ஏங்குவோர் பலரிருக்க
இங்கு வந்து ஏன் பிறந்தாய் செல்வமகனே
நான் பிறந்த காரணத்தை நானே
அறியுமுன்னே நீயும் வந்து ஏன் பிறந்தாய்
செல்வமகனே..


என்று பயன்படுத்தி இருக்கிறார்.

வட்ட வட்ட பாறையிலே
வரகரிசி தீட்டையிலே
ஆர் கொடுத்த சாயச்சீலை
ஆல வட்டம் போடுதடி

என்ற தெம்மாங்கு பாட்டினை மனதில் நிலை நிறுத்திய கண்ணதாசன் தனது பாடலை,

வட்ட வட்ட பாறையிலே
வந்து நிற்கும் வேளையிலே
யார் கொடுத்த சேலையடி
ஆலவட்டம் போடுதடி

என்று அமைத்திருந்தார்.



காதலரின் மேன்மையை வியந்து வருணித்து காதலி பாடும் நாட்டுப்புறப்பாடல் ஒன்றில்,

ஆல மரத்துக்கிளி
ஆசாரம் பேசுங்கிளி
நான் வளர்த்த பச்சைக்கிளி
நாளை வரும் இந்த வழி

என்பதாக வரிகள் அமைந்துள்ளன.

இப்பாடலின் தாக்கம் கண்ணதாசன் மனதில் நிலைப்பெற்று இவ்வாறு வெளிப்பட்டிருக்கிறது.

பாலூட்டி வளர்த்த கிளி
பழம் கொடுத்து பார்த்த
கிளி
நான் வளர்த்த
பச்சைக்கிளி
நாளை வரும்
கச்சேரிக்கு

என்று திரைக்கு தகுந்தாற்போல இயற்றியுள்ளார் கவிஞர்..

- சுந்தரம்

சுகன்யா அந்த அறையை விட்டு சென்ற பின்னரும் அவள் கொண்டு வந்திருந்த வாசனை சுந்தரத்தின் நாசியை கௌவிக் கொண்டிருந்தது. அவளது பேச்சு, பேசும் தோரணை,கதவை திறந்து உள்ளே வந்து குட்மோர்னிங் சொன்னபடி அமர்ந்த நளினம், யோசிக்கும் போது பக்கவாட்டில் தலை சாய்ந்து கண்களை வெட்டி மேலே பார்த்து பதில் சொன்ன ஸ்டைல்... அவனுக்கு அவளைப் பிடித்திருந்தது.

சுகன்யா ஏழைக் குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவள். களுத்துறையில் வீடு, திருமணமானது வத்தளையில். இரண்டு குழந்தைகள். கணவனுக்கு போதுமான வருமானம் இல்லை. வசதி குறைவான சூழலில் கைக்கும் வாய்க்குமாக ஒரு போராட்ட வாழ்க்கை. சுகன்யாவுக்கு இந்த அலுவலக செயலாளர் பதவி கிடைக்குமானால் அது பெரிய பாய்ச்சலாக அமையும். சொகுசான வேலை; கை நிறைய சம்பளம்... அவள் வாழ்க்கை திருப்தியாக அமையும்... சுந்தரம் யோசித்தான். அவனுக்கு பாவமாக, அனுதாபமாக இருந்தது. தகுதியில் சில குறை-பாடுகள் இருந்தாலும் இந்தப் பதவிக்கு அவளையே அமர்த்தி விடலாம் எனத் தீர்மானித்தான்.

மாதங்கள் உருண்டன. அந்த நிறுவனத்தின் செல்வாக்கான உத்தியோகத்தர்களில் சுகன்யாவும் அடக்கம். சில உத்தியோகத்தர்கள் எம்.டி.யிடம் காரியமாக வேண்டுமானால் சுகன்யாவைத்தான் பிடிப்பார்கள். நீங்கள் சொன்னால் காரியம் ஆகும் என்பார்கள். அது உண்மையும் கூட.

சுகன்யாவுக்கு தன் மேலதிகாரியான சுந்தரத்தின் மீது அளவற்ற மரியாதை,கௌரவம். எள் என்றால் எண்ணெய்யாக இருப்பாள். அவனுடைய தேவைகளை குறிப்பறிந்து செய்து முடிப்பாள்.

சாதரணமாக ஓடிக்கொண்டிருந்த வாழ்க்கையை புரட்டிப் போட்ட மாதிரி திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தவன் என்று நினைத்தாள். சுந்தரத்தை பூஜிக்காத குறைதான். தன் எதிரே தன் மேலதிகாரியை எவரும் குறை கூற அனுமதிக்க மாட்டாள்.

எனினும் சுகன்யாவுக்கும் சுந்தரத்துக்கும் இடையே காணப்படும் நெருக்கத்தை அலுவலகத்தில் எவரும் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. தனக்கு உதவி செய்தவரை ஆராதிக்கிறாள் என்ற சமாதானமடைந்தார்கள். இதேசமயம், சுகன்யாவும் சுந்தரத்தின் குடும்பத்துடன் நெருக்கத்தை வளர்த்துக் கொண்டாள். தன் கணவர் மற்றும் குழந்தைகளுடன் சுந்தரத்தின் வீட்டுக்கு சென்று வர ஆரம்பித்தாள்.

சுந்தரத்தின் மனைவி துர்காவும் இந்த உறவை தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கவில்லை. தன் கணவனை மிகவும் மதிக்கும் ஊழியர்களில் ஒருவராகவே கருதி தோழியாகப் பழகினால் துர்கா.

காலம் நகர்ந்தது. ஒரு நாள் விடியற்காலையிலேயே சுகன்யாவின் கணவன் சுந்தரத்தை சந்தித்தான். "ஏன் என் வாழ்க்கையை பாழாக்குறீர்கள்? நான் உங்களுக்கு என்ன அநியாயம் செய்தேன்? " என்று அவன் வார்த்தைகளை எடுத்த எடுப்பிலேயே கொட்ட, அதிர்ந்து போனான் சுந்தரம்.

என்ன விஷயம்? அமைதியாகச் சொல்லுங்கள்! "

உங்ளை காந்தர்வ திருமணம் செய்து கொண்டதாகச் சொல்லி தாலி போட்டுக் கொண்டு இருக்கிறாள். நீங்கள் இல்லாமல் வாழ முடியாதாம்! என்னிடமே இதைச் சொல்றாள். நான் அவளைப் போட்டு உதைத்தேன். கோவித்துக் கொண்டு லேடீஸ் ஹொஸ்டலுக்குப் போய் விட்டாள். குழந்தைகளை அம்மா வீட்டில் விட்டிருக்கிறேன்... இப்போ நான் என்ன செய்வேன்?" அவன் அதற்றினான். கண்களில் ஆத்திரம் அலை மோதியது.

அன்றைக்கே சுந்தரம் அவளை காலி கிளை அலுவலகத்துக்கு இடம் மாற்றினான். இருந்தாலும் அவள் தொலைபேசியிலும் மின்னஞ்சலிலும் வந்து அவனிடம் காதல் பிச்சை கேட்டு அரற்றினாள். சுந்தரந்துக்கு தலை சுற்றியது.

அன்றைக்கு மாலையே அவன் தன் காரை எடுத்துக் கொண்டு தனக்குத் தெரிந்த உளநல மருத்துவரைச் சந்திக்கச் சென்றான்.

## மன நல மருத்துவக்கதைகள்



# மேலதிகாரியை காதலித்த குடும்பப் பெண்

நடுத்தர வயதான அந்த மனநல மருத்துவர்,அவன் சொன்ன முழுக்கதையையும் கவனமாகக் கேட்டு குறிப்பெழுதிக் கொண்டார். இடையிடையே சில கேள்விகளை கேட்டார்.

நாளைக்கு அவளை அழைத்துக் கொண்டு வர முடியுமா? என்ற மருத்துவரின் கேள்விக்கு தலையாட்டிய சுந்தரம், மறுநாள் சுகன்யாவுடன் வந்து நின்றான். தலையில் ஒரு தொப்பி, ஜீன்ஸ், டி ஷேர்ட் என்று வந்திறங்கிய சுகன்யாவிடம் இளமை செழிப்பு கொட்டிக் கிடந்தது.

அவளிடம் மருத்துவர் பேசினார். உளவள அறிவுரைகள் கூறினார். ஆனால் சுகன்யாவோ எதையும் பொருட்படுத்தாமல் தன் முடிவிலேயே உறுதியாக நின்றாள். "ஒருவரை மனதில் வைத்து பூஜித்துக் கொண்டு இன்னொருவருடன் எப்படி குடும்பம் நடத்த முடியும்? சந்தரம் சார் இல்லாவிட்டால் நான் இந்த உயரத்துக்கு வந்திருக்க மாட்டேன். அவர் எனக்கு வாழ்க்கையையும் மகிழ்ச்சியையும் தந்தவர். வாழ்ந்தால் அவருடன் தான் வாழ்வேன்!" என்று பிடிவாதமாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவளை அனுப்பிவிட்டு,மனைவியிடம் விஷயத்தை சொல்லி நாளை அவரை அழைத்து வாருங்கள் என்று சொன்னார் மருத்துவர்.

மறுநாள் வீங்கிய கண்களும் சிந்திய மூக்குமாய் வந்தாள் சுந்தரத்தின் மனைவி துர்கா. உரையாடல் ஆரம்பித்ததும் திரும்பவும் அழத்தொடங்கினாள் துர்கா.

"இந்த மனுஷன் இப்படிச் செய்வார்னு நான் கனவுலையும் நினைக்கவில்லை. அவளைப் பற்றி இவர் நிறைய சொல்லி இருக்கார். எனக்கு பரிதாபம் உண்டாகும். அதனால் அவளை என் நண்பியா ஏத்துக்கிட்டேன். தனக்கு சுகமில்லாமல் போனா எங்க வீட்டில தான் தாங்குவா. தன் பிள்ளைகளோடு வருவா. குடும்பத்தில் ஒருத்தர் மாதிரிப் பழகினா... நானும் பாவம் தானே என்று இடம் கொடுத்தேன். அவளது கஷ்டங்களை என் கஷ்டங்களாக நினைத்து உதவி செய்தேன். நான் துணி எடுக்கும் போது அவளுக்கும் சேர்த்தே வாங்கினேன். அவள் என் வீட்டில் இருக்கும் போது நான் வெளியே போக வேண்டியிருந்தா, அவளை வீட்டை பார்த்துக்கச் சொல்லிட்டு போவேன். அவள் எங்கள் படுக்கையறையில் இருந்தாலும் நான் அதைத் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை.

இப்படிச் செய்வாள் என்று யார் கண்டது!" என்று அவள் அரற்றினாள். அவள் பேச்சில் இருந்து அவள் ஒரு அப்பாவி; வெகுளி என்பதை மருத்துவர் அறிந்து கொண்டார்.

"அவள் எனக்கு துரோகம் பண்ணுவாள் என்று கனவிலும் நினைக்கலை. இப்போது தன் பிள்ளைகளை விட்டுட்டு ஹோஸ்டலுக்கு போய்த் தங்கும் அளவுக்கு நெஞ்சழுத்தக்காரி என்பது அப்போது தெரியலையே!" என்று புலம்பினாள் துர்கா.

அதன்பினனர் சுகன்யாவின் கணவரை வரச்சொல்லி அவருடன் பேசினார் மருத்துவர். சுந்தரத்தின் மனைவி மீது அவருக்கு நல்ல அபிப்பிராயம் இருந்தது. இவர்களை அழைத்து பேசிய பின்னர் மருத்துவர் அறிந்து கொண்ட ஒரு விஷயம் தான், சுந்தரத்துக்கும் மனைவி துர்காவுக்கும் இடையே கடந்த சில வருடங்களாக நெருக்கமான தாம்பத்திய உறவு இல்லை என்பதாகும்.

மருத்துவர் சுந்தரத்தின் மனைவியை தனியாக அழைத்து மனநல ரீதியான அறிவுரைகளைத் தந்தார். "நீங்கள் ஒரு மனைவி. ஒரு வீட்டின் தலைவி. உங்கள் குடும்பத்தில யார் யார் எவ்வளவு தூரம் சுதந்திரம் எடுத்துக் கொள்ளலாம் என்பதை நீங்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும். ஒரு மிருகம் கூட, தனது அதிகாரத்துக்குள் ஒரு சிறு பகுதியை வைத்துக் கொள்ளும், அப்படி யாரும் நுழைய முடியாத ஒரு எல்லையை நீங்கள் ஏன் வைத்திருக்கவில்லை? பிறன் மனைவியை எப்படி உங்கள் படுக்கையறைக்குள் அனுமதித்தீர்கள்? அதுதான் போகட்டும்; உங்களுக்கும் உங்கள் கணவனுக்கு ஒரு தாம்பத்திய ரீதியான இடைவெளி ஏற்பட்டதும் அது ஏன், எப்படி, அதன் விளைவுகள் எப்படி இருக்கும்? யார் யார் இதை சாதகமாக பாவித்துக் கொள்ள முடியும்? என்பதை எல்லாம் என்றைக்காவது யோசித்திருக்கிறீரா?"

இப்படி பல கேள்விகளை எழுப்பிய மருத்துவர், இதற்கான பதில்களையும் விரிவாக, விளங்கும்படி சொன்னார். கணவன்,குழந்தை மற்றும் குடும்பம்-இவைதான் ஒரு குடும்பப் பெண்ணுக்கு முக்கியம். பிறருடன் எவ்வளவு தூரம் நட்பு பாராட்ட வேண்டும என்பதில் ஒவ்வொரு மனைவியும் ஒரு அளவுகோலை வைத்திருக்க வேண்டும். இல்லையேல் விபரீதங்களை சந்திக்க வேண்டியிருக்கும் என்றெல்லாம் புத்திமதி கூறி அவருக்கு தெளிவு உண்டாக்கினார்.

பின்னர் சுகன்யாவை வரச் சொல்லி அவளுடைய கணவருடன் சேர்ந்து வாழும்படியும், அன்பு, செஞ்சோற்றுக்கடன் என்ற பெயரில் பிறர் குடும்பத்தில் குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் என்றும் அறிவுரை சொன்னார்.

ஆனாலும் சுந்தரத்துக்கு சுகன்யா அழைப்புகளை அனுப்பிக் கொண்டுதான் இருந்தாள். சுந்தரம் தன்னை முற்றிலுமாகத் தவிர்க்கிறான் என்பதை முழுமையாக அவள் விளங்கிக் கொண்டதும் அவள் தொந்தரவு நின்றது. ஹொஸ்டலை காலி செய்துவிட்டு வீட்டுக்குச் செல்ல, அவள் கணவனும் அவளை ஏற்றுக் கொண்டான்.


பிரச்சினையும் தீர்ந்தது.

## குருவும் சிஷ்யனும்





இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.



"இரண்டுக்கு இடையே இடைவெளி வேணுங்கிறதை அவர் தப்பா புரிஞ்சிக்கிட்டார்..!"

"என்ன செய்தார்..?"

"எங்களுக்குக் கல்யாணம் ஆகிப் பத்து வருஷம் ஆயிடிச்சே, இப்ப இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கலாமான்னு கேட்கிறார்..!"

தொகுப்பு: ஜெயா, விஜயப்பட்டி




## வானவில் மங்கை



**டிப்ஸ்**

இரவில் புளித்த மோரை குக்கரில் ஊற்றி மூடிவைத்து காலையில் குக்கரைத் தேய்த்துக் கழுவினால் குக்கர் பளபளப்பாகும்.






லெதர் ஹேண்ட்பேக், பர்ஸ், சூட்கேஸ் ஆகியவை புதுசுபோல தோற்றமளிக்க கிளிசரின் தடவி துடைத்தால் போதும் புதுசுபோல பளபளக்கும்.



வாழைத்தண்டு வெண்மை நிறம் மாறாமல் இருக்க ஒரு எலுமிச்சைபழத்தை சாறு பிழிந்து அதில் வெட்டிய வாழைத்தண்டைப் போட்டால் போதும்.





முடிந்த பேனா மூடிகளை எறியாமல் துணிகளை காயவைக்கும் போது கிளிப்பாக உபயோகிக்கலாம்.

# உங்கள் உடல் சமநிலையில் உள்ளதா?





மனதை சமநிலையில் வைத்திருங்கள் என்றுதானே கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் இங்கே உடலை சம நிலையில் வைத்திருங்கள் என்று கூறுவது புதுமையாக இருக்கின்றதா? ஆம் மனது மட்டுமல்ல உடலும் சமநிலையில் இருந்தால் பல நன்மைகள் உண்டு. சிலர் சிறு கல் தடுக்கினால் கூட விழுந்துவிடுகிறார்கள். காரணம் உடல்சமநிலையைப் பேணாததால் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். இதற்கு நாம் இந்த சிறிய பயிற்சிகளை அன்றாடம் செய்து வரலாம். நாம் சிறிய வயதில் விளையாடிய 'நொண்டி' அடித்தல் உடல் சமநிலையைப் பேண ஓர் சிறந்த பயிற்சியாகும். ஆனால் இப்போது இந்த விளையாட்டுக்களை சிறுவர்கள் கூட விளையாடுவதில்லை. சதாகாலமும் கணனிமுன்தான் இருக்கின்றார்கள். இதற்கு பெற்றோரும் ஒரு காரணம். வெளியில் விளையாடச் சென்றால் விழுந்துவிடுவான் என்றெல்லாம் பயந்து வீட்டிலிருந்தே கணனியில் விளையாடட்டும் என்று விட்டுவிடுகிறார்கள். அக்காலத்திலேயே இதையெல்லாம் தெரிந்துதான் இப்படிப்பட்ட விளையாட்டுக்களையெல்லாம் உருவாக்கி வைத்திருந்தார்கள் நம்முன்னோர்கள். நீங்கள் செய்ய வேண்டிய பயிற்சிகள் இதோ:

* நீங்கள் வீட்டில் சமைக்கும் போதோ அல்லது நீண்டநேரம் நிற்கும் போது ஒரு காலை மடக்கி ஒற்றைக்காலலில் கொக்கைப்போன்று நில்லுங்கள். அதிலும் சாரிகட்டியிருக்கும் பெண்களுக்கு இது வசதியாகும், ஒற்றைக்காலில் நிற்பது தெரியாது.

* சப்பாத்து அணியும் போது குனிந்து அணிகின்றோம் அல்லது ஒரு கதிரையில் அமர்ந்து அணிகின்றோம். இனிமேல் இதற்கு பதிலாக நின்று கொண்டே அணிந்து பழகுங்கள்.

* வீட்டில் செருப்பு வைக்கும் ஸ்டாண்டுகளில் செருப்பை கழற்றி வைக்கும் போது கைகளால் தூக்கி வைக்காமல் கால் விரல்களால் தூக்கி வைத்துப் பழகலாம். இப்படி செய்வதால் மனதை எங்கோ வைத்தபடி நடந்தாலும் கூட உடல் தானாகவே செய்யும்.

இப்படி செய்துவருவதால் நிறைய நன்மைகள் உள்ளன. வயிற்றுப் பகுதி உள்ளே போய் வயிறுபெரிதாகாது. இதுமட்டுமல்ல முன்தொடைப்பகுதி உறுதியாகி முட்டிவலி வராது. ஏற்கனவே முட்டிவலி இருப்பவர்களுக்கு வலிகுறையும்.

# குழந்தைகள் ஏன் சுட்டித்தனம் பண்ணுகின்றன?

**எங்கள் குழந்தைக்கு நாங்கள் விளையாட்டுச் சாமான்களையே வாங்கிக் கொடுப்பதில்லை. வாங்கிக்கொடுத்த ஒரே நாளில் அக்கு வேறு ஆணி வேறாக பிய்த்துப்போட்டுவிடுகின்றான். எதையும் பத்திரம் பண்ணவே தெரியாது. எதிர்வீட்டு மல்லிகா ஒரு விளையாட்டு சாமானையும் உடைக்காது.. கெட்டிக்காரப்பிள்ளை...**

இவ்வாறான பெற்றோர்களின் புலம்பலை நீங்கள் அடிக்கடி கேட்டிருப்பீர்கள். பொதுவாகவே சாதுவான குழந்தைகளை நல்லவர்கள் என்றும், சுட்டிக்குழந்தைகளை குழப்பக்காரர்கள் என்றும் கருதுவது பரவலானது. ஆனால் சாதுவாக ஒரு குழந்தை தான் உண்டு தன் பாடு உண்டு என்றிருந்தால் அதன் செயல் ஊக்கமும், மன ஊக்கமும் மெதுவாக செயல்படுகின்றன. விருத்தி அடைவது தாமதமாகிறது என்பதே அதன் பொருள். நல்ல ஆரோக்கியம் கொண்ட குழந்தை சாதுவாக இருக்காது. உடல் உற்சாகமாக இருந்தால் குழந்தை ஏதேனும் செய்து கொண்டு தான் இருக்கும். மனமும் உடலும் எதையேனும் கற்றுக்கொள்ள, புதிதாக தெரிந்து கொள்ள, பரிசோதனை செய்து பார்க்க விரும்புவதைத் தான் நாம் 'குழப்படி' என்று அழைக்கிறோம்.

ஒன்று முதல் மூன்று வயது வரை தான் குழந்தைகளுக்கு இந்த ஆறாம் அறிவு வளர்ச்சியடையும். இந்த வயதில் குழந்தைகளின் மூளை ஈரமான களிமண் மாதிரி. அதை எப்படி வார்த்தெடுக்கிறோம் என்பது பெற்றோர் கையில் தான் இருக்கிறது. அந்த வயதில் எதையெல்லாம் எடுத்து ஆராய்ந்து உடைத்துப்பார்க்கிறார்களோ அதைப்பற்றியெல்லாம் கற்றுக்கொள்வார்கள். இந்தப்பருவம் அனுபவித்துக்கற்றுக்கொள்கிற பருவம். மனிதனின் மூளையை இயற்கை அப்படித்தான் வடிவமைத்திருக்கிறது என்பதை பெற்றோர் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு குழந்தை பவுடர் டின்னை திறந்து சாய்க்கிறது. தரை முழுக்க பவுடர் சிந்துகிறது. இந்த செய்கை மூலம் பவுடர் டின்னை தலை கீழாக சாய்த்தால் அது கீழே சிந்தும் என்பதை புரிந்துகொள்கிறது. அப்போது பெற்றோர்கள் கோபமாகி குழந்தையின் முதுகில் ஒரு அடி போடுவார்கள். இதுதான் தவறான அணுகுமுறை. இப்படிச்செய்வதால் அவர்கள் புதிதாக எதையும் கற்றுக்கொள்ள முடியாமல் போகும். அவர்களை அடித்தாலோ மிரட்டினாலோ குழந்தை நம் சொல் படி நடக்காது; கற்றுக்கொள்ளவும் செய்யாது. 'குழந்தை கற்றுக்கொள்ள வேண்டும், பெற்றோர் சொல்படி கேட்கவேண்டும்' என்று நினைப்பவர்கள் குழந்தையின் போக்கிலேயே போய் அவர்களை வழிக்குக்கொண்டு வருவதே சிறந்த முறை.

குழந்தை அறிவாளியாக வேண்டுமா, முட்டாளான வேண்டுமா என்பதை தீர்மானிப்பவர்கள் பெற்றோர்கள்தான். ஒரு குவளையை அல்லது கொள்கலனை சாய்த்தால் அதில் உள்ள பொருள் கீழே விழும், சிந்தும் என்பது செய்து பார்த்தால் தானே தெரியும்..! இந்த அறிவு உண்டாகிறதே, அது பெரிய விஷயம் அல்லவா..!

அறிவு வேண்டாம் என்கிறவர்கள் குழந்தையை அடிக்கலாம். பவுடரை மறைக்கலாம். என் குழந்தை கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள், குழந்தை பவுடர் கொட்டும்போது உடன் இருந்து இப்படி சாய்த்தால் பவுடர் வீணாகும். பவுடர் முகத்துக்கு பூசிக்கொள்வது. அதை வீணாக்கக் கூடாது. காசு கொடுத்து வாங்கிய பொருளை வீணாக்கலாமா கண்ணா..? என்கிற முறையில் குழந்தைகளை கையாள வேண்டும். அது தான் சரியான அணுகுமுறை.



## சமைத்துப் பாருங்கள்

### ஸ்பெஷல் சாம்பார்

**செய்யத் தேவையானவை:**


| | |
|---|---|
| காய்கறி (கரட், முருங்கைக்காய், போஞ்ஜி, பூசணிக்காய்) | - 2கப் |
| பெரிய வெங்காயம் | - 2 |
| துவரம்பருப்பு | - 1/2 கப் |
| மஞ்சல் தூள் | - 1/2தேக்கரண்டி |
| கடுகு | - 1/2 தேக்கரண்டி |
| தக்காளி | - 2 |
| வெந்தயம் | - 1/2 தேக்கரண்டி |
| கறிவேப்பிலை | - சிறிதளவு |
| உப்பு | - தேவையானளவு |
| எண்ணெய் | - தேவையானளவு |

**அரைக்க:**

| | |
|---|---|
| முழு கொத்தமல்லி | - 1 தேக்கரண்டி |
| மிளகாய்வற்றல் | - 8 |
| சின்ன வெங்காயம் | - 5 |
| தேங்காய்துருவல் | - 1 தேக்கரண்டி |
| கடலைப்பருப்பு | - 1 தேக்கரண்டி |
| உழுத்தம்பருப்பு | - 1 தேக்கரண்டி |
| பெருங்காயம் | - ஒரு சிட்டிகை |
| சீரகம் | - 1 தேக்கரண்டி |

**செய்முறை:** முதலில் எண்ணெய் சிறிதளவு விட்டு அரைக்கவேண்டியதை வறுத்து அரைக்கவும். பின் துவரம்பருப்பை வேகவைத்துக்கொள்ளவும். பின் காய்கறிகளை நீளவாக்கில் வெட்டி வேகவைத்துக்கொள்ளவும். பின் எண்ணெய்விட்டு கடுகு, கறிவேப்பிலை, பெருங்காயம் போட்டு பொறிந்ததும் வெங்காயம் தக்காளிபோட்டு வதக்கி காய்கறி, பருப்பு சேர்த்து மஞ்சல் தூள் சேர்த்து கிளறி அரைத்த விழுதை போட்டு கொதிவந்ததும் வறுத்து பொடித்த வெந்தயத்தை தூவினால் சுவையான அரத்துவிட்ட சாம்பார் ரெடி.

# வானவில் பூங்கா



# சிங்கம் விரும்பிய அழகி

**ஒரு** விறகு வெட்டி விறகு வெட்டுவதற்காக அன்றாடம் காட்டுக்குச்செல்வான். அவனுடன் மகளும் செல்வது வழக்கம். இருவரும் வெட்டிய விறகை கட்டாகத் தலையில் சுமந்து செல்வார்கள்.

விறகு வெட்டியின் மகள் அழகாக இருப்பாள். அவளை அந்தக்காட்டில் வசித்த ஒரு சிங்கம் அடிக்கடி பார்க்கும். அவள் நடந்து செல்லும் அழகை ரசிக்கும். ஒரு நாள் சிங்கம் விறகு வெட்டியின் எதிரில் வந்து நின்றது. ''விறகு வெட்டியாரே..! உனது அழகான மகள் மீது நான் ஆசை வைத்துவிட்டேன். அவளை நான் திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றேன்.'' என்று கூறியது.

சிங்கத்தின் இந்த விபரீத ஆசையைக் கேட்டு விறகு வெட்டி திகைத்தான். எப்படி இதனிடமிருந்து தப்புவது என்று சிந்தித்தான்.

''என்ன யோசனை? பதில் சொல்'' என்று கேட்டது சிங்கம்.

''என் மகளிடம் பேசிவிட்டு சொல்கிறேன்'' என்று விறகு வெட்டி கூறினான். பிறகு சிங்கத்திடம் சென்றான் விறகு வெட்டி.

''நீங்கள் இந்த காட்டின் மன்னாதி மன்னர். நீங்கள் கேட்பின் நாங்கள் மறுக்க முடியுமா..? ஆனால் ஒரு நிபந்தனை என்று இழுத்தான்.

''என்ன நிபந்தனை? எதுவானாலும் பரவாயில்லை. தைரியமாக சொல்லுங்கள்''

சிங்கம் ஊக்கமளித்ததால் விறகு வெட்டி சொன்னான். ''தங்கள் கால்களிலும் கைகளிலும் உள்ள நகங்களையும், கூர்மையான பற்களையும் கண்டு அவள் பயப்படுகிறாள்.

''காதலுக்காக எதையும் தியாகம் செய்யலாம். கேவலம் பல், நகம் அவ்வளவு தானே..? நீயே பிடுங்கி விடு. என்று சிங்கம் விறகு வெட்டியிடம் சம்மதம் தெரிவித்தது. விறகுவெட்டி சிங்கத்தின் கால் கை நகங்களையும் கூர்மையான பற்களையும் பிடுங்கினான். முகூர்த்தம் எப்போது? என்று கேட்டது சிங்கம்.

விறகு வெட்டி ''கோடரியை தூக்கி, மண்டையை பிளந்து விடுவேன். தகுதி தெரியாமல் பிதற்றாதே'' என்றான். வலுவிழந்த சிங்கம் பிழைத்தால் போதும் என்று ஓடிவிட்டது.

**வி.நித்தியா,**
சாந்த மேரி மகா வித்தியாலயம்,
மத்துகம

# ஊதாமல் விரிவடையும் பலூன்



**வா**யால் காற்று ஊதியும் பலூனை நிறைக்கலாம். அல்லது பம்ப் வைத்தும் காற்றை நிறைக்கலாம். ஆனால் இப்பரிசோதனைக்கு அடுப்படியே ஆய்வுக்கூடம். பனிக்கட்டியும் நெருப்பும் தேவை. காலி குளிர் பானப் போத்தலும் வேண்டும். இவற்றை வைத்துக்கொண்டு காற்றை நிறைக்க என்ன வழி? அவசரப்படாதீர்கள்.

ஒரு பாத்திரத்தினுள் பனிக்கட்டியை போட்டு குளிர்வித்த நீர் எடுத்து கொள்வோம். அதனுள் ஒரு வெற்றுப்போத்தலை நிறுத்திக் குளிர்விக்கவும். பின்னர், போத்தல் வாயில் பலூனை நூலினால் இறுகக் கட்டி விடவும்.


போத்தலை அப்படியே கொண்டு வந்து கொதித்த வெந்நீர் ஊற்றிய மற்றொரு பாத்திரத்தில் வைக்கவும். பாட்டில் வெடித்து விடாமல் இருந்தால் பரிசோதனை வெற்றி. ஒரு சில வலு குறைந்த கண்ணாடிக்குப்பிகள் சூடு தாங்காமல் உடைந்து போக வாய்ப்பும் உண்டு. வீட்டில் அப்பாவிடம் அனுமதி பெற்றுக்கொண்ட பிறகே பரிசோதனை தொடங்கவும்.

இப்போது போத்தல் வாயில் கட்டிய பலூன் மெல்ல ஊதிப் பெருகுவதை காணலாம்.

அட, மாயாஜாலம் படம் மாதிரி ஆச்சரியமாக இல்லை? தானாகவே ஊதும் பலூன். இதில் மாய மந்திரம் ஒன்றும் இல்லை.


வெப்பத்தினால் காற்று விரிவடையும் என்பதே உண்மை. போத்தலினுள் குளிர்ந்திருந்த காற்று வெப்பத்தினால் விரிவடைந்தபோது பலூன் ஊதிப்பெரிதானது. போத்தலுக்கு உயிர் வந்து மூச்சு விட்டதாக எந்த உள்ளூர் மந்திரவாதி சொன்னாலும் ஏமாந்து விடாதீர்கள்.

# ஞாபகப் பயிற்சி



**இங்கேயுள்ள பதினொரு படங்களையும் இருபது வினாடிகள் கூர்ந்து பாருங்கள். பின்பு அவற்றை ஞாபகப்படுத்தி எழுதுங்கள்.**

# சொல் விளையாட்டு 10



**இடமிருந்து வலம்**

1 காட்டுக்கு ராஜா
3 கண்
4 ஜோக்
7 துள்ளி விளையாடும்
8 அழித்தற் கடவுள்
9 நடிகை

**மேலிருந்து கீழ்**

1 மனிதக்குரங்கு
2 இறந்தவர் போல் நடித்தால் இதனிடம் இருந்து தப்பலாம்
3 விஷப்பாம்பு
6 ஒரு நிறம்
7 பறவைகளின் ராஜா

**சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 9ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...**

# விடுகதைகள்

பள்ளம் மேடு
எதுவாயினும் பாதை
தடையில்லை இவனுக்கு..
தவழ்ந்தும் போவான்
தாவியும் போவான் தாகம்
தீர்க்கும் கடமையும் இவனதே..
அவன் யார்..?

நிறத்தில் கறுப்பு குரலில் இனிப்பு அது என்ன?

இரவுப்பாடகன் பாம்புக்கு விருந்தாவான் அவன் யார்?

தட்டினால் தாளம் அடுப்பில் வைத்தால் சமையல் அது என்ன?

கண் முன்னே அடி தடி கண்டும் ஏதும் செய்ய முடியவில்லை அது என்ன?

போட்டுக்கொள்ளாமலே மறுபடி மறுபடி சட்டையை கழற்றுவான், ஆனால் மாயவித்தை காரன் அல்ல அவன் யார்?


வளர்வதும் தேய்வதும் வாடிக்கை இவனுக்கு. அவன் யார்?

முத்தம்மா மகனுக்கு முதுகிலே மூன்று கோடு அவன் யார்?


எண்ணெயில் இருப்பவனின் வாசம் திண்ணையில் இருப்பவனுக்கு சேரும். அவன் யார்?


**சரியான விடைகள்**
தண்ணீர் சினிமா காட்சி
குயில் பாம்பு
நத்தை நிலா
தவளை அணில்
மண் பானை பலகாரம்

# வண்ணம் தீட்டுங்கள்




# விண்வெளி மியுசியம்







**அ**மெரிக்க தலைநகர் வாஷிங்கடனில் விண்வெளி சாதனங்கள் அருங்காட்சியகம் (ஸ்பேஸ் மியுசியம்) ஒன்று இருக்கிறது. இங்கு அமெரிக்கா தனது நாட்டில் இருந்து விண்வெளிக்கு அனுப்பி வைத்து பூமிக்கு திரும்பிய விண்வெளிக்கலங்கள், செயற்கை கோள்கள், ராக்கெட்டுகள் மற்றும் பழமையான ஆகாய விமானங்கள், ஹெலிகாப்டர்கள், வெப்பக்காற்று பலூன் ஆகியவை நூற்றுக்கணக்கில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.



விண்வெளிக்கு சென்ற வானவெளி வீரர்கள் பயன்படுத்திய உடைகள், ஒக்ஸிஜன் சாதனங்கள் அந்தந்த விண்வெளிக் கலங்களிலேயே ஞாபகார்த்தமாக வைக்கப்பட்டுள்ளன.

இந்த விண்வெளி அருங்காட்சியகத்துக்கு தினமும் 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் வந்து பார்த்து செல்கின்றனர்.

படத்தில் நீங்கள் பார்ப்பது ஸ்பேஸ் மியுசிய விண்வெளி சாதனங்கள் தான்.

# ஜன்னலுக்கு வெளியே...



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய நடிகை

A. ஷாலினி
B. ஸ்ரீதேவி
C. நதியா
D. கார்த்திகா

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்

## வாங்க பழகலாம்

என் கிட்டேயும் ஒரு போன் இருக்கு
நல்லா பழகுங்க.
டெய்லி எஸ்.எம்.எஸ் பண்ணுங்க.
புடிச்சா கோல் பண்ணிப்பேசுங்க.
இல்லாவிட்டால் ரீசார்ஜ் மட்டும்
பண்ணி விடுங்க.

- எப்.ரிஸ்னா, கொழும்பு 13

Lattum uro naaN
usooL uro naaN
ukkurriK uro naaN
mayithiaP uro naaN

என்ன
முழிக்கிறீங்க?
ரிவேர்ஸ்ல
வாசிங்க
அப்பத்தான்
நீங்க யாருன்னு
விளங்கும்.
சொரி.

- பள்ளிவாசல்துறை ஸாஹிர்

## SMS பூக்கள்

நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்.எம்.எஸ். கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம். இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம். முகவரி 3ஆம் பக்கத்தில்.

0778021501

## ஹலோ எப்படி சுகம்?

வாழ்க்கையில ஆறு விசயங்கள் எப்போ வரும்னு சொல்ல முடியாது.

1. இன்பம்
2. துன்பம்
3. காதல்
4. நட்பு
5. மரணம்
6. என்னுடைய எஸ்.எம்.எஸ்!

- சமீல், கண்டி

உலகம் என்பதில்
நீ சின்ன ஜீவன்..
ஆனால் உன்னை
நேசிக்கும் யாரோ ஒரு
ஜீவனுக்கு நீதான்
உலகம்.

சுகர் இல்லாத டீ வேஸ்ட்
பிகர் இல்லாத நீ வேஸ்ட்
நீ இல்லாத சூ வேஸ்ட்


- லமீகா, இனுகுல்ல

நாய் கடிச்சா
கல்லால் அடிங்க
பாம்பு கடிச்சா
கட்டையால்
அடிங்க
நுளம்பு கடிச்சா
கையால் அடிங்க
கை கடிச்சா
மறக்காம
சொறிங்க
முடிந்தால்
நாளைக்காவது
குளிங்க..
கூல்..

## எஸ்.எம்.எஸ் க்கு அர்த்தம்

எஸ் - சிங்கம் அனுப்ப
எம் - மங்கி படிக்கிற
எஸ் - சின்ன தகவல்

- சகீர், மாவனல்லை



போய்ஸ் லவ் என்பது ரஜினிகாந்த் மாதிரி
அது எப்ப வரும் எப்படி வரும்னு யாருக்கும் தெரியாது
ஆனா வர வேண்டிய நேரத்துல கரெக்டா வரும்

கேர்ல்ஸ் லவ் என்பது சத்யராஜ் மாதிரி
அவங்க கெரக்டரையே புரிஞ்சிக்க முடியாது..

நாமதான் வடிவேலு மாதிரி இருக்கணும்
எதையுமே பிளான் பண்ணி பண்ணணும்.. ஓகே..!

- ஹிசாம், அட்டன்

சர்ப்எக்ஸல் போட்டாலும்
போகாத கறை
நான் உன்மேல
வைத்திருக்கும் அக்கறை
நோ.. நோ.. அழக்கூடாது..
கண்ணா கறை நல்லது

- ஜி.மயூரி, வவுனியா

கசப்பான அனுபவங்கள்
இல்லை என்றால்
இன்பமான வாழ்க்கையை
நாம் உணர முடியாது
சோ உடனே
இரண்டு பாகற்காய்
வாங்கி சாப்பிடுங்க!

- எஸ். உமைரா
கந்தளாய்

ஜனவரி 14 க்கும் பெப்ரவரி 14க்கும் என்ன வித்தியாசம்..?
ஒரு பொண்ணு பொங்கல் கொடுத்தா
அது ஜனவரி 14.. அதே பொண்ணு
அல்வா கொடுத்தா அது பெப்ரவரி 14.

- ஷிப்னி, மூதூர்

பெண்கள் ஒரு சிங்கள் பேப்பர் போல..
ஆனா வாழ்க்கை ஒரு டிக்ஸ்சனரி போல..
சிங்கள் பேப்பருக்காக காத்துக்கிடந்து
டிக்சனரியை மிஸ் பண்ணாதீங்க

(தாரா)

மன்னர் : அரச சபை விகடகவியை பணி நீக்கம் செய்கிறேன்.

அமைச்சர் : ஏன் மன்னா?

மன்னன் : எனக்கு, எஸ்.எம்.எஸ்ஸில் நிறைய ஜோக் வருகின்றதே பிறகு எதற்கு இவர் வெட்டியாக..!!?

ஜே.சஹீஜன், யாழ்ப்பாணம்

வாழ்க்கை ஒரு வட்டம்
அதில் வரும் பல கட்டம்
அதுக்கு போடணும் பல திட்டம்
இல்லாட்டி வரும் பல கஷ்டம்

- கே.ஆர். சப்னா

கேர்ல்ஸ் : தேர்வு நேரத்துல நாங்க டீ.வி கம்பியூட்டர், செல் எதையும் தொடமாட்டோம்.. உங்களால் முடியுமா?

போய்ஸ் : ஆஹா நாங்க புக்கையே தொட மாட்டோம் அது உங்களால் முடியுமா..?

- எம்.சகிர், உக்குவல

## தத்துவம்

டீ கப் உள்ளே டீ
இருக்கும்
பட் வேல்ட் கப் உள்ளே
வேல்ட் கப் இருக்குமா..?

மீன் பிடிப்பவன் மீனவன்
மான் பிடிப்பவன்
மாணவனா..?

அண்ணனின் மனைவி
அண்ணி என்றால்,
தம்பியின் மனைவி
தண்ணியா?

மாலை
வந்தால்
தவளை கத்தும்
பட்
தவளை கத்தினா மாலை
வருமா?

எஸ்.பிஸ்ருல் ஆப்பி,
தங்கல்லை

டீச்சர் : வாசனை ரோஜா வாடிப்போகலாமா என்ற வசனத்தை மாற்றி சொல்லு

மாணவன் : வாடி சரோஜா ஓடிப்போகலாம்.

- சஸ்னா

## கண்ணீர் கதை

ஒருவன் ஒரு கண் தெரியாத பொண்ணை உயிருக்குயிராக லவ் பண்ணிக்கொண்டிருந்தான். என்னை கை விட மாட்டியே என்று அவள் கேட்டாள். கண்டிப்பா உன்னை கல்யாணம் பண்ணுவேன் என்று அவன் சத்தியம் பண்ணினான்.

கொஞ்ச நாளில் அவளுக்கு சிகிச்சை நடந்து கண் பார்வை கிடைத்துவிட்டது. பிறகு அவளை சந்தித்த அவன் இப்போது நாம் திருமணம் செய்யலாம் என்றான். ஆனால் அவளுக்கு ஒரே அதிர்ச்சி. ஏனென்றால் அவனுக்கும் கண் பார்வை இல்லை. அதனால் அவள் அவனை மறுத்துவிட்டாள். அவன் போகும்போது என் கண்ணை கவனமா பார்த்துக்கொள் என்று சொன்னான்.

- டீ.வேணு, ஏராவூர்

## தமிழ் சினிமாவின் நகைச்சுவை



கில்லின்னு சொன்னாங்க.. ஆனா ஹீரோ கபடி விளையாடுறாரு..!

போக்கிரியில் பொலிஸ்னு சொல்லி வீட்டுக் காவல் காரனை காட்டுறாங்க..

அழகிய தமிழ் மகன்னு சொன்னாங்க.. கடைசி வரை அது யாருன்னு காட்டவேயில்லை..

இது கூட பரவாயில்லீங்க.. குருவின்னு சொன்னாங்க.. ஆனா தியேட்டர்ல காக்கா கூட இல்ல..

வேட்டைக்காரன்னு பாத்தா.. ஆட்டோ காரண காட்டுறாங்க.

சுறான்னு சொல்லிட்டு கருவாடு காட்டுறாங்க.. சத்தியமா நான் விஜய்ய கிண்டல் செய்யலை.

- எம்.வி.கே.லத்தான், வவுனியா

காகம் ஏன் கரைகிறது?

அதை பிரிஜ்ஜில வைக்காததால்.

- சுஹைனா,
தென்னம்கும்புர, கண்டி




வாழ்க்கை ஒரு
செல்போன்
மாதிரி அதில்
பிரண்ட்ஸ்
சார்ஜர் மாதிரி. லவ்
ரீசார்ஜ் மாதிரி என்னதான்
ரீசார்ஜ் பன்னிணாலும்
சார்ஜ் இல்லன்னா சுவிட்ச்
ஓப் தான்..

- ∴பேர்ன்ஸ்,
அட்டாளைச்சேனை

மந்திரி : மன்னா..! இளவரசர் பக்கத்து நாட்டு இளவரசியை கடத்திக்கெண்டு வந்து விட்டாராம்

மன்னர் : சீ.. அவன் முந்திக்கொண்டானா..?

டேய் என்னடா கையில
பெரிய கட்டுப்
போட்டிருக்கிறாய்..

நீங்க தான் சொன்னீங்க
பரீட்சை வருது..
விழுந்து விழுந்து படிங்கன்னு..

உதயன் - சமரபாகு

## மொபைல் கவிதை

நீ சிரித்தால்
எனக்கு அது
'ரிங்டோன்'
நீ கோபப்பட்டால் அது
எனக்கு 'வைப்ரேஷன்'
நீ என்னை நினைத்தால் அது
எனக்கு 'மெசேஜ் டோன்'
உன் கண்கள் கலங்கினால்
எனக்கு அது 'பெட்றி லோ'
நீ என்னை மறந்தால் என்
இதயம் 'சுவிட்ச் ஓப்!'

- ஜி.வினோபரன், சுண்டிக்குளி



# மலேசிய இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு - 2011

## 3 ஆய்வு மாநாடுகள் ஆய்வு மாநாடுகளாக நடந்தால் மட்டுமே நோக்கம் நிறைவேறும்


**இராசையா மகேஸ்வரன்**
(சிரேஷ்ட துணை நூலகர், பேராதனை பல்கலைக்கழகம்)


இரண்டாவது ஆய்வரங்கு மலாயப்பல்கலைக்கழக கலைத்துறை மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு ஆய்வரங்கம் ஒன்று அறிஞர் அல்லாமா கரீம் கனி அரங்கம் எனவும் அரங்கம் 2 மகதூம் சாயபு அரங்கம் என்றும் பெயரிடப்பட்டிருந்தது. ஆய்வரங்க தொடக்க விழா மலாயப்பல்கலைக்கழக பெர்டானா சிஸ்வா மண்டபத்தில் டத்தோ எஸ்.எம்.ஐ.ஷேக் அலாவுதீன் அரங்கத்தில் நடைபெற்றது.

ஆய்வரங்க தொடக்க விழாவில் மலேசிய மனிதவளத்துறை அமைச்சர் டத்தோ டாக்டர் எஸ்.சுப்பிரமணியம், முன்னாள் துணையமைச்சர் டத்தோ சி.சுப்பிரமணியம், தேசிய கூட்டுறவுச்சங்கத்தலைவர் டான்ஸ்ரீ கே.ஆர்.சோமசுந்தரம், ஆஸ்டோ தலைவர் டாக்டர் செ.ராஜமணி, அக்மால் அலாவுதீன், ஜவகர் அலி, ஹாஜி நஜ்முதீன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், மலாயப்பல்கலைக்கழக இந்திய ஆய்வுத்துறை தலைவர் முனைவர் எஸ்.குமரன், கவிஞர் சீனி நைனா முகம்மது, ஏற்பாட்டுக்குழு தலைவர் டத்தோ முகம்மது இக்பால், இலக்கியவாதி சை.பீர் முகம்மது ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இலங்கை அரசு தமிழுக்கு அரச மொழி அந்தஸ்து வழங்கியுள்ளமை, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ ஐ.நா சபையில் தமிழில் உரையாற்றியமை போன்ற பல விடயங்களை ஏ.எச்.எம்.அஸ்வர் எடுத்துரைத்தார். ஆனால் இறுதி அமர்வில் மேடையில் ஒரு கட்சி சார்ந்தவர்களுக்கு மட்டுமே மேடையில் ஆசனம் வழங்கப்பட்டிருந்தது. ஏ.எச்.எம்.அஸ்வருக்கு உரிய ஆசனம் மேடையில் வழங்கப்படாமை பற்றியும் பலர் ஆதங்கப்பட்டனர். ஏனெனில் முஸ்லிம் கலாசார அமைச்சராக இவர் ஒரு காலத்தில் பதவி வகித்தவர் அல்லவா? என்று இவர்கள் சுட்டிக்காட்டவும் செய்தனர்.



மேடை: காயல்பட்டினம்

ஆய்வரங்க தொடக்க விழாவின் பின்னர் சகல ஆய்வரங்குகளும் டாத்தாரான் சாஸ்திரா (டி.கே.எப்) வளாகத்தில் நடைபெற்றன. ஆய்வு அரங்குகளுக்கு அறிஞர் அல்லாமா கரீம் கனி அரங்கம், மகதூம் சாயபு அரங்கம், அப்துல்லாஹ் - மாஸா அரங்கம், பண்டிட் மு.அப்துல் மஜீது அரங்கம், டத்தோ சிக்கந்தர் பாட்சா அரங்கம், ஜே.எம்.ஹுசைன் அரங்கம், செய்குத்தம்பிப் பாவலர் அரங்கம், கன்னல்கவி நக்கம்பாடி கரீம் அரங்கம், இலங்கையை சேர்ந்த கலாநிதி டாக்டர் ம.மு.உவைஸ் அரங்கம், சித்தி லெப்பை அரங்கம், புலவர்மணி ஷர்புதீன் அரங்கம் எனமொத்தம் பதினொரு அரங்குகள் நடைபெற்றன. இதில் டத்தோ சிக்கந்தர் பாட்சா அரங்கில் நூல் வெளியீட்டு விழாவும், ஜே.எம்.ஹுசைன் அரங்கில் இஸ்லாம் காட்டும் இலட்சிய வாழ்வும் எதிர்நோக்கும் சவால்களும் எனும் தலைப்பில் கருத்தரங்கும் நடைபெற மீதி ஒன்பது அரங்குகளில் ஆய்வுக்கட்டுரைகள் படிக்கப்பட்டன. இந்த ஒன்பது அரங்குகளும் இரண்டு மண்டபத்திற்குள்ளேயே நடைபெற்றன.

ஒரு ஆய்வரங்கில் இரண்டு கட்டுரைகளாக நான்கு அரங்குகளில் 8 கட்டுரைகளும், ஒரு அரங்கில் மூன்று கட்டுரைகளாக 5 அரங்குகளில் 15 கட்டுரைகளுமாக மொத்தம் 23 ஆய்வுக்கட்டுரைகளே இரண்டு நாளும் சமர்ப்பிக்கப்பட்டன.

கோவை செம்மொழி மாநாட்டில் மூன்று நாட்களில் 22 ஆய்வரங்குகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அன்மையில் நடந்த காயல் பட்டின ஆய்வரங்கில் சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 2 மணி வரை 11 ஆய்வரங்குகளில் 80க்கும் மேற்பட்ட கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால் இங்கே இரண்டு மண்டபங்களில் அமைந்திருந்த 9 அரங்குகளில் வெறும் 23 ஆய்வு கட்டுரைகளே சமர்ப்பிக்கப்பட்டன. அதில் மூன்று கட்டுரைகள் இலங்கை ஆய்வாளர்களுடையதாகும்.

இந்த ஆய்வரங்குகளுக்கு முனைவர் ஹாஜா கனி (தமிழ் நாடு), டாக்டர் தாசிம் அஹமது (இலங்கை), டாக்டர் அஹமது காமில் மைதீன் மீரா (அனைத்துலக இஸ்லாமிய பல்கலைக்கழகம் - மலேசியா), எஸ்.எச்.எம்.ஜமீல் (இலங்கை), முனைவர் ரெ.கார்த்திகேசு (மலேசியா), கெப்டன் என்.ஏ.அமீர் அலி (தமிழ் நாடு), ஷாஹுல் ஹமீது (மலேசியா) முனைவர் முரசு நெடுமாறன் (மலேசியா), டாக்டர் அ.சையது இபுராஹிம் (ஹிமானா சையது, சிங்கை) ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் இலங்கைக்குழுத் தலைவரும், செயலாளரும் மட்டுமே தலைமை தாங்கியது பற்றியும் ஏனையோருக்கு சந்தர்ப்பம் வழங்காமை பற்றியும் ஏற்பாட்டு குழுவினரிடையே முணுமுணுப்பு காணப்பட்டது. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஏற்பாட்டாளர்களுள் ஒரு சிலர் மட்டும் மலாயா பல்கலைக்கழக வாடி வீட்டில் தங்கிக்கொண்டு ஏனையோரை ஏனைய பேராளர்களுடன் மாணவர் விடுதியில் தங்க வைத்தமையும் இந்த முணுமுணுப்புக்கு காரணமானது.





இனி ஆய்வு கட்டுரைகளையும், வெளியிடப்பட்ட மலர்க்கட்டுரைகளையும், நோக்குவோம்...

இவற்றில் சில கட்டுரைகள் ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் மாநாடுகளில் முன்வைப்பதாகவும் சில கட்டுரைகள் ஒருவரைப்பற்றி மற்றொருவர் துதிபாடுவதாகவும் அமைந்திருந்தன.

இதைப்பலரும் சுட்டிக்காட்டினர். 1967ஆம் ஆண்டு மருத முனையில் முதலாவது இஸ்லாமிய தமிழ் இலகிய மாநாடு நடத்தப்பட்டது.

அன்று தொடக்கம் இன்று வரை நடைபெற்ற பல மாநாடுகளிலும் இஸ்லாமிய தமிழ் இலக்கிய வடிவம் பற்றிய அரைத்த மாவையே திரும்ப திரும்ப அரைத்து வருகின்றனர். அவற்றிற்கு உள்ளே சென்று அது எவ்வாறு ஏனைய இலக்கியங்களிலிருந்து மாறுபட்டுள்ளது; அவை அற்புதமான வடிவங்கள் என ஏன் கொள்ளப்பட வேண்டும்; அவற்றின் சிறப்புத்தன்மைகள், கருப்பொருள், உவமைகள் எனப்பல கூறுகளாக ஆராயலாம். ஆனால் மேலோட்டமாக முனாஜாத்து, கிஸ்ஸா, மசாலா, நாமா, ஏசல், பல்சந்த மாலை, ஆராட்டு, கீர்த்தனை, கும்மி, பிள்ளைத்தமிழ், சிந்து என மேலெழுந்தவாரியாகவே பேசப்படுகிறது. இவற்றில் உள் அம்சங்கள், பாடு பொருள், மரபுகள் கையாண்ட நடை இவை பற்றி ஆய்வுகள் மிகக்குறைவே. எனவே இந்த ஆய்வு மாநாடுகள் ஒரே பொருளை, ஒரே தலைப்பை மீண்டும், மீண்டும் பேசுவதாக அமைந்துவிடுகின்றன.

இஸ்லாமிய தமிழ் இலக்கியத்தில் பல புதிய வடிவங்கள் உண்டு. அவை பற்றி ஆராயப்பட வேண்டும்.

இவ்வாறான புதியன பற்றி ஆராயப்படாமைக்கு மற்றொரு காரணம் உண்டு.

1967ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இந்த மாநாடுகளில் குறிப்பிட்ட நபர்களே பங்குபற்றி வருகின்றனர்.


புதிய ஆய்வாளர்களை சேர்த்துக்கொள்வது குறைவாகவே உள்ளது. இன்று இலங்கை பல்கலைக்கழகங்களை எடுத்துக்கொண்டால் 15 பல்கலைக்கழகங்களிலும் பல புதிய இஸ்லாமிய விரிவுரையாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு சந்தர்ப்பங்களும், ஊக்குவிப்பும் வழங்கப்படுவது குறைவு,

1967ஆம் ஆண்டு இஸ்லாமிய தமிழ் இலக்கியம் பற்றிப்பேசியவரே இன்றும் கலந்து கொண்டு கட்டுரை படிக்கிறார். ஏற்பாட்டுக்குழுவிலும் இடம்பெறுகின்றார். இதனால் இஸ்லாமிய விரிவுரையாளர்களே பாதிக்கப்படுகின்றனர். பல்கலைக்கழகத்தில் பதவி உயர்விற்கு ஆய்வுகள், கருத்தரங்குகள் இன்றியமையாதவை. புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படாமற் போகும்போது இளைய இஸ்லாமிய தலைமுறையினர் பாதிக்கப்படுகின்றனர். இது பற்றி எதிர்கால இஸ்லாமிய இலக்கிய ஆய்வு மாநாடுகள் ஏற்பாட்டாளர்கள் சிந்தித்து அவர்களையும் பயன்படுத்தி ஊக்குவிக்க முயல வேண்டும். அரசியல்வாதிகளுக்கு மேடையில் கொடுக்கப்படும் முக்கியத்துவம் ஏன் ஆய்வாளர்களுக்கு கொடுக்கப்படுவதில்லை..? என்ற கேள்விக்கு நியாயமான பதில் தேவை. ஆய்வு மாநாடு ஆய்வு மாநாடாகவே இருக்க வேண்டும். ஏனெனில் ஏற்பாட்டுக்குழுவினரின் பெயர்ப் பட்டியலை கண்டவுடனேயே சில ஆய்வாளர்கள் இது நமக்கு சரிப்பட்டு வராது என்று கூறி தவிர்த்துக்கொள்வதை நான் அறிவேன். இலக்கிய ஆய்வு நாமாடுகள் அப்பொருளிலேயே நடைபெற்றால் தான் நோக்கம் நிறைவேறும்

(தொடரும்)

அ.கனகசூரியர்

# நீங்களும் தேனீ வளர்க்கலாம்!



## தேனீ வளர்க்கும் த.கருணாகரன் தரும் தேனான தகவல்கள்


**தேனீக்கள் அவற்றின் உள்ளுறுப்புகளில் ஒன்றான மெழுகு சுரப்பியிலிருந்து சுரக்கும் மெழுகைக்கொண்டு கூடுகளை உருவாக்குகின்றன. தேனீக்களால் மலர்களிலிருந்து எடுக்கப்படும் மதுவானது, இவற்றின் வயிற்றில் அமைந்திருக்கும் தேன் பைகளினால் வேதியல் மாற்றத்துக்கு உட்பட்டு தேனாக மாற்றப்படுகிறது.**

தேனீக்கள் மரங்களில் கூடுகட்டி வாழ்ந்து வருவது ஒரு இயற்கை நிகழ்வு. எனினும் செயற்கையாக தயாரிக்கப்படும் கூடுகளில் வளர்த்து அவற்றை பராமரிக்கும் முறையின் கீழேயே தேன் அறுவடை நடைபெறுகிறது. வடக்கு கிழக்கு மற்றும் மலையகப்பகுதிக-ளில் மட்டுமின்றி தென் பகுதியிலும் தேனீ வளர்ப்பு பரவலாக இடம்பெற்று வருகிறது. சிலர் பொழுது போக்காகவும், வேறு சிலர் சிலர் வர்த்தக ரீதியாகவும் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணக் கிராமப்பகுதிகளில் தேனீ வளர்ப்பு நடைபெற்று வருகி-றது. அளவெட்டியைச்சேர்ந்த தர்மலிங்கம் கருணாகரன், தனது வீட்டு வளவில் வெவ்வேறு மூன்று இடங்களில் இயற்கை முறையிலான தேனீ வளர்ப்பை மேற்கொண்டு வருகிறார். இவரது தகப்பனார் பலாங்கொடையில் தேயிலைத்தோட்டமொன்றின் உரிமையானராகவிருந்ததார் பலாங்கொடையில் பெரும்பா லானவர்கள் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டு வந்ததால், கருணாகரனும் ஆர்வம் கொண்டு பொழுது போக்காக தேனீ வளர்ப்பை மேற்கொண்டிருந்தாராம். பின்னர் அளவெட்டி கிராமத்தில் வசிக்கத் தொடங்கியபோது அங்கு தேனீக்களின் நடமாட்டத்தை அவதானித்துள்ளார். தனது வீட்டு வளவில் இரண்டு முட்டிகளையும் இரண்டு பெட்டிகளையும் தயார் செய்து தேனீக்கள் அவற்றில் கூடுகட்டி வாழ வழி செய்திருக்கிறார். இதில் இவருக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

கடந்த சில வருடங்களாக இவர் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டு வருவதுடன் வர்த்தக நோக்கமாக இல்லாமல் தனது சொந்த தேவைக்காக தேனை பெற்று வருவதில் திருப்தியடைகிறார்.

தேனீ வளர்ப்புக்கான இடம் சன சந்தடியற்றதாக இருக்க வேண்டும். புகை மிகுதியாக வரும் பகுதிக-ளும், மருந்துப்பொருட்களின் வாச னையுள்ள இடங்களும் ஏற்றதல்ல. மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருப்பதுடன், குளிர்ச்சியான வகையிலும் உள்ள இடங்களே தேனீ வளர்ப்புக்கு ஏற்றவையாகும். தேனீ வளர்ப்பு, இயற்கை முறை, செயற்கை முறை என இரு வகையிலும் மேற்கொள்ளப்படுகிறது. தேனீக்கள் பெருமளவிலுள்ள இடங்களில் அதற்குரிய முட்டிகள் அல்லது அதற்கென வடிவமைக்கப்பட்ட பெட்டிகளை வைத்து அதில் தேனீக்களை வரவழைக்க செய்யலாம். இது இயற்கை முறையிலான தேனீ வளர்பாக இருக்கும்.



தேனீக்கள் நடமாட்டமில்லாத பகுதிகளிலேயே செயற்கை முறையிலான தேனீ வளர்ப்பை மேற்கொள்வதுண்டு. இதற்குரிய தேனீக்களை காடுகளில் அல்லது மரப்பொந்துகளில் இருக்கும் கூடுகளிலிருந்து பிடித்தும் அல்லது தேனீ வளர்ப்பில் ஈடுபட்டிருப்பவர்களிடமிருந்து பெற்றும் வளர்க்கலாம். இவ்விதமான செயற்கை முறை தேனீ வளர்ப்பாளர்கள் இதற்காக சில நுட்பங்களை கையாள்வார்கள். இத்தகைய செயற்பாட்டுக்கு அதிக செலவாகும் என்று சொல்லப்படுகி-றது.

இந்த இருவகைகளுக்கும் அப்பால், கூட்டில் வளர்க்காமலே தேனை காட்டுப்பகுதிகளிலிருந்து சேகரிக்கும் வழக்கமும் உண்டு. இந்த செயற்பாடு வடபகுதியின் வன்னிப்பிரதேசம் உட்பட கிழக்கு மாகாணம் மற்றும் தென்னிலங்கை போன்ற இடங்களிலுள்ள காட்டுப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகிறது. அங்குள்ள மரங்களின் கொப்புகளில் உள்ள தேன் கூடுகளில் இருந்து எதுவித சிரமமும் இன்றி தேனை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். இதனை கொப்புத்தேன் என்றும், மரப்பொந்து, கற்குகை, பெட்டி மற்றும் முட்டிகளில் தேனீக்களால் கட்டப்பட்டிருக்கும் கூடுகளிலிருந்து சேகரிக்கப்படும் தேனை பொந்துத்தேன் என்றும் சொல்வதுண்டு. இத்தேன் கூடுகளை சாதாரண தேனீக்களே கட்டுகின்றன. இவை தவிர இன்னொரு வகையான தேனீக்களும் இருக்கின்றன. இவற்றை கொசுத்தேனீ என அழைப்பதுண்டு. கொசு வடிவிலான சிறிய தோற்றமுள்ள இவ்வகையான தேனீக்கள் பூவரசு மரங்களிலும் மற்றும் இடிந்த கட்டிடங்களிலும் கூடுகளை அமைக்கும். இந்தத்தேனையும் பாவனைக்கு எடுப்பது வழக்கம். கொப்புத்தேன் கூடு வட்ட வடிவமாக அமைந்திருக்கும். இதில் குறைந்தளவு தேனீக்களே இருப்பது வழக்கம்.

தேனீக்கள் அவற்றின் உள்ளுறுப்புகளில் ஒன்றான மெழுகு சுரப்பியிலிருந்து சுரக்கும் மெழுகைக்கொண்டு தான் கூடுகளை உருவாக்குகின்றன. தேனீக்களால் மலர்களிலிருந்து எடுக்கப்படும் மதுவானது, இவற்றின் வயிற்றில் அமைந்திருக்கும் தேன் பைகளினால் வேதியல் மாற்றத்துக்கு உட்பட்டு தேனாக மாற்றப்படுகிறது.

மனிதர்களுடைய செயற்பாடுகள் போலவே தேனீக்களது தேனை தேனை சேகரிக்கும் நடைமுறை காணப்பட்டாலும் அவற்றின் வாழ்க்கை முறை விசித்திரமானது மட்டுமல்ல, சுவாரஸ்யமானதுமாகும்.

ஒரு கூட்டத்திற்கு ஒரு பெண் தேனீ தான் இராணியாக இருக்கிறது. இது ஏனைய தேனீக்களை விட அளவில் சற்று பெரியதாக இருப்பதுடன் முட்டையிடுவதே இதன் வேலையாக இருக்கும். இராணி தேனீ மீது மஞ்சள் புள்ளிகள் காணப்படும்.

தேன் கூடு அறுகோண வடிவி லான ஏராளமான சிறு அறைகள் கொண்டதாக அமைந்திருக்கிறது. இதன் தடிப்பு ஒரு அங்குலம் அளவுள்ளதாக இருக்கம். கூட்டின் மேற்பகுதியிலுள்ள தேன் சேகரிப்புக்காக பயன்படுத்தப்படுகி-றது. கீழ்ப்பகுதி அறைகளிலேயே தேனீக்கள் தங்கியிருக்கின்றன. இராணி தேனீ வசிப்பதற்கான அறை சற்று பெரிதாக இருக்கும். இராணித்தேனீ இல்லையென்றால் ஏனைய வேலைக்கார தேனீக்கள் மிகவும் குழம்பிப்போய் தமது கட்டுக்கோப்பான சேர்ந்து வாழும் பண்பை இழந்து விடும். எல்லாத் தேனீக்களையும் ஈர்த்து ஓர் ஒழுங்கு முறையில் இருக்கச் செய்வதில் இராணித்தேனீ பெரும்பங்கு வகிக்கிறது.

இராணித்தேனியைச்சுற்றி ஏரா-ளமான ஆண் தேனீக்கள் உள்ளன. இவை இனப்பெருக்கத்திற்காக மட்டுமே இருக்கின்றன. இவற்றை சோம்பேறித் தேனீக்கள் என்றும் சொல்வதுண்டு. இவை தவிர பணி செய்வதற்காக ஏராளமான பெண் தேனீக்களும் உள்ளன. இவற்றையே வேலைக்காரத் தேனீக்கள் என்று சொல்லப்படுகிறது. இவை முட்டையிட்டு சந்ததிப்பெருக்கம் செய்ய இயலாத மலட்டுத்தன்மை வாய்ந்தவையாகும். எனினும் இவை அதிசய ஆற்றல் கொண்டவை.

(31ஆம் பக்கம் பார்க்க)

# தங்க ஆபரணங்களை அணியத்தான் வேண்டுமா..?

தங்கத்தின் விலை உச்சத்தை நோக்கி போய்க்கொண்டிருக்கிறது. இது இதுவரை காலமில்லாத உயர்வு. கொழும்பு செட்டியார் வீதியில் ஆபரணத்தங்கத்தின் விலை பவுண் 49 ஆயிரம் முதல் 52 ஆயிரம் வரை ஏறி இறங்கிக்கொண்டிருக்கிறது. அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி, டொலர் விலை வீழ்ச்சி, ஐரோப்பாவில் உருவாகியிருக்கும் பொருளாதார மந்த நிலை. லிபிய யுத்தம் என்று பல உலக-ளாவிய பொருளாதார காரணங்களால் தங்கத்தின் விலை எகிறிக்கொண்டிருக்கிறது. முதலீடு செய்வதற்கு ஏற்ற ஒரே நம்பிக்கையான பொருள் தங்கம் மட்டுமே என உலக முதலீட்டாளர்கள் கருதுவதால் பெருமளவு பணத்தை அவர்கள் தங்கத்தில் முதலீடு செய்வதால் தங்கத்தின் விலை ஏறிக்கொண்டே போகிறது. இப்போதைக்கு தங்கத்தின் விலை சரியாது என்கிறார்கள் தங்க வட்டாரத்தினர்.

இந்நிலையில் தங்கத்தை ஆபரணமாக அணிவதில் பெரு விருப்பு கொண்ட நமது பெண்கள் ஆபரணங்களை அணி-வதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். தங்கம் என்பது கௌரவத்தின், செல்வத்தின் அடையாளம் என்று நாம் கருதுகிறோம். திருமணம் போன்ற வைபவங்களில் கலந்துகொள்ளும் பெண்கள் தங்க ஆபரணங்களை அணிந்து வந்து தமக்குள் பெருமை பேச, இந்த வசதி இல்லாதவர்கள் வாயைப்பிளந்து தமக்குள் குமுறிக்குமைந்து போவார்கள்.



இது ஒருபுறமிருக்க இந்தத்தங்கம் தமக்கு ஆபத்தை விளைவிக்கும் என்பதை பெண்கள் எப்போதும் மனதில் வைத்திருக்க வேண்டும். தங்கத்தின் விலை உயர்ந்திருப்பதால் திருடர்களுக்கு தங்கத்தை திருடுவதுதான் ஆதாயம். எனவே வீண் கௌரவமும், பெருமையும் பெரிதா அல்லது நமது பாதுகாப்பு பெரிதா என்பதை பெண்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். தங்கம் அணிவது ஆபத்தானது என்பதை உணர்ந்து தங்க ஆபரணங்களை வங்கியில் வைத்து விடுவதே சரியானது.

இன்றைய திருடர்கள் நவீன துப்பாக்கிகளோடு வருபவர்கள். கதவை உடைப்பது, கூரையைப்பிரிப்பது, என்பதெல்லாம் அவர்களுக்கு கைவந்த கலை. மேலும் தங்க ஆபரணங்களுக்குப்பதிலாக கவரிங் நகைக-ளை அணிவதே சரியானது. அசல் தங்கம் போல தோற்றமளிக்கும் ஆபரணங்களும், ஃபெஷன் ஜுவல்லரி என அழைக்கப்படும் நவீன ஆபரணங்களையும் இன்று விதவிமாக கடைகளில் விற்கிறார்கள். அவற்றை உடைக்கு ஏற்ற மாதிரி அணியலாம்.

தங்கம் அணிந்து வீதிவழியே செல்லக்கூடாது என்பதில் பல பெண்களுக்கு தெளிவு வந்திருக்கிறது. எனினும் பல பெண்கள் வீதி வழியே இப்போதும் உலாவத்தான் செய்கிறார்கள். பஸ்களில் பயணிக்கிறார்கள். தமது மகள் மாருக்கும் அணிவித்து மகிழ்கிறார்கள். தங்கம் அணிவது தான் அவர்களுக்கு முக்கியமே தவிர விளைவுகள் பற்றி கவலை இல்லை.

தங்கப்பெருமை முக்கியமா..? தமது பாதுகாப்பு முக்கியமா..? என்பதை அவர்கள் தான் முடிவு செய்ய வேண்டும். வெள்ளம் வரு முன்னரேயே அணை போட வேண்டும். தங்கம் அணிவதற்கு கழுத்தும் கைகளும் இருக்க வேண்டாமா..?

- பாரதி

## நீங்களும் தேனீ... (30ஆம் பக்கத் தொடர்)

இராணித்தேனீயின் உணவுத் தேவையை கவனிப்பதற்காக 5 முதல் 10 வேலைக்காரத் தேனீக்கள் அமர்த்தப்படுகின்றன. இதை விட இராணித்தேனீயின் குடம்பிகள் மற்றும் ஆண் தேனீக்களுக்கு உணவளிப்பதுடன், தேனடையை பராமரித்தல் தேன் இருக்கும் இடம் அறிதல், மலர்களிலிருந்து தேன் சேகரித்துக்கொண்டு வந்து தேனடையிலுள்ள அறைகளில் பதனம் செய்தல் போன்ற கருமங்களுடன் தேன் கூட்டை அமைப்பதற்கான மெழுகைச்சுரப்பதும், மலர்களிலிருந்து மகரந்தத்தை எடுத்து வருவது மட்டுமன்றி இராணித்தேனீகளை உருவாக்கும் பணியையும் வேலைக்கார பெண் தேனீக்களே செய்கின்றன.

இராணி தேனீயின் முட்டைகளிலிருந்து வெளிவரும் புழுக்களுக்கு வேலைக்கார தேனீக்களால் தொடர்ந்து 16 நாட்கள் றோயல் ஜெலி எனப்படும் இராச கூழ் உணவு கொடுக்கப்படுவதால் அவை இராணித்தேனீக்களாக வளர்கின்றன. எனினும் ஒரு கூட்டில் ஒரு தேனீ மட்டுமே இராணித்தேனியாக மாறுகிறது. தேனீக்கள் தமது தேவைக்காகவும், குடம்பி வளர்ப்பதற்காகவுமே தேனை சேமித்து வைத்திருக்கின்றன. அமாவாசை நாளன்று தேனைக்குடித்துவிடும் வழக்கமும் உண்டு. சாதாரணமாக 4 முதல் 6 மாதம் வரையில் தேன் சேகரிப்பு காலமாகும். தேன் முற்றாகவே சேகரிக்கப்பட்டு விட்டது என்பதை தெரிந்துகொண்ட பின்னர் ஒரு அமாவாசை நாளில் தேனை எடுத்துக்கொள்வோம். சாதாரணமாக ஒரு முட்டியிலிருந்து 1.5 போத்தல் தேனையும், ஒரு பெட்டியிலிருந்து 3 போத்தல் தேனையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இப்போது யாழ் குடா நாட்டில் தேனீக்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனைப் பயன்படுத்தி இது விடயத்தில் ஆர்வமுள்ளவர்கள் எதிர் காலத்தில் தங்கள் வீடுகளில் தேனீ வளர்ப்பை ஆரம்பிப்பது நல்லது என்கிறார் தர்மலிங்கம் கருணாகரன்.

## சோமாலியாவின் சோகம்

சோறு தின்ன வழியில்லை
சோர்ந்து விழுகிறார் வீதியில்
சோகக் கதைகள் பல உண்டு
சோமாலியாவில் இது சகஜம்

ஆண்டுக்குள் முப்பதினாயிரம் சிறுவர்
அவல நிலையில் உழல்கின்றார்
பசிக்கொடுமை தாங்காமல்
பரிதாபமாய் இறக்கின்றார்

வீதியில் தனது மகனை கைவிட்டு
விதி வழியே போவென்று
பாதி உயிரை கையில் பிடித்து
பதறியழுத கதைகளும் உண்டு

வேண்டாம் இந்தக் கொடுமை
வேண்டும் சத்துணவு மக்களுக்கு
மாண்டு மடியும் சிறுவரை காக்க
மாணவர் நாம் கை கொடுப்போம்

ஒரு நாள் உணவை கொடுத்திடுவோம்
ஒன்று சேர்ந்து அதை அனுப்பிடுவோம்
பாரினில் இனியும் பசிப்பிணி
வேண்டாம்
பரிவுடன் இதனை செய்திடுவோம்

- இஸ்மாயில்

## பெண்ணாசை சொத்தாசை... (07ஆம் பக்கத் தொடர்)

இந்நிலையில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதையடுத்து தென் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டதை அறிந்துகொண்ட அவர் தான் முன்னர் தங்கியிருந்த இடங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நோக்கில், இலங்கை வந்தார்.

தென் மாகாணத்துக்கு சென்றதும் அவர் முன்னர் இலங்கை வந்தபோது பரிச்சயமான பலர் சுனாமியில் உயிரிழந்திருப்பதையும் வீடு வாசல்களை இழந்திருப்பதையும் கண்டார். மனம் பதைத்துப்போனார். இலங்கையிலே தங்கி இவர்களுக்கு உதவ வேண்டும் என்று தீர்மானித்தார்.

இத்தாலியில் ஹோட்டல் பிஸ்னஸ் நடத்திவந்த அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. திக்வெல்ல நகரில் ஒரு உல்லாச ஹோட்டலை கட்டி வெளிநாட்டு உல்லாசப்பயணிகளை அங்கு வரவழைப்பதன் மூலம் ஹோட்டல் தொழிலை நடத்திக்கொண்டே அதில் வரும் வருமானத்தில் ஒரு பகுதியை அந்த பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் செலவுக்கு ஒதுக்குவது.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய்.

இத்தாலியில் தனது வங்கிக்கணக்கில் இருந்த பெருமளவு பணத்தை இலங்கைக்கு வரச்செய்தார்.

ஹிக்கடுவையில் ஓரளவு பெரிய ஆடம்பர ஹோட்டலையும் திக்வெல்லையில் ஒரு சிறிய ஹோட்டலையும் கட்டி முடித்தார்.

வசதி படைத்தவர்களுக்கு ஹிக்கடுவை ஹோட்டல், எளிமையை விரும்பும் வெளிநாட்டவர்களுக்கு திக்வெல்ல ஹோட்டல் என்று அவரது வியாபாரம் களைகட்டியது.

வியாபாரம் களை கட்டத்தொடங்கியதும் மார்சல்லோவின் உல்லாச போக்கும் களை கட்ட ஆரம்பித்தது.

தயாவதிக்கு 40 வயது. ஆனால் அவளுக்கு 30 வயதுக்கு மெல் இருக்காது என்றுதான் அவளை பார்த்தவர்களெல்லாம் சொல்வார்கள். அவளுக்கு 10 வயதில் ஒரு மகனும் இருந்தான். அவளது கணவன் குணே ஒரு மீனவன். சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட தினத்துக்கு முதல் நாள் இரவு கடலுக்கு போனவன் திரும்பவே இல்லை.

தயாவதியை (அவளது அழகை) பார்த்து பரிதாபப்பட்ட மார்சல்லோ தனது ஹோட்டலுக்கு அடுத்ததாக இருந்த பொட்டல் காட்டில் ஒரு வீட்டை கட்டி அவர் தயாவதியை குடி வைத்தார். தயாவதிக்கு வேறு ஆண் உதவி இல்லாததால், மார்சல்லோவின் உதவியை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டாள். இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்தனர்.

ஆனால் ஹோட்டல் வேலைகளில் தயாவதி ஈடுபடுவதை மார்சல்லோ கூடிய வரை தவிர்த்துக்கொண்டே வந்தார். அவளது உறவு கட்டில் வரை இருந்தால் போதும் என்பது அவரது கணிப்பு.

மார்சல்லோவுக்கு குடும்பம் என்று ஒன்றும் இல்லை. அவரது ஹோட்டல்களுக்கு என்று வாரிசு எவரும் இல்லை. அவருக்கு பிறகு..? இந்த எண்ணம் மலையக பகுதியிலுள்ள ஒரு தொழிலதிபருக்கு நீண்ட காலமாகவே இருந்தது. இந்த யோசனையுடன் மார்சல்லோவின் நட்பு வட்டாரத்துக்குள் அவரும் இடம்பிடித்துக் கொண்டார்.

அந்த மலையக தொழிலதிபருக்கு அவரது ஊர்ப்பகுதியில் நல்ல செல்வாக்கு இருந்தது. ஆனால் தென்பகுதியில் ஹோட்டல் நடத்துவதில் அவருக்கு அலாதிப்பிரியம் இருந்தது.

அவருக்கு ஒரு மகள் இருந்தாள். பெயர் லோர்னா. அவளுக்கு 26 வயது தான். திருமணமான சில நாட்களிலேயே அவளது கணவன் ஒரு விபத்தில் இறந்துவிட்டான். நல்ல வாட்டசாட்டமான உடலுடனும், திரண்ட அங்கங்களுடனும் அவள் கவர்ச்சியாக இருந்தாள். அவளுக்கு ஏற்கனவே திருமணமாகியிருந்ததால் மீண்டும் வரன் தேடுவது சிரமமாக இருந்தது.

மாப்பிள்ளை என்று எவரையும் தேடி விடலாம். ஆனால் அவரது அந்தஸ்துக்கு ஏற்றவராக இருக்க வேண்டுமே..!

எப்படியாவது அவளை மார்சல்லோவுக்கு கல்யாணம் செய்து வைத்துவிட்டால் அவருக்கு கல்யாணமும ஆச்சு, சொத்துக்கு சொத்துமாச்சு, அந்தஸ்தையும் காப்பாற்றிக்கொண்டதாக ஆச்சு. மகளுக்கும் ஹோட்டல் ஆசை இருந்ததால் இந்த திட்டம் பிடித்துப்போய்விட்டது.

விருந்து அது இது என்று நடத்தி மார்சல்லோவை அவற்றில் கலந்து கொள்ளச்செய்து மார்சல்லோவின் மனதில் தனது மகளுக்கு ஒரு இடத்தை பெற்றுக்கொடுத்தார் தொழிலதிபர். லோர்னாவின் கவர்ச்சியில் மயங்கிய மார்சல்லோ அவரை திருமணம் செய்துகொண்டார்.

கல்யாணம், ஹனி மூன் எல்லாவற்றையும் முடித்துக்கொண்டு திக்வெல்லைக்கு வந்தபோது தான் தயாவதி விவகாரம் லோர்னாவின் காதுக்கு எட்டியது.

மார்சல்லோவின் ஹோட்டல்கள் தனது கைக்குத்தான் வரும் என்ற ஆசையுடன் இருந்த லோர்னாவுக்கு தயாவதியும் ஹோட்டல்களில் பங்கு கேட்கக்கூடும் என்ற பயம் ஏற்பட்டது.

ஹோட்டல்கள் தொடர்பான ஒரு சில ஆவணங்களில் தயாவதியின் கையொப்பம் இருந்தது. ஹோட்டல்களில் பங்கு தருவதாக கூறித்தான் ஆரம்ப நாட்களில் தனது ஆசைக்கு தயாவதியை மார்சல்லோ இணங்கச்செய்திருந்தார். எனினும் அந்த ஆவணங்களை மார்சல்லோ கவனமாக தன்னிடமே வைத்துக்கொண்டார்.

அவை எதுவுமே தயாவதியின் கைகளில் கிடைக்காதவாறு பார்த்துக்கொண்டார். இந்த ஆவணங்களில் ஒன்றைத்தான் லோர்னா பார்த்திருந்தாள். சட்டம் தெரிந்தவர்களை விசாரித்தபோது ஹோட்டல்களில் தயாவதியும் பங்கு கேட்க உரிமையுண்டு என்று தெரிய வந்ததும் லோர்னா அதிர்ந்து போனாள்.

ஹோட்டல்களின் முழுப்பங்கும் தனக்கே கிடைக்கவேண்டும், தயாவதிக்கு எந்த பங்கும் போகக்கூடாது. இதற்கு என்ன செய்யலாம்..? தனது தந்தையிடம் யோசனை கேட்டாள்.

அவர் ஒரு யோசனை சொன்னார். ஆம் அப்படித்தான் செய்யவேண்டுமென்று லோர்னா தீர்மானித்துக் கொண்டாள்.

ஜுலை 9, 2011.

காலை மணி ஏழு.

திக்வெல்ல பொலிஸ் நிலையத்துக்கு வந்த தொலைபேசி அழைப்பையடுத்து இஸபெல் ஹோட்டலுக்கு விரைந்தனர்.

ஹோட்டலை அடுத்த வீட்டில் தயாவதியும் அவளது 15 வயது மகனும் கத்தியாலும், வாளாலும் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் இருந்த அறை முழுவதும் இரத்த மயமாக இருந்தது.

ஒவ்வொரு நாளும் காலையில் வரும் பாண் விற்பவனிடம் தயாவதி பாணும் பனிசும் வாங்குவாள். பாண் அவருக்கு, பனிஸ் பாடசாலை செல்லும் மகனுக்கு.

அன்றைய தினம் பல முறை பெல் அடித்தும் பாண் வாங்க எவரும் வெளியே வரவில்லை. அன்று பாடசாலை லீவு நாளும் அல்ல. ஏன் என்று வீட்டுக்குள் நுழைந்த பாண் காரன்தான் தயாவதியும் அவளது மகனும் கொலை செய்யப்பட்டிருப்பதை முதலில் கண்டவன்.

அவன் அடுத்த வீட்டுக்காரருக்கு சொல்ல அடுத்த வீட்டுக்காரர்தான் பொலிஸுக்கு செய்தியை தொலைபேசி மூலம் சொல்லியிருக்கிறார்.

கொலை செய்தவர்களை தேடி பொலிஸார் அலைகின்றனர்.

கொலையை செய்ய வைத்தவர் யாராக இருக்கும்..?

## சாப்பாட்டை வீணடிப்பதில்... (10ஆம் பக்கத் தொடர்)

விஷயத்தை அறிந்துகொண்டு பொதுச்சொத்தை வீணாக்கிய குற்றத்துக்காக ஐம்பது மார்க் அபராதம் விதித்து ஒரு ரசீதை தந்திருக்கிறார். மௌனமாக அதை செலுத்திவிட்டு வெளியே வந்தார்க ளாம் அந்த நண்பர்கள். இது இணையத்தில் வந்த ஒரு செய்தி.

செல்வமும் அளவுக்கு அதிகமான விவசாய உற்பத்தியும் மிகுந்த ஜெர்மனியில் உணவை பொதுச்சொத்தாகக் கருதி, வீணடிப்பவர்களுக்கு தண்டனையும் விதிக்கிறார்கள் என்பது, நாம் உணவு கலாசாரத்தில் எவ்வளவோ முன்னேற வேண்டியிருக்கிறது என்பதைத்தானே காட்டுகிறது..!

இப்போதும் விருந்தாளிகளாக ஒரு வீட்டுக்கு சென்றால் அந்த வீட்டுக்காரர்கள் விதவிதமான பண்டங்களை தயார் செய்கிறார்கள்.

விருந்தாளிகள் சாப்பிட அமர்ந்ததும் குடும்பத்தினர் அவர்களை சுற்றிவர நின்றுகொண்டு பறிமாறிக்கொண்டே இருப்பார்கள். தொண்டை வரை நீங்கள் சாப்பிட்டாக வேண்டும். ஆசையாக சாப்பிட அமர்ந்த நீங்கள் ஆளைவிட்டால் போதும் என எழும்பிவிடுவீர்கள். ருசித்து சாப்பிடவே முடியாமல் போய்விடும். ஏனெனில் அவர்கள் திருப்தியடையும் வரை உங்களை விடமாட்டார்கள். இதை சாப்பாட்டு மேசை பயங்கரவாதம் என்றா அழைப்பது?

இப்போதும் கூட, இந்த விலைவாசியில், ஐந்து பேர் வருவதாக இருந்தால் இருந்து விட்டு போகட்டுமே என்று பத்துப்பேருக்கு சமைக்கும் வழக்கம் இருக்கத்தான் செய்கிறது. விருந்து என்றால் வீணடிக்க வேண்டும் என்பது தான் நமது எண்ணம், அதில் தான் பெருமை!

'தன்சல் 'என்றும் அன்னதானம் என்றும் வசதியானவர்களுக்கு உணவு படைத்து திருப்தி காணும் பழக்கத்தையும் நாம் கைவிட்டதாக இல்லையே..!

## கண்டி மன்னன் ராஜசிங்கன்... (03ஆம் பக்கத் தொடர்)

அப்போது அந்தக்கப்பலில் மன்னருடன் ஒரு ஆங்கில அதிகாரி யும் உடன் சென்றிருக்கிறார். அவர் பெயர் வில்லியம் கிரண்வில். இவர் மன்னருடன் கப்பலில் சென்ற அனுபவங்களை ஒரு புத்தகமாகவும் எழுதியிருக்கிறார்.

சென்னையை சென்றடைந்த மன்னன் பின்னர் வேலூர் கோட்டைக்கு அழைத்துச்செல்லப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கிறார். மன்னர் சிறை வைக்கப்பட்ட அந்தக் கட்டடத்தில் தான் தற்போதை வேலூர் மாவட்ட (ரிஜிஸ்டர் அலுவலகம்) பதிவாளர் திணைக்களம் செயற்பட்டு வருகிறது.


இந்தப் பதிவாளர் திணைக்களம் இரண்டு மாடிகளை கொண்டிருக்கிறது. அதில் கோப்புகள் வைக்கப்பட்டிருக்கும் களஞ்சிய அறைதான் அந்தக்காலத்தில் சிறைக்கூடமாக செயற்பட்டிருக்கிறது. அந்த அறையின் நீளம் 30 அடியா-கவும் அகலம் 20 அடியாகவும் காணப்படுகிறது.

அந்த அறையில் தான் பதினெட்டு ஆண்டுகளை மன்னன் கழித்திருக்கிறார். மன்னரின் சிறை வாசத்தின் போது அவருடன் மூன்று மனைவிமார் உடன் இருந்திருக்கிறார்கள். இலங்கையில் இருந்து கப்பலில் இந்தியாவுக்கு வரும்போது மன்னரின் ஒரு மனைவி கப்பலிலேயே இறந்து விட்டார். மன்னரின் சிறை வாழ்க்கையில் மன்னரின் மனைவி வெங்கட ரெங்கம்மாள் சிறையிலேயே மூன்று பிள்ளைகளை பெற்றெடுத்திருக்கிறார். பிறகு மன்னர் 1834 ஜனவரி 30 ஆம் திகதி அன்று தனது 53 வது வயதில் சிறையிலேயே மரணமாகி விட அவரின் இறுதிக்கிரியைகளை வேலூர் பாலாற்றங்கரையில் நடாத்தியிருக்கிறார்கள். பிறகு மன்னருக்கு அந்த இடத்தில் ஒரு கல்லறையை அமைத்திருக்கிறார்கள். மன்னரின் மரணத்திற்கு பிறகு அவரின் துணைவியரை ஆங்கிலேய அரசு விடுதலை செய்துவிட்டது. வேலூர் தோட்டப்பாலையத்தில் காணி பெற்று குடியமர்த்தியிருக்கிறார்கள். இது தவிர மன்னர் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து இலங்கை சுதந்திரத்திற்கு பின்னர் சில வருடங்கள் வரை மன்னர் குடும்பத்திற்கான மானியத்தொகை இங்கிருந்து முறையாக அனுப்பப்பட்டு வந்திருக்கிறது. அந்தக்காலத்தில் வேலூர் மாவட்டத்தில் அரசுக்கு வரி கட்டிய குடும்பங்களில் கண்டி மன்னரின் குடும்பமும் அடங்கும். பிறகு ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக இந்த ராஜகுடும்பத்தின் ராஜ யோகம் பறிபோய் வறுமையில் தள்ளாடத் தொடங்கியதோடு மன்னரின் வாரிசுகள் இந்தியாவின் மூலை முடுக்குகளுக்கு இடம்பெய்ந்தார்கள். இன்று மன்னரின் வாரிசாக விளங்கும் பிருத்விராஜன் வேலூர் ஸ்ரீநிவாசா தியேட்டரில் டிக்கட் கிழிக்கிறார். மற்றவர்கள் சென்னை, பெங்களுர், திருப்பதி உள்ளிட்ட பல இடங்களில் வசித்து வருகிறார்கள்.

**(இன்னும் வரும்)**

# பூநகரி - யாழ்ப்பாணத்தை இணைக்கும் சங்குப்பிட்டி பாலம்






- லோரன்ஸ் செல்வநாயகம் -

முப்பது வருடகால யுத்தத்தின் மிக அதிகமாகப் பாதிக் கப்பட்டவர்கள் வடக்கு மக்களே. துயரத்தின் எல்லைக்கே சென்றுவிட்ட மக்கள் தமது உடைமைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் உறவுகளையும் இழந்து எதிர்காலத்தை பற்றிய கேள்விக்குறியோடு வாழ்ந்தனர் என்றால் மிகையில்லை.

சொந்த மண்ணில் சுதந்திரமாக வாழ்ந்த இந்த மக்கள் இந்தளவு துயர வாழ்வை எதிர்பார்த்திருந்த மாட்டார்கள். இன்று வடக்கின் கல்விமான்கள் கூறுவதுபோல விதி விளையாடிவிட்டது என்றே கூற முடியும்.

விரும்பியோ, விரும்பாமலோ ஒரு யுத்தம் நடந்து முடிந்து விட்டது. 30 வருட காலத்தின் பின் அந்த மக்கள் பெருமூச்சு விடக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

வடக்கு கிழக்கு யுத்தத்துக்குப் பின்னரான அபிவிருத்திகள் நடைபெற்று வருகின்றன. பாதிப்புற்ற மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான செயற்பாடுகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் கால கட்டமிது.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும், நடப்பதை நல்லதாக சிந்திப்போம் என்ற உறுதியுடன் புது வாழ்வை ஆரம்பித்துள்ள வடக்கு மக்களின் இன்றைய தேவையெல்லாம் நிம்மதியும் வாழ்வதற்கான ஆதாரமும்தான்.

அந்த வகையில் விவசாயம், கமத்தொழில், வர்த்தகம், கைத்தொழில் என தம்மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயல்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

அண்மையில் அவசரகால சட்டத்தை முற்றாக நீக்கும் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, வடக்கின் அபிவிருத்திக்காக மட்டும் இதுவரை 2000 மில்லியின் டொலர்களை அரசாங்கம் செலவிட்டுள்ளதாக தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் என்ற அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வடக்கில் பாரிய பல அபிவிருத்தி திட்டங்கள் முன் எடுக்கப் பட்டுள்ளன. குறிப்பாக தம் மக்களின் வாழ்வாதாரமாக அமையக் கூடிய அடிப்படை தேவைகளுக்கு முக்கியத்துவ மளிக்கப்பட்டு வருகின்றது.

ஏ9 வீதி உட்பட பிரதான வீதிகள், பிரதேச பாதைகள், பாலங்கள், நீர்ப்பாசனக்குளங்கள், குடி நீர் திட்டங்கள் என புனரமைப்புப்பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பாரிய அபிவிருத்தித்திட்டங்களில் கொக்குவில் தொலைத்தொடர்பு கோபுரம், மன்னார் சங்குப் பிட்டிப்பாலம் என்பன குறிப்பிடத்தக்க அபிவிருத்தித்திட்டங்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வருவதை இப்பாலம் எளிமை யாக்கி இருக்கிறது. யாழ் விளையாட்டுப்பொருட்களை சீக்கிரமாகவெ தென் பகுதிக்கு எடுத்துவர இப்பாலம் உதவி வருகிறது. யாழ்ப்பாணத்துக்கான போக்கு வரத்தில் இது ஒரு பாய்ச்சல் முன்னேற்றம் என்றே குறிப்பிட வேண்டும். இவைவி ரண்டுமே வடக்கு மக்களின் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்பு படும் விடயங்களாகும்.

சங்குப்பிட்டிப்பாலம் வடக்கு மக்களின் உற்பத்திப்பொருட்களை சந்தைப்படுத்துவதில் பெரும் பங்களிப்பை வழங்கி வருகிறது. அத்துடன் கொழும்பு வருவதற்கான நேரத்தையும் பணத்தையும் மீதப்படுத்துவதாக இப்பாலம் அமைந்துள்ளது.

பூநகரி யாழ்ப்பாணத்தை இணைக்கும் கேரதீவு சங்குப்பிட்டி பாலம் சுமார்' பதினைந்து வருடங்களுக்குப்பின் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதன் மீள் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு பிரிட்டிஷ் அரசும் நிதியுதவியினை வழங்கியிருந்தது.



### காது குடைய வேண்டாம்

குளிக்கும்போது காதில் தண்ணீர் விட்டு குடையோ குடை என்று குடைந்து விட்டு பின்னர் டவலை வைத்து கூராக்கி அதை காதில் விட்டு விறுவிறு என்று சுழற்றுவீர்களானால் உடனே அதை விட்டு விடுங்கள். காது மிருதுவான சக்தி வாய்ந்த உறுப்பு. அது கேட்காமல் போகக் காரணம், நம் செயல்கள் தான்.



### காதில் பிரச்சினை என்றால்..

காதில் அழுக்கு சேர்ந்துவிட்டது, வலிக்கிறது, கேட்க முடியாத அளவுக்கு மெழுகு சேர்ந்துவிட்டது என்றெல்லாம் எண்ணி, எண்ணெய் விட்டு சரி செய்யலாம் என்று நினைப்பது தவறு. அதனால் பாதிப்பு இன்னும் அதிகமாக வாய்ப்புண்டு. காது பிரச்சினை என்றால் டாக்டரிடம் காட்டி சரி செய்வது தான் சரியான வழி.





சைவத்திருமுறை பயிற்சி மையக் கொழும்பு கிளையின் ஓராண்டு பூர்த்தி விழா மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக கலந்துகொண்ட சீர்வளர் சீர்குழு மஹா சந்நிதான சுவாமிகள், ஆதின குரு முதல்வர் அருள் திரு நமசிவாய மூர்த்திகளின் திருவுருவப்படமொன்றை அகில இலங்கை குருமார் ஒன்றியத்தலைவர் கே.வைதீஸ்வரக்குருக்களிடம் வழங்குவதையும், அருகில் வைபவத்தில் கலந்து கொண்ட சிலரையும் காணலாம்.
படப்பிடிப்பு : ஏ.மதுரைவீரன்



மாவை நித்தியானந்தனின் சிறுவர்களுக்கான ஐந்து ஆக்கங்களின் வெளியீட்டு விழா மற்றும் சிறுவர் அரங்கு கொழும்பு வெள்ளவத்தை தேசிய கலை இலக்கிய பேரவை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. முதல் பிரதிகளை நூலாசிரியரிடமிருந்து (வலது) இலக்கிய பேரவை பொதுச்செயலாளர் சோ.தேவராஜா பெற்றுக்கொண்டார்.
(படப்பிடிப்பு : ஏ.மதுரைவீரன்)





# ஒடுக்கப்பட்டவர்கள் அசுத்தமானவர்களா?

சுத்தமாக இருக்க விரும்பாத மனிதர்கள் யாராவது இருக்கின்றார்களா? மன நோயாளர்களாக இருக்கின்றவர்களுக்குத்தான் தங்கள் சுத்தம் பற்றி எவ்விதமான அக்கறையுமிருக்காது. சில மனநோயாளர்கள் இந்தப்பொது விதிக்கு எதிர்மாறானவர்கள். ஆனால் எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் சராசரி எல்லாருடைய மனங்களிலும் இருக்கத்தான் செய்கிறது. அதே சமயம் எல்லாராலும் சுத்தமாக வாழ முடிகின்றதா? என்றால் அதுதான் இல்லை. அப்படி வாழ முடியாத மக்களை சுத்தமாக வாழ வைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தமிழிற் சில பழமொழிகள் தோன்றி இருக்கின்றன.

மனிதனுக்கு மிக அத்தியாவசியமானவை உணவு, உடை, உறையுள் எனக் காலங்காலமாக சொல்லிக்கொண்டு வருகின்றார்கள். இன்று இன்னும் பல அத்தியாவசியங்கள் உண்டென அறியப்பட்டுள்ளது. முன்பு குறிப்பிடப்பட்ட மூன்று அத்தியாவசியங்களில் உணவு, உடை என்பன முக்கியத்துவம் வாய்ந்தவை.

கூழானாலும் குளித்துக்குடி என்று தமிழில் ஒரு பழமொழி உண்டு. இது உணவோடும் சுத்தத்துடனும் சம்பந்தப்பட்ட ஒரு பழமொழி. கூழ் என்பது இன்றைய காலகட்டத்தில் ஆடம்பரமான மிகவும் பெறுமதி வாய்ந்த ஓர் உணவுப்பண்டம். ஒடியற் கூழ் பலராலும் இரசித்து ருசித்துக்குடிக்கப்படுகின்ற ஒரு பண்டம். அதனை மிக அருமையாகவே இன்று பெற்றுக்கொள்ள முடிகின்றது. அதன் விலையும் இன்று அதிகம்.

முற்காலத்தில் கூழின் நிலைமை இப்படி இருக்கவில்லை. அது மிகவும் மலிவான ஒரு பண்டமாக இருந்து வந்திருக்கிறது. ஏழை எளி மக்களின் வயிற்றுப்பசி போக்கும் பிரதான உணவாக இருந்திருக்கின்றது. ஏழை எளிய மக்கள் நெல்லரிசிச் சோற்றினைக் கண்களால் காண்பதே மிக அபூர்வம். நான் சிறுவனாக இருந்த காலத்தில் எனது மூத்தவர்கள் தங்களுக்கு மூத்த தலைமுறையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை சொல்லிச்சிரிப்பார்கள். நெல்லரிசிச்சோற்றினை கண்களால் காண்பதே மிக அபூர்வம். நான் சிறுவனாக இருந்த காலத்தில் எனது மூத்தவர்கள் தங்களுக்கு மூத்த தலைமுறையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை சொல்லிச்சிரிப்பார்கள்.

நெல்லரிசிச்சோறு உண்டு வளராத ஒரு சிறுவன் வீட்டில் ஒரு தினம் நெல்லரிசிச்சோறு ஆக்கினார்களாம். அதனைக்கண்டுகொண்ட அந்தச்சிறுவன் ''இன்றைக்கு எங்கட வீட்டிலே நெல்லரிசிச்சோறு.. தானக்கத்தோனக்க

இன்றைக்கு எங்கட வீட்டிலே நெல்லரிசிச்சோறு.. தானக்கத்தோனக்க..'' என இராகம் இழுத்துப்பாடி ஆடிக்கொண்டு ஊரெல்லாம்.. ஓடியாடிச்சொல்லித்திரிந்தானாம். இப்படி வாழ்ந்த மக்கள் மத்தியில் கூழ் பிரதான உணவாக இடம்பிடித்திருந்தது விந்தையல்ல..!

கோதுமைப்பாணுக்கும் ஒரு காலத்தில் இத்தகைய மதிப்புத்தான் இருந்து வந்தது. ஏழைகளின் தோழன் என்ற பெயரை பாண் பெற்றிருந்தது. இன்று அப்படிச்சொல்லிக் கொள்ள இயலாது. நிலைமை மாறிவிட்டது.

கூழ் குடித்து வாழும் ஏழையாக இருந்தாலும் சுத்தமாக என்பது ஏழ்மையின் குறியீடாகவே எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. இதன் இன்னொரு பகுதியான பழமொழி ''கந்தையானாலும் கசக்கிக்கட்டு'' என்பதாகும். முதல் பகுதியில் ஏழைகளின் உணவு பற்றிக்கூறப்பெற்றதற்கு அடுத்தபடியாக உடை பற்றி எடுத்துச்சொல்லப்படுகிறது. கிழிந்த உடையாக இருப்பினும், அழுக்கு நீங்க அதனை தோய்த்து உலர்த்துக்கட்ட வேண்டும் என்கின்றது இந்தப்பழமொழி. கந்தைச்சீலை இங்கு வறுமையின் குறியீடுதான். இதே போல சுத்தம் சுகம் தரும் எனக்கூறியுள்ளார்கள்.

வறியவர்களான ஏழை மக்கள் சமுதாய வாழ்வு நிலையின் வெளிப்பாடாகவே இருக்க வேண்டும் என்பதை முன்னரே பார்த்தோம். இன்று ஏழை மக்களாக இருப்பவர்கள் யாரென்பதையும் நுனித்து நோக்குதல் வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் சகல பகுதிகளை சேர்ந்தவர்களும் ஏழைகளாக இருக்கிறார்கள் எனில் எல்லாப்பகுதியினருக்கும் இந்தப்பழமொழிகள் பொருத்தப்பாடுடையனவே. ஆனால் நமது சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் ஆதிக்க சக்திகளினுள் ஒடுக்குதலுக்கு ஆளாகி இருந்திருக்கின்றார்கள். அதனால் பொருளாதாரத்திலும் கல்வியிலும் ஒரு காலத்தில் இவர்கள் பின் தங்கி இருக்க வேண்டியதாயிற்று. ஆனால் இன்று நிலைமை அவ்வாறில்லை. இந்த அடிப்படைகளை விளங்கிக்கொள்ளாத ஒருவர், கடந்த ஜனவரி மாதம் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச எழுத்தாளர் மாநாட்டில் 'ஒடுக்கப்பட்ட மக்கள் எல்லாரும் அழுக்கானவர்கள்' எனச் சிறுபிள்ளைத்தனமாக சொல்லி தனது மேதாவிலாசத்தை வெளிக்காட்டிக்கொண்டார். இத்தனைக்கும் அவர் இனத்தால் ஒரு தமிழரல்லர். அப்படியான ஒருவர் எவ்வளவு நிதானமாக இன்னொரு இனத்தவர் பற்றி தனது கருத்தை வெளியிட வேண்டும் என்ற ஆரம்ப அறிவு கூட இல்லாதவராக இருந்தது துரதிஷ்டந்தான். ஒருவேளை தனக்கு மேலே இருப்பவர்களை திருப்திபடுத்தி பதவி உயர்வினைத்தேடுவது நோக்கமாக இருந்திருந்தால் இக்கூற்று அந்த வாய்ப்பினுக்கு வழி சமைத்து கொடுத்திருக்கும்.

அந்தக்கல்விமான் 'கிள்ளுக்கீரைகளாகக்கருதும் ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் தலைவருடன் தொடர்புபட்ட ஒரு சம்பவத்தை இனி நோக்குவோம். அவர் கருத்துப்படி அந்தத்தலைவரும் அழுக்கானவராக சுத்தமில்லாத ஒருவராக இருந்திருக்க வேண்டும். அவரும் அப்படித்தான் இருந்தாரா என்பதை பார்த்துவிடுவோம்.



தெணியான்

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் ஏகத்தலைவராக விளங்கியவர் எம்.ஸி.சுப்பிரமணியம். இவர் இலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சியின் வடப்பிரதேச முக்கியஸ்தர்களுள் ஒருவர். ஒடுக்கப்பட்ட மக்களின் பலம் பொருந்திய அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபை தலைவராக இருந்தவர். எப்பொழுதும் மிகத்தூய வெள்ளை நஸனல், கழுத்தில் சிவப்பு, அல்லது கறுப்பு நிறத்தில் ஒரு மப்ளர். தலையில் தொப்பி, கறுப்புக்கண்ணாடி எனப்பளிச்சென தோன்றுபவர். நின்றபடி பேசும்பொழுது கண்களை மூடிக்கொண்டு ஒரு காலை அசைத்த வண்ணம் இருப்பார். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஆட்சியில் இருந்த காலத்தில் இவருக்கு மிகுந்த அரசியல் செல்வாக்கு இருந்தது. அந்த செல்வாக்கினை பயன்படுத்தி ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் முன்னேற்றத்துக்கென அரிய சேவைகள் பலவற்றை செய்தார். அவர் சமூகத்துக்கு புரிந்து வந்த சேவைகளை கௌரவித்து 1970 இல் நியமன உறுப்பினராக நியமனம் பெற்று பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தார்.

எனது மாணவப்பருவம் முதல் அவருடன் எனக்கு நெருக்கமான உறவு இருந்தது. அவர் பாராளுமன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்னர் கொழும்பில் வைத்து நானும் எனது நண்பர் ஒருவரும் அவரை ஒரு தடவை சந்தித்தோம்.

அக்காலத்தில் எனது நண்பரும் நானும் ஆசிரிய கலாசாலை கல்வியை முடித்துக்கொண்டு நண்பர் பதுளை சரஸ்வதி வித்தியாலயத்திலும் நான் பண்டாரவளை அட்டம்பிட்டிய சிங்கள மகா வித்தியாலயத்தின் தமிழ் பகுதியிலும் பணியாற்றிக் கொண்டிருந்தோம். ஆசிரியர்கள் வெளிமாவட்டங்களுக்கு மாற்றலாகிப் போய்விட்டால், அன்றே அவர்களை ஒரு நோய் வந்து பிடித்துவிடும்.

சொந்த ஊரோடு போய்ச்சேர்ந்துவிட்டால் தோட்டம் துரவு, மாடு கன்றுகளை பார்த்துக்கொள்ளலாம். மேலதிய வருமானம் தரும் வேலையாக ஆசிரியத் தொழிலை வைத்துக்கொள்ளலாம் என்பது தான் அவர்கள் எண்ணம். எனது நண்பருக்கும் தோட்டம் துரவு இருந்தது. எனக்கு அப்படி ஒன்றுமில்லை. ஆனால் மாற்றம் பெற்றுச்செல்ல வேண்டுமென்ற எண்ணம் ஆரம்பத்தில் என் மனதில் எழவில்லை. ஆனால் பண்டாரவளைக்கு நான் வந்து சேர்ந்த மறு ஆண்டு (1965) எனது தந்தையார் காலமானார். எனக்குக்குடும்பப்பாசம், பொறுப்பு அதிகமானது. மாற்றலாகி ஊரொடு சென்றுவிட்டால் உடன் பிறந்தவர்களை கவனித்துக்கொள்ளலாமென்று கருதினேன்.

மாற்றம் பெற்று ஊரோடு வந்து விடும் நோக்கத்துடன் நண்பரும் நானும் எம்.ஸி.சுப்பிரமணியத்தை அணுகினோம்.

குறித்த ஒரு தினத்தில் கல்வி மந்திரியை சந்திப்பதற்காக எங்கள் இருவரையும் கொழும்பு வந்து சேருமாறு எம்.ஸி யிடம் இருந்து ஒரு தினம் எங்களுக்கு அறிவித்தல் வந்தது. இவரும் சந்தித்து ஒன்றாகக் கூடி கொழும்பு போய்ச்சேர்ந்தோம்.

எம்.ஸி.எங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு கல்வி அமைச்சுக்குச்சென்றார்.

கல்வியமைச்சர் எம்.ஸி யை நன்றாக வரவேற்று உபசரித்தார். நெல்லுக்கிறைத்த நீர் வாய்கால் வழியோடி புல்லுக்கும் பொசிந்த கதையாக அந்த வரவேற்பு எங்களுக்கும் கிடைத்தது.

இன்னொரு உண்மையையும் இங்கு சொல்லியாக வேண்டும். மந்திரி நல்ல பண்புள்ள சிறந்த மனிதராகவும் இருந்தார் என்பது எனது கணிப்பு.

மந்திரியிடம் எடுத்துச்சொல்ல வேண்டிய எங்கள் விடயங்களை தெளிவாக சொல்லி முடித்துவிட்டு மூவரும் அமைச்சை விட்டு வெளியே வந்தோம்.

அப்பொழுது மதிய வேளை. பசி வயிற்றைக்கிள்ள ஆரம்பித்துவிட்டது.

களைக்க வைக்கும் கொழும்பு வெயில். மூவரும் ஒரு டெக்ஸியில் ஏறி ஒரு ஹோட்டலில் போய் இறங்கினோம்.

என்ன சாப்பாடு சாப்பிடுவது? சைவமா! அசைவமா! எங்களுக்குள் எழுந்த ஒரு கேள்வி.

''என்ன சாப்பிடுவோம்?'' அவரிடமே கேட்டோம். ஒரு நிமிடம் கண்களை மூடி யோசிக்கின்றார். பின்னர் திடீரென நினைத்துக்கொண்டு ''வாங்கோ.. இன்டைக்கு நண்டு சாப்பிடுவோம்.. நண்டு சாப்பிட்டு கன காலம்..'' சொல்லிக்கொண்டு ஹோட்டலுக்குள் நுழைகின்றார். மூவரும் உள்ளே சென்று கைகளை நன்றாகக் கழுவிய பின்னர் ஒரு மேசையைச் சுற்றி அமர்ந்து கொள்ளுகின்றோம். எம்.ஸி சோற்றுக்கு, நண்டுக்கறியோடு ஓடர் கொடுக்கின்றார்.

எம்.ஸியின் நடவடிக்கை மூலம் அவருக்கு வழக்கமான பழக்கமான சாப்பாட்டுக்கடை அது என்பதை நான் உணர்ந்துகொள்கின்றேன்.

எங்கள் மூவருக்கும் கோப்பைகளில் சோறு தாராளமான நண்டுக்கறியுடன் பரிமாறப்படுகிறது. கடமுடாச்சத்தத்துடன் மூவரும் ருசித்து சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு தேவையான உணவில் ஒரு முக்காற்பங்கை தின்று முடித்திருப்போம்.

அப்பொழுது எம்.ஸி 'சீ.. சீ...' என்று சொல்லிக்கொண்டு திடீரெனக்கதிரையை விட்டு எழுகின்றார். நாங்கள் இருவரும் திகைத்துப்போகின்றோம்.

கதிரையை விட்டு விருட்டென்று எழுந்த எம்.ஸி, இடது கையினால் மெல்லப்பிடித்து தமது தூய வெள்ளை நிறமான நஸனலை உதறுகின்றார். எங்களுக்கு அப்பொழுதுதான் புரிகிறது. நடந்தது வேறொன்றுமல்ல. அவர் கடித்து வைத்த நண்டின் கொடுக்கொன்று தெறித்து அவர் நஷனல் மீது விழுந்து விட்டது.

நண்பரும் நானும் ஆளை ஆள் பார்த்தது மெல்லச்சிரித்துக் கொள்கின்றோம்.

எம்.ஸிக்கு முகம் கறுத்துவிட்டது. இனிமேல் உணவில் அவர் மனம் செல்லாது என்பது எங்களுக்கு விளங்குகிறது. நாங்கள் இருவரும் சாப்பிட்டு முடிக்கும் வரை நஸனலில் பட்ட கறையை இடையிடையே பார்த்தவண்ணம் தானும் சாப்பிடுவது போல அவர் பாவனை பண்ணிக்கொண்டிருக்கின்றார்.

நாங்கள் இருவரும் அதை விளங்கிக்கொண்டு விரைவாக உண்டு முடிக்கின்றோம். மூவரும் எழுந்து சென்று பைப்பில் கைகளை நன்றாக கழுவி முடிக்கின்றோம்.

பின்னர் எம்.ஸி அந்த நஸனலைப்பிடித்து சிறிது மேலே உயர்த்திய வண்ணம், பைப்பில் தண்ணீரை ஏந்தி விடுமாறு நண்பருக்கு கூறுகின்றனர்.

நண்பர் நீரை ஏந்தி ஏந்தி நண்டுக்கறி விழுந்து கறை படிந்த இடத்தில் விட்டுக் கொண்டிருக்கின்றார். எம்.ஸி கசக்கி கசக்கி அந்தக்கறை போகும் வரை தேய்த்துக்கொண்டிருக்கின்றார்.

பின்னர் சாப்பாட்டுக்கடையை விட்டு மூவரும் வெளியே வருகின்றோம்.

அதனுள்ளே போகும் சமயத்தில் எம்.ஸி முகத்தில் இருந்த ஆனந்தம் இப்பொழுது இல்லாமற்போயிற்று.

அவர் கவனம் முழுவதும் கறை படிந்த நஸனல் மீதே இடையிடையே திரும்பிக்கொண்டிருந்தது.

ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகத்தின் தலைவர் எம்.ஸி என சுருக்கமாக அழைக்கப்பட்டு வந்த எம்.ஸி.சுப்பிரமணியம் இப்படித்தான் வாழ்ந்தார். கறைபடியாத வாழ்க்கை. இதுதான் எம்.ஸி.

# தோசைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு ரகம்



தமிழகம், ஆந்திரா, கர்நாடகம் மற்றும் ஈழத் தமிழ் மக்களிடையே மிகுந்த ஆதிக்கம் செலுத்தும் உணவுப் பண்டமே தோசை. இதன் பிறப்பிடம் குறித்து பல்வேறு கருத்துகள் உண்டு. பிரபல உணவு ஆராய்ச்சியாளர் பட் சேப்மன், 'தோசையின் பிறப்பிடம் கர்நாடகாவில் உள்ள உடுப்பி நகரமே' என்கிறார். ஆனால் கே.பி.ஆச்சாரியா போன்ற ஆய்வாளர்கள் சங்க இலக்கியங்களிலேயே தோசை என்ற பெயர் இடம்பெற்றிருப்பதை சுட்டிக்காட்டி 'தமிழகமே அதன் தோற்றுவாய்' என்கிறார்கள்.

பிறப்பிடம் எதுவாக இருந்தாலும் தோசையில் மட்டும் சுமார் 30 வகையான தோசை ரகங்கள் இப்போது புழக்கத்தில் இருக்கின்றன. கர்நாடகாவின் உத்திர கன்னடா, தட்சிண கன்னடா மாவட்டங்களில் 'நீர் தோசை' பிரபலம். இங்கே 'பருத்தித்துறை தோசை' பிரபலம். உளுந்து, அரிசி, கோதுமை மாவுகளை தென்னங்கள் ஊற்றி புளிக்கவைத்து ஊற்றித் தரும் இந்த தோசையை சாப்பிடுவதற்காகவே பிற பகுதிகளில் இருந்து பருத்தித்துறைக்கு படகேறி வருபவர்கள் உண்டாம். எனினும் அனைவரும் விரும்பி உண்ணுவது மசால் தோசையையே. சூப்பராக ஊற்றப்பட்ட மசால் தோசை, மனதையும் வயிற்றையும் நிறைக்கும் என்பது அனைத்து தோசை பிரியர்களும் அறிந்த விஷயம்.

வடசென்னையில் உள்ள வண்ணாரப்பேட்டைவாசிகளை கேட்டால் 'டயமன் தோசைக்கு நிகரில்லை...' என்பார்கள். இப்பகுதியில் எந்த உணவகத்தில் அமர்ந்தாலும் 'டயமன் தோசை' ஒரு பிரபலமான பெயராம். வடிவத்தில் மட்டுமல்லாது, சுவையிலும், சேர்மானங்களிலும் வேறுபடும் இந்த தோசையை மணியக்காரன் செட்டியார் ரோட்டில் உள்ள 'நியு துர்கா பவனில்' சாப்பிடுவது நல்ல அனுபவமாம். கேரட்டும் பீட்ரூட்டும் செவ்வண்ணத்தை லேசாகப் படரவிட, மசாலா பொடியின் மணம் நாசியைத் தழுவ, சீராக மடித்து பரிமாறப்படும் இந்த தோசையின் வடிவமும் சுவையும் வித்தியாசமாகத் தான் இருக்கிறது என்கிறார்கள் தோசை பிரியர்கள்.

## டயமன் தோசை தயாரிப்பது எப்படி?

முதலில் கேரட், பீட்ரூட்டை மென்மையாக சீவி அதோடு பீன்ஸ், பட்டாணியை சேர்த்து குழைய வேகவைக்க வேண்டும். இஞ்சி, பூண்டு, முந்திரி, தேங்காயை அரைத்து, வெங்காயம், தக்காளி போட்டுத் தாளித்து வேகவைத்த காய்கறிகளைக் கொட்டி நிறைய தண்ணீர் ஊற்றிக் கிளறி நீர்பதத்தில் இறக்க வேண்டும்.

தோசையை ஊற்றி அதன்மேல் தாளித்த காய்கறிக் கலவையை ஊற்றி மேலே கொஞ்சம் மசாலா பொடித் தூவி சற்று வெந்தும் டைமன் வடிவில் மடித்தால் டைமன் தோசை ரெடி.

# யார் இந்த சங்கிலி மன்னன்..?

நல்லூரை இராசதானியாகக்கொண்டமைந்த யாழ்ப்பாண இராச்சியத்தை இரு வேறு காலப்பகுதிகளில் சங்கிலி என்ற பெயரில் இரு மன்னர்கள் ஆட்சி புரிந்திருக்கிறார்கள் என்ற தகவல் வரலாற்றில் சொல்லப்பட்டுள்ளது. சிங்கை பரராச சேகரன் என்ற மன்னனின் மகனான சங்கிலி என்பவன் சங்கிலி செகராச சேகரன் என்ற பெயருடன் கி.பி.1517 இல் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்தான்.



இவன்போர்த்துக்கேயரை கடைசி வரை எதிர்த்த மன்னன் என்ற பெருமைக்குரியவனாக தமிழ் மக்களால் மதித்துப்போற்றப்பட்டவன். சரித்திர நாயகனாக இன்றும் பலராலும் பேசப்படுகிறான். இந்தப்பெருமையின் சின்னமாகவே இவனது சிலை நல்லூர் முத்திரை சந்தியில் காட்சி தருகிறது. கடந்த காலத்தில் நிலவிய போர்க்காலச் சூழ்நிலைகளினால் பாதிப்படைந்த இந்த சங்கிலி மன்னன் சிலை யாழ்.மாநகர சபையினால் புனரமைப்பு செய்யப்பட்டு, கடந்த ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதியன்று (முன்பு சிலையிருந்த அதேயிடத்திலேயே) திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

பிரபல எழுத்தாளரும், புவியியல் மற்றும் வரலாற்று ஆய்வு நூல்களின்' ஆசிரியருமான க.குணராசா (செங்கை ஆழியான்) சங்கிலி மன்னன் மற்றும் யாழ்ப்பாண இராச்சியம் பற்றி சுருக்கமாக இவ்வாறு சொல்கிறார்:

''கி.பி 1478 இல் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட சிங்கைப்பரராசசேகரன் என்பவனுக்கு இராசலட்சுமி அம்மாள், வள்ளியம்மை என்ற இரு மனைவியரும், மங்கத்தம்மாள் என்ற ஆசைநாயகியும் இருந்தனர். இராசலட்சுமி அம்மாளின் பிள்ளைகளான சிங்கவாகு, பண்டாரம் ஆகிய இருவரும் பட்டத்துக்குரியவர்களாக வரவேண்டியவர்கள். இரண்டாவது மனைவியான வள்ளியம்மைக்கு பர நிருபசிங்கன் உட்பட மூன்று ஆண் பிள்ளைகளும், ஒரு பெண்பிள்ளையும், ஆசை நாயகி மங்கத்தம்மாளுக்கு சங்கிலி என்ற பெயரில் ஒரு ஆண் பிள்ளையும், இன்னொரு பெண் பிள்ளையும் இருந்தனர்.

சங்கிலி, தானே அரசாள வேண்டும் என்பதில் பேரார்வம் கொண்டிருந்தமையால், பட்டத்துக்குரியவர்களான தனது மூத்த சகோதரர்கள் இருவரையும் கொலை செய்து 1517 இல் யாழ்ப்பாண அரசை கைப்பற்றிக்கொண்டான். இவன் 1564 வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி புரிந்துள்ளான். இலங்கையில் கால் பதித்த போர்த்துக்கெயரை யாழ்ப்பாண இராச்சியத்துக்குள் பிரவேசிக்காதவகையில் அவர்களை எதிர்த்துப்போராடிய வீரனாக சங்கிலி இருந்துள்ளான். இதன்போது 3500க்கும் மேற்பட்ட போர்த்துக்கேய வீரார்களை கொன்றொழித்துள்ளான். மன்னாரில் கிறிஸ்தவ குருவையும் கொலை செய்தவன். இவன் ஒரு வீர சைவன்.

சங்கிலிக்குப்பின்னர் இவனது மூத்த மகன் புவிராச பண்டாரன் ஆட்சியில் அமர்ந்தான். இவனைத் தொடர்ந்து காசி நயினார், பெரிய பிள்ளை செகராசசேகரன், புவிராசபண்டாரம், பரராச சேகரன், எதிர்மன்னசிங்க குமரன் ஆகியோருக்கு பின் 1616 இல் சங்கிலி குமரன் செகராசசேகரன் என்பவன் ஆட்சியில் அமர்ந்தான். இவனை இரண்டாவது சங்கிலி என்றும் சொல்வதுண்டு. நான்கு வருடங்களின் பின்னர் 1620ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரின் இறுதிப்படையெடுப்பினால் யாழ்ப்பாண இராச்சியம் அவர்களது வசமானது'' என்கிறார் கலாநிதி க.குணராசா.

யாழ்.மாநகர சபையின் வெள்ளிவிழாவையொட்டி, அப்போது மாநகர முதல்வராகவிருந்த அல்பிரட் துரையப்பாவின் ஏற்பாட்டில் இந்தச் சிலை வடிவமைக்கப்பட்டு 1974 நவம்பர் 23 ஆம் திகதியன்று திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. பின்னர் சிலையில் ஏற்பட்ட பழுது காரணமாக 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சீர் செய்யப்பட்டது. இதன் பின், போர்க்கால சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட இந்த சங்கிலி மன்னன் சிலை, இந்திய சிற்பாசிரியர் புருஷோத்மன் தலைமையிலான சிற்பக்கலைஞர்களின் கைவண்ணத்தில் மீள் உருவாக்கம் பெற்று கடந்த ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதியன்று திரைநீக்கம் செய்யப்பட்டது.

**அ.கனகசூரியர்**

# உடப்பூர் தீ மிதிப்பு விழா



இறைவனின் வழித்துணையுடன் சுட்டெரிக்கும் தணலின் மீது இறைவனின் நாமத்தை உச்சரித்தபடியே நடந்துசெல்வது, ஒரு சமயத்தில் உலகின் பல பாகங்களிலும் வழக்கில் இருந்து வந்திருக்கிறது. எனினும் தீ மிதிப்பதை இன்றும் பக்தியுடன் பரவலாகக் கைகொண்டு வருவது இந்துப்பெருமக்களே. இந்தியாவிலும் இலங்கையிலும் கோவில் திருவிழாக்களின்போது தீ மிதிப்பை ஒரு உற்சவ நிகழ்வாக நடத்தி வருகிறார்கள். இலங்கையில் கதிர்காமம், உடப்பு, பாண்டிருப்பு, முன்னேஸ்வரம் ஆகிய திருப்பதிகளில் நடைபெறும் தீமிதிப்பு சிறப்பானது. இதே சமயம் பரவலாக பல இந்து ஆலயங்களிலும் தீ மிதிப்பு நடைபெற்று வருகிறது. திரௌபதையம்மன் ஆலயங்களான உடப்பூர் (பார்த்தசாரதி சமேத ருக்மணி சத்தியபாமா) ஆலயத்திலும், முந்தல் ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயத்திலும் தீ மிதிப்பு நடைபெறுகிறது. பாண்டிருப்பு கிராமத்து தீ மிதிப்பு 'தீப்பள்ளம் இறங்குதல்' என அழைக்கப்படுகிறது.


புத்தளத்தில் திரௌபதையம்மன் ஆலயம் இருந்ததாகவும் அங்கு தீ மிதிப்பு விழா நடைபெற்று வந்துள்ளமைக்கான பல ஆதாரங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. புத்தளம் நகரை அண்மித்துள்ள சேனைக்குடியிருப்பு என்ற இடத்தில் 'பத்தினி அம்மன்' என்ற பெயரில் (உண்மையில் அது திரௌபதையம்மன்) தீ மிதிப்பு விழா நடைபெற்று வருகிறது.

உடப்பூர் ஆலய வரலாற்றை ஆராயும்போது முதன் முதலாக இங்கு வாழ்ந்த சைவர்கள் மீனாட்சி அம்மன் கோவில் கட்டி வழிபட்டு வந்ததை அறிய முடிகிறது. அந்நியர் வருகையின் பின்னர் இக்கோவில் கவனிப்பாறற்றுப்போனது.

பின்னர் இந்த ஆலயத்தை புனரமைக்க நொண்டிப்பூசாரி என்பவரின் உதவியுடன் காளிமுத்து பெரியார் திரௌபதையம்மன் ஆலயத்தை புதுப்பித்துக்கட்டியுள்ளார். அன்று முதல் இன்று வரை ஆணி மாதம் தோறும் திரௌபதையம்மனுக்கு இவ்வூர் மக்கள் விழாவெடுத்து வருகின்றனர்.

இந்த விழா மகாபாரதத்தை அடிப்படையாகக்கொண்டு நடைபெற்று வருகிறது. விழா ஆரம்பத்திலிருந்து திரௌபதையாக தன்னைப் பாவனை செய்யும் பூசகரே கரகம் பாலிப்பார். வாதில் வென்று திரௌபதை தனது சபதத்தை முடித்த பின்னரேயே தீ மிதிப்பு விழா நடைபெறும்.

இங்கே உடப்பூர் தீ மிதிப்பு விழா புகைப்படங்களைக் காணலாம்.




எடுத்து உதவியவர்


**ஏ.கே.விஜயபாலன்**

# விந்தை விநோதம் விசித்திரம்

விசித்திர வீரியன்



பஞ்சுப்பொதி போலத்தோன்றும் இது என்ன தெரியுமா? ரஷ்யாவின் குரில் தீவுக்கூட்டத்தின் மதுவா தீவின் எரிமலை குமுறத் தொடங்கியபோது பெருமளவிலாள நீராவியும் எரிசாம்பலும் விண்ணில் பரவத் தொடங்கியது. இக்காட்சியை சர்வதேச விண்வெளி நிலையம் படம்பிடித்தபோது சிக்கிய படம் இது. பஞ்சு மூட்டையாகத் தெரிவது நீராவி. ஒட்டிக்கொண்டிருப்பது எரிமலைச்சாம்பல்.



செய்வதையும் செய்துவிட்டு பெரிதாக சோகம் காட்டுவதை முதலைக்கண்ணீர் என்று நாம் அழைக்கின்றோம். முதலை ஒரு மிருகத்தை அடித்துக்கொன்றுவிட்டு அதை விழுங்குவதற்கு முன்னர் கண்ணீர் வடிக்குமாம். முதலைகள் தன் உணவை கடித்து விழுங்குவதில்லை. மிருகத்தின் உடலை கிழித்துப்போட்டு அப்படியே விழுங்கும். அதன் கண்களை ஈரமாக வைத்திருக்க உதவும் கண்ணீர்ப்பைகள் அதன் கழுத்துப்புகுதியிலேயே அமைந்துள்ளன. முதலை தன் வாயை அகலத்திறந்து மூடும்போது கண்ணீர்ப்பைகள் நசுங்க, கண்களில் கண்ணீர் சுரக்கும். இது தான் முதலைக் கண்ணீர்.

பாலைவனக்கப்பல் என அழைக்கப்படும் ஒட்டகங்கள் கிடைக்கும்போது வயிறு நிறைய தண்ணீர் அருந்திவிட்டு அதை தன் திமிலில் சேகரித்து வைக்கும் எனவும் தண்ணீர் கிடைக்காத சமயத்தில் அதைப்பயன்படுத்தும் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் திமில் என்பது உண்மையில் வெறும் கொழுப்புக்கட்டி மட்டுமே. தண்ணீர் பைகள் அங்கே கிடையாது. வயிற்றிலும், சிறுநீரகத்திலம் தான் தண்ணீர் இருக்கும். ஆனால் ஒட்டகம் எப்படி பாலைவன உஷ்ணத்துக்கு ஈடுகொடுத்து வருகிறது? இதற்கு காரணம் முட்டை வடிவிலான அதன் சிவப்பு இரத்த அணுக்கள் தான் என்பது இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒட்டக உடல் தண்ணீரை சிக்கனமாகவே பயன்படுத்துகிறது. அதன் சிறுநீர் அதிக நீர்த்தன்மை கொண்டதாக அல்லாமல் கெட்டியாக இருக்கும். அதன் சாணமும் கட்டியாக இருக்கும். உடனடியாகவே எரிக்கப் பயன்படுத்தலாமாம்.



தரையில் வாழும் மிருகங்களிலேயே அளவில் பெரிய மூளை கொண்ட மிருகமான யானையில் ஞாபக சக்தியும் பெரிது. தனது யானைக்கூட்டத்தை நன்றாகவே யானைகள் நினைவில் வைத்திருக்கும். ஒரு யானைக்கூட்டம் எண்ணிக்கையில் அதிகரித்து செல்லும்போது கூட்டத்தின் தலைவனின் மூத்த மகள், கூட்டத்தில் உள்ள சில யானை-களை அழைத்துக்கொண்டு தனிக்கூட்டமொன்றை உருவாக்கும். ஆனாலும் இந்த யானைகள் தமது தாய்க்கூட்டத்தை ஒரு போதும் மறப்பதில்லை. இதை ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர். இவ்வாறு பிரிந்து சென்ற மகள் யானை 27 ஆண்டுகளின் பின்னர் தன் பழைய தலைவனை (அப்பாவை) சந்தித்தபோது தமது நட்புறவை வெளிப்படுத்திக்கொண்டதை தான் கண்டதாக ஒரு ஆய்வாளர் தெரிவித்திருக்கிறார்.



கடந்த ஜனவரி மாதம் 18 ஆம் திகதி அமெரிக்காவின் வெர்ஜினியா மாநிலத்தில் தனது அலுவலகத்தில் மருத்துவர் பிராங்கீ சியாம்பீ அமர்ந்திருக்கிறார். அது ஒரு மத்தியான வேளை. அப்போது ஏதோ ஒன்று கூரையை பொத்துக்கொண்டு பெருத்த ஓசையுடன் அடுத்த அறைக்குள் விழுந்த சத்தம் கேட்டது. அவர் ஓடிச்சென்று அறைக்கதவை திறந்தபோது கூரையில் ஓட்டை ஏற்பட்டிருப்பதையும் ஒரு பெரிய மாங்காய் அளவு கல் நான்கைந்து துண்டுகளாக சிதறிக்கிடப்பதையும் கண்டார். விண்கல்லாக இது இருக்கலாம் என்றெண்ணிய அவர் வொஷிங்கடன் ஸ்மித்தோனியன் ஆய்வு நிலையத்துக்கு இக்கல்லை அனுப்பி வைத்தார். கல்லை ஆய்வு செய்த விஞ்ஞானிகள், ஆச்சரியமடைந்தனர். ஏனெனில் 4.5 பில்லியன் வருடங்களுக்கு முன்னர் சூரிய குடும்பம் உருவாகுவதற்கு காரணமாக இருந்த தூசி மேகத்தில் உருவான கல் இது என்பதை அவர்கள் கண்டறிந்ததே இந்த வியப்புக்கு காரணம். எப்படியோ பூமியின் வளிமண்டலத்துக்குள் பிரவேசித்து மணிக்கு 350 கி.மீ வேகத்தில் கூரையை பொத்துக்கொண்டு தரையில் விழுந்திருக்கிறது இந்த கல். இப்போது இக்கட்டடத்தின் உரிமையாளர் தன் வீட்டில் இந்தக்கல் விழுந்ததால் தனக்கே இது சொந்தம் என்று பிடிவாதம் பிடிக்கிறாராம். மருத்துவரோ, உனக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம், ஸ்மித்தோனியனிலேயே இருந்து விட்டுப்போகட்டும் என்றார்..!



சில செடிகொடிகளை கையாளும்போது அடிக்கடி தும்மல் எடுக்கும். பின்னர் நாசி ஒழுகும். கை கால் அரிப்பு எடுக்கும். இதற்கு காரணம் அவற்றில் உள்ள கண்களுக்கு புலப்படாத நுண்ணுயிரிகள். இங்கே நீங்கள் காண்பவை, சில தாவர மகரந்தங்களில் காணப்படும் உங்களை தொந்தரவுபடுத்தக்கூடிய நுண்ணியிர்களின் பெரிதாக்கப்பட்ட தோற்றங்களே



நன்றி: டிஸ்கவரி



கோழிகளுக்கு பற்கள் உள்ளனவா? உண்டு என்கிறார்கள் ஆய்வாளர்கள். 150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் கோழியின் மூதாதை உலகில் வாழ்ந்தது. இக்கோழிகளுக்கு இறகும் நகங்களும் கூடவே சொண்டு நிறைய கூர் பற்களும் இருந்தன. பாறைப்பதிவுகளில் இருந்து இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பின்னர் பற்கள் முளைப்பது குறைந்து போனதாம். கோழிகளின் மரபணு கட்டமைப்பில் பற்களுக்கான இடம் இருக்கிறது. இப்போதும் சில பல் முளைத்த கோழிகள் இருக்கத்தான் செய்கின்றன என்கிறர்கள் ஆய்வாளர்கள்.



மங்காத்தாவில்
அஜித், த்ரிஷா

Printed and published by ANCL No: 35, D.R.Wijewardena Mawatha, Colombo-10 on September, 2011.